
# ஜீவநதி

14

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



கலை இலக்கிய இருதிங்கள் ஏடு

புரட்டாதி – ஐப்பசி 2009

60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUPER MARKET

**சகல விதமான மின்சார உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்**



* Radio உதிரிப்பாகங்கள்



* Bulb வகைகள்
* குழந்தைகளுக்கான Video games




* மணிக்கூடு வகை



* Antena



* மின்சார உதிரிப்பாகங்கள்





**அனைத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்**

பிரதான வீதி,
நெல்லியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நதியின் உள்ளே...

## கவிதை

கெக்கிராவ ஸஹானா
[illegible]
[illegible]
[illegible]
த. கோபிநாத்
வேல். நந்தகுமார்
[illegible]

## கட்டுரை

[illegible] சந்திரபோஸ்
[illegible] ஆனந்த்
[illegible] சுப்பிரமணியம்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
மேமன்கவி

## சிறுகதை

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

## நேர்காணல்

டொமினிக் ஜீவா

## நூல் விமர்சனம்

வெற்றிவேல் துஷ்யந்தன்

## அட்டைப்படம்

நன்றி இணையம்

## கலை இலக்கிய நிகழ்வு

## பேசும் இதயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

நதி 03 கிளை - 02



**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறைஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய்
இலங்கை.

**தொலைபேசி** : 0775991949
0778134236

E-mail : jeevanathy@yahoo.com

Fax : 0212263206

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
HNB - Nelliady Branch
A/CNo.118-00-02-0945701-1


இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- *ஆசிரியர்*

## ஜீவநதி

(கலை இலக்கிய இருதிங்கள் ஏடு)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

### மனித விழுமியங்களைப் பேணுவோம்!

இன்று மனிதம் அல்லற்பட்டு, அவலப்பட்டு, மதிப்பிழந்து மரணித்துக் கொண்டிருக்கின்றதே என்ற கவலை எம்மில் பலருக்குண்டு. விஞ்ஞான - தொழில்நுட்ப -இலத்திரனியல் வளர்ச்சியானது மனித வாழ்வைச் சிக்கலான தாக்கி, அவசரப் போக்கைத் தோற்றுவித்துள்ளது. நின்று நிதானித்து, சிந்தித்துப் பார்க்கும் மனித ஆற்றல் அருகிக் கொண்டே செல்வதும், எவ்வழியிலேனும் பணம் சம்பாதித்து விடவேண்டும் என்பதே வாழ்க்கைக் குறியாக இருப்பதும், குறுக்கு வழியில் வெற்றி காண விழைவதும், வன்முறைகள் வெடித்து வன்முறைக் கலாசாரம் மேலோங்குவதும்... என விரிவடையும் பல்வேறு நிலைப்பாடுகள் மனித வாழ்வுக்கும் மனிதாயதப் பண்பின் பேணுகைக்கும் பல அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளன. இதன் பேறாய், அன்பு, இரக்கம், பொறுமை, விட்டுக் கொடுத்தல், சகோதரத்துவம் போன்ற மனிதாயப் பண்புகளும் விழுமியங்களும் கேள்விக் குறியாக்கப் பட்டுள்ளன; வேதனையும் விரக்தியுமே வாழ்வின் எச்சங்களாகக் கொள்ளப் படுகின்றன. இந்நிலை மாற வேண்டும். மனித குலம் ஆக்கப் பாதையில் காலடி எடுத்து வைத்து, மனிதத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும். மனித மாண்புகளை மதித்து, மனிதர் அனைவரிடத்தும் மனிதாயதப் பண்புகளை வளர்ப்பதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இது முயற்கொம்பாகத் தோன்றினும், முயற்சித்தால் முடியாத தொன்றில்லை. இம்முயற்சியில் கலை இலக்கியங்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டுமெனின், மனித விழுமியங்களை முதன்மைப்படுத்தும் படைப்புகள் ஆக்கம் பெற வேண்டும். மனிதம் துளிர்விட, எமது கலை இலக்கியங்கள் நேரான சிந்தனையை வாசகர்களி டத்துத் தோற்றுவிக்க வேண்டும். அது மனிதத்தை வாழ்விக்கும்!

- *ஆசிரியர்*


**'ஜீவநதி' சந்தா விபரம்**

தனிப்பிரதி 60/= ஆண்டுச்சந்தா - 600/= ஆயுள் சந்தா -10000/=ஓராண்டுக்கு உரிய சந்தா செலுத்த விரும்புவோர், காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்\ முகவரி

**K .Bharaneetharan**
**Kalaiaham**
**Alvai North west**
**Alvai.**

வங்கி மூலம் சந்தா பணம் செலுத்த விரும்புவோர் - **K.Bharaneetharan HNB - Nelliady.**

சேமிப்பு கணக்கு இலக்கம் -118-00-02-0945701-1என்ற வைப்பில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். வெளிநாடு ஓராண்டுக்கு சந்தா $25 (us)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. நவம்

# வெள்ளைப்புறா ஒன்று...!

மனசு குதூகலிக்கிறது!

'யுரேக்கா' எனக் கூவியபடி அது நிர்வாணமாகக் குதித்தோடியது.

இளங்காலையில் மொட்டவிழ்ந்த ரோஜா முகம் - அதிலிருந்து திருட்டுத்தனமாக என்னையே ஆலிங்கனம் செய்யத் துருதுருக்கும் இரண்டு கண்கள் என்ற பொன்வண்டுகள் - பொன்னை உருக்கி உச்சந்தலையில் வழிந்தோட வார்த்தாற் போன்று பளம் பளமாகப் பளபளக்கும் கழுத்தளவேயுடைய காந்தக் கூந்தல் - இவை யாவும் சேர்ந்து என் நிஷ்டையைக் குழப்பிவிட்டன.

'வாழ்நாள் பூராவும் அந்த அழகு தேவதையின் கடைக்கண் கடாட்சத்திற்காக, அவளது காலடியில் ஆயுட்கைதியாகவே கட்டுண்டு கிடக்கலாம்'

மனசு அங்கலாய்க்கிறது!

அந்த வெள்ளைக்காரப் பெண் புறாவின் நாணம் ததும்பும் கண்ணொளிகையை எதேச்சையாகக் கண்டுகொண்ட கணம் முதலாக என் இதயம் பீரங்கியாய், அவளுக்கான அடையாள அணிவகுப்பு மரியாதை வேட்டுக்களைத் தொடர்ந்தும் தீர்த்துக்கொண்டே இருக்கிறது.

"சீ... சீ... மனமே, நீ திருந்தவே மாட்டாயா?"

மனசின் கீழ் மாடியிலிருந்து யாரோ கறுகறுப்பது போன்று ஓர் அசுகை.

நான் கனடாவில் கரையிறங்கி, ரொறொன்ரோவில் நிரந்தரமாக நங்கூரமிட்டு மூன்று மாதமாக வில்லை. இந்த 'ஈட்டன்ஸ் ஷொப்பிங் கொம்ப்ளெக்சுக்கு' இன்று இரண்டாவது தடவையாக வந்திருக்கின்றேன்.

முதல் முறை என்னை இங்கு கூட்டி வந்து, மாரிகால அட்டைகள் போல சதா மேலும் கீழுமாக ஊர்ந்து கொண்டு இருக்கும் தானியங்கி மாடிப்படிகளில் என்னை ஏற்றி இறக்கி 'கடை காட்டப் போன' என் நண்பன் இன்று வரவில்லை.

உலகிலுள்ள அனைத்து ஆடம்பரப்பொருட்களும் இந்த ஈட்டன்ஸினுள் அடக்கம் எனலாம். அந்தளவு பிரமாண்டமானது!

கனடிய அரசாங்கம் மாதாந்தம் அளந்து தரும் 'வெல்ஃபெயர்' பணத்தில் ஒட்டுவேலைச் சீவியம் நடத்தும் இந்த நாட்களில் நான் ஈட்டன்ஸில் 'ஷொப்பிங்' செய்ய நினைத்ததற்கும், ஏழைச் சோமாலிப் பையன் ஒருவன் 'சொக்லேட்' வாங்கிச் சாப்பிட ஆசைப்பட்டதற்கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லை!

ஏதோ உபயோகமுடையதுகளுக்குள் விலை குறைந்தது ஏதாவது தட்டுப்படாதா என்ற ஆசையில், நுணிமணிகளுக்கு நடுவே சுழிபோடக்கொண்டிருந்த என்னை நோக்கி... மறுபடியும்... மறுபடியும்... அதோ, பெண்கள் பகுதியில் நிரை நிரையாகத் தொங்கிக்கொண்டிருக்கும் ஆடைகளினாலான வேலி இடுக்குகளின் ஊடாக அவள்...

விழிகளால் என்னை விசாரித்தாள்!

சொல்லுக்குள் அகப்படாத இன்பக் கிளுகிளுப்புடன், நெஞ்சுக்குள் இலேசான படபடப்பு! ஒரே நேரத்தில் என் காதுக்குள் ஓராயிரம் உடுக்கைகள்!

அருகாக சுவரில் பொருத்தப்பட்டுள்ள ஆளுயர நிலைக் கண்ணாடியில் தெரியும் என் மாயவிம்பம் ஆய்வுக்குட்படுகிறது.

அகதிகளுக்கே உரிய, அவநம்பிக்கை தோய்ந்த பயப்பிராந்தியையும் மீறி என் முகத்தில் 'அறிவு ஜீவித்தனம்' ஏதாவது பளிச்சிடுகின்றதோ? வாளிப்பான என் உடலின் வாலிப முத்திரைகளில் தன்னைப் பறி கொடுத்திருப்பாளோ? ஏன், பூர்வ ஜென்ம பந்தம் கூடக் காரணமாயிருக்கலாம் தானே?

விருப்பம் துளிர்ப்பதற்கான காரணங்கள் வேடிக்கையானவை! சில வேளைகளில் விநோதமானவையும் கூட!

"முட்டாள்! கண்டதும் காதல் கனடாவிலும் சாத்தியம் என்று நினைப்பியோ, உனக்கு?"

மனசுக்கடியிலிருந்து வரும் எச்சரிக்கையா? அல்லது பொறாமையா?

என் மனவீட்டுக்குள்ளேயே எனக்கு எதிரி வேறு!

நீலவான் ஆடைக்குள் முகம் புதைத்து நின்று, நிலவென்று அழகுகாட்டும் அவளது சுடர் விழிகளின் யாசிப்புக்கு வேறு என்னதான் அர்த்தமோ?

உடுப்புத் தேடும் பாவனையில் இப்போது என் கால்கள் அவளைத் தேடுகின்றன. நான் கிட்ட நெருங்குவதை உணர்ந்து கொண்டாளோ என்னவோ, அவள் எட்ட எட்ட ஓடி, ஆடைகளின் வரிசைகளுக்குள் ஒளிந்துகொண்டு இடம் பிடிக்கின்றாள்.

"இந்த நாட்டிலை, ஒருவளை இன்னொருவனுக்குப் பிடிக்கக் கொண்டால் நேரடியாய்ப் பேசி, ஒரு 'டேட்டிங்' ஒழுங்கு செய்து, ஒரு 'பார்' அல்லது ஒரு சினிமாப் படத்துக்குப் போய், தனிமையில் சந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளையாள் குளிப்பாட்டி, பின் ஆடிப்பாடி, வேண்டின மாதிரி அனுபவிச்சுப் போட்டு, அடுத்த நாளே விட்டிடலாம் - விருப்பமெண்டால் தொடரலாம். ஊரிலை வருசக் கணக்காக வேர்க்க விறுவிறுக்க சையிக்கிள் சீட்டிலை உழுந்தரைச்சு, அலைஞ்சு திரிஞ்சு சரக்குச் சுழட்டின மாதிரி இங்கை செய்யத் தேவையில்லையடாப்பா"

நான் இங்கு வந்து சேர்ந்த புதிதில் அனுபவசாலியான என் நண்பன் முன்கூட்டியே என் காதில் போட்டுவைத்த புத்திமதி.

இத்தனைக்கும் மாறாக இவளிடத்தில் மட்டும் எப்படி எங்கள் தமிழ்த்தனம் புகுந்து கொண்டதோ? இங்குமா காவியப் பாங்கில் கண்ணோடு கண்ணோக்கல்? இப்போதுமா? இவளிடத்திலுமா?

வந்த நோக்கம் திசைமாறி, நான் இப்போது அவளைத் தேடுகிறேனா? பெட்டிப் பாம்பாக அடங்கி ஒடுங்கியிருந்த ஓமோன்களைச் சீண்டி வேடிக்கை காட்டுகிறாளா, இந்தச் சிங்காரி?

மழைக்கால மின்னலாய்த் தோன்றி மறைந்தும், மறைந்து தோன்றியும் என்னை அலைக்கழித்துக் கண்ணாமூச்சி விளையாடுகிறாள்.

ரொம்பவும் பிடிவாதக்காரியாக இருப்பாளோ?

பிடிவாதக்காரிகளைத் தான் எனக்கும் வெகுவாகப் பிடிக்குமே!

'ஒன்று மட்டும் நிச்சயம். ஏதோ ஒரு விதத்தில் நான் இவளுக்கு மிகவும் தேவைப்பட்டவனாகிவிட்டேன். நான் இங்கிருந்து வெளியேறும் போது இவள் என்னைப் பின்தொடர்ந்து வருகிறாளா பார்ப்போமே'. மனசு தனக்குள் மெதுவாகச் சொல்லியது.

'காஷ் கவுண்டர்' அருகே 'பெர்ஃபியூம்' பகுதியில் 'சாம்பிள்' ஆக வைக்கப்பட்டிருந்த புட்டியை எடுத்து எனது ஜக்கெட்டுக்கு விசிறியடித்தேன். ரம்யமான 'கல்வின் கிளெய்ன் - ஒப்ஸெஷன்' வாசனை மயக்கத்தில் மீண்டும் அவளைத் தேடிக் கண்கள் சுழல்கின்றன.

அவள் என்னை ஏமாற்றவில்லை. அதோ, சுழல் தாங்கிகளில் தொங்கும் 'ஸ்வெட்டர்'களுக்கு நடுவே நின்று என்மீது கடைக்கண்ணால் கணை தொடுக்கிறாள். 'பெர்ஃபியூம்' புட்டியைத் தூக்கிக் காட்டி, அவளுக்கு 'ஸ்ப்றே' பண்ணுவது போல, சின்னதாய் ஒரு சில்மிஷம்!

தோளில் தொங்கப்போட்டிருந்த 'ஹாண்ட் பாக்'கினால் தன் முகத்தை மூடியபடி நாணத்தால் முறுவலித்துப் பின் மீண்டும் மறைந்துகொள்கிறாள்!

நான் புறப்படத் தயாரானேன்.

நான் எனக்கெனத் தெரிவு செய்த ஒரேயொரு 'ரீஷேட்'டைக் கவுண்டரில் கொடுத்துப் பணம் செலுத்துகின்றேன்.

மனசு என்னவோ இன்னமும் அவளைத் தேடி அலைகிறது!

'ஈட்டன்ஸ் பாக்' ஒன்றினுள் ரீஷேட்டையும் 'றிஸீட்'டையும் போட்டு மிச்சச் சில்லறைகளை என் கையில் திணிக்கும் போது, "ஈட்டன்ஸில் ஷொப்பிங் செய்தமைக்கு நன்றி" என்று 'காஷியர்' சிட்டு உதிர்த்த வார்த்தைகள் கூட இலேசாகத் தான் காதில் விழுகிறது. ஆர்வமற்ற நன்றிச் சிரிப்புடன் வாசலை நோக்கி அடியெடுத்து வைக்கின்றேன்.

என்ன அதிசயம் இது!

என்னைச் சுற்றிச் சுழன்ற அந்தச் சுந்தரி, எங்கிருந்தோ பறந்து வந்து என் கையைப் பற்றிக்கொண்டாள்.

இதயம் ஒரு கணம் தரித்துத் துடித்தது!

ஆவெனத் திறந்தவாறு அணிந்திருந்த என் 'ஜாக்கட்' சற்று பொருமியிருக்கத் தக்கவாறு, உள் பையினுள் சொருகி வைத்திருந்த 'வின்ரர் க்ளவுஸ்' சோடியை அவள் வெளியே எடுக்கும்படி கட்டளையிட்டாள்.

கட்டளைக்கு அடிபணியும் இயந்திரமாய், எடுத்து நீட்டுகின்றேன். அவற்றை மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்க்கிறாள்.

"என்ன செய்கிறாய் நீ?"

இறுகி உறைந்து போன என் முகத்தைப் பார்த்தே, என் கேள்வியை அவள் ஊகித்திருக்க வேண்டும்.

தனது 'ஹாண்ட்பாக்'கிலிருந்து அட்டை ஒன்றை எடுத்து என் முகத்துக்கு நேராகப் பிடித்தாள்.

அவளது அழகான படத்துக்கு அருகாகப் பெயரும் பதவியும் பொறிக்கப்பட்ட அடையாள அட்டை, அது.

'ஈட்டன்ஸ் களவு தடுப்பு அதிகாரி'

எலும்பை உறைய வைக்கும் இந்த 'வின்ரர்' குளிரிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது.

மூன்று மாதமாக நான் பாவித்து, புதுமெருகை இழந்துபோன குளிர்க் கையுறையான எனது 'க்ளவுஸை'ப் பார்த்தவுடனேயே அவளுக்கு உண்மை தெளிவாகிவிட்டது.


ஆனாலும் "நான் உனக்காக வருந்துகின்றேன்" என்று சிறு மன்னிப்புக் கோரல்கூடக் கிடையாது.

எனது பழைய 'க்ளவுஸை' என் கைகளுக்குள் திணித்துவிட்டு, தொடர்ந்தும் இன்னொரு நிறத்தோலைத் தேடி வலைவிரிப்பதற்குப் போலும், உள்ளே நடக்கத் தொடங்கியது, அந்த வெள்ளைப் புறா!

என் மனசின் கீழ்மாடியிலிருந்து யாரோ ஈனமாய் அழுதபடி...!

கூடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அத்தனைபேர் கண்களிலும் ஓர் அற்ப ஜந்துவாய்க் கூனிக் குறுகிச் சமைந்து போய் நிற்கிறேன், நான் ! □□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மானுடம் பாடிய பாரதி

- எஸ். சந்திரபோஸ்

சுப்பிரமணிய பாரதியார், மானுடன் என்று குறிப்பிடும் பொழுது, உயர்மனிதன், அப்பழுக்கற்ற மனிதன், பண்பட்ட மனிதன், வாழ்வாங்கு வாழும் மனிதன், மானுடம் கைவந்த மனிதன் எனக்குறிப்பிடுகின்றார். நாட்டுமக்கள் நலம் பெற்று வாழ்வதற்காகப் பாடல்கள் பாடிய பாரதியின் நெஞ்சம் நாட்டு விடுதலையை மட்டும் பாடியதுடன் அமையவில்லை. நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கு இடையூறாக இருந்து வந்த பலவகைக் கொடுமைகளை எதிர்த்து அவர் நெஞ்சம் சாடியது.

*"சாதிவேறு பாட்டைத் தாக்கிப்பாடினார்!*<br>
*மூடநம்பிக்கைகளை எதிர்த்து முழங்கினார்!*<br>
*பெண் அடிமைக் கொடுமைகளை எதிர்த்துப் போரிட்டார்!*<br>
*குழந்தைகளுக்கு ஊக்கமூட்டிப்பாடினார்!*<br>
*நடிப்புச் சுதேசிகளை எள்ளி நகையாடினார்!*<br>
*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தார்!"*

இவ்வாறு மானிட சமுதாய நன்மைக்காகப் பாடினார் எனப் பேராசிரியர் மு.வரதராசன் அவர்கள் சாகித்திய பரிசு பெற்ற தனது நூலான தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

பாரதி பலவகையான பாடல்களை பாடினான். பாரதநாடு, தமிழ்நாடு, தமிழ்மொழி, சுதந்திரம், தேசிய இயக்கப்பாடல்கள், தேசியத் தலைவர்கள், பிறநாடுகள், தோத்திரப்பாடல்கள், ஞானப் பாடல்கள், நீதி, சமூகம், தனிப்பாடல்கள், சான்றோர் சுயசரிதை, வசனகவிதைகள் எனப்பாடினான். முப்பெரும் பாடல்கள் என கண்ணன்பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்பாடல் என உயிர்பெற்று எழும் பல புதிய தமிழ்ப்பாடல்களைப் பாடினான். இந்த வகையில் நோக்கும் போது பாரதி பாடாத துறைகளே இல்லை என்று கூறுமளவிற்கு பாரதிதாசன் கூறுவதுபோல்,

*"பைந்தமிழ்த்தேர்ப்பாகன் அவனொரு*<br>
*செந்தமிழ்த்தேனீ, சிந்துக்குத்தந்தை!*<br>
*குவிக்கும் கவிதைக்குயில்"*

ஆயினும் பாடாத பாடல் உண்டென்றால் அது 'தாலாட்டுப் பாடலே 'ஆகும். பாரதி நீடுதுயில் நீங்கப்பாடிவந்த நிலா! ஆகையினால் அடிமை, மிடிமைக்கு ஆட்பட்டு தூங்கிக் கொண்டிருந்த பாரதமக்களை மேலும் தூங்கவைக்கப்பாடாது, துள்ளியெழப்பாடினான். துயில்நீங்கி, அடிமை இருள் அகற்றப்பாடினான்.

*புல்லடி மைத்தொழில் பேணிப் - பண்டு*<br>
*போயின நாட்களுக்கினிமனம் நாணித்*<br>
*தொல்லை இகழ்ச்சிகள்தீர - இந்தத்*<br>
*தொண்டு நிலைமையைத்தூவென்று தள்ளி*<br>
*வந்தே மாதரம் என்போம் - எங்கள்*<br>
*மாநிலத்தாயை வணங்குதும் என்போம்.*

என வீறுகொண்டு, தூங்கிக் கிடந்த பாரதத்தை துள்ளியெழச்செய்தான்.

மனித தர்மமே நல்ல இலக்கியத்தின் அடிநாதம். கம்பன் எழுதிய மகாகாவியத்தைப்பற்றிக் கூறவந்த கால்ரிட்ஜ் (Coleridige) என்னும் அறிஞர்

*'கம்பன் கலைக் கோவிலில்*<br>
*கவிதை நடனத்தில்*<br>
*மானிட ஆர்வம் மலரக் காணலாம்.*

எனக் கூறுகின்றார்.

கடவுளைப் பாடவந்த கம்பர் கூட ஈடு இணையில்லாத மானிட சிகரத்தைத் தொட்டுக் காட்டுகின்றான்.

*...தேறினன், அமரர்க்கெல்லாம்*<br>
*தேவராம் தேவர் அன்றே*<br>
*மாறி இப்பிறப்பில் வந்தார்*<br>
*மானிடராகி மன்னோ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆறுகொள் சடிலத்தானும்*
*அயனும் என்றிவர்களாகி*
*வேறுள குழுவை எல்லாம்*
*மானுடம் வென்றதன்றே!*

என கம்பர் தனது காவியத்தின் நடுநாயகப் பாத்திரமான ராமனால் மானிடத்தின் கொடுமுடியைக் காட்டுகிறான். மனித மாண்பை விண்முட்டத் தூக்கிப் பிடிக்கின்றார்.

இதேபோன்றே பாரதியும் தெய்வம் சம்பந்தமான தோத்திரப்பாடல்கள் பல பாடியுள்ளதனால் பாரதியை ஆன்மிகம் பாடிய கவிஞன், அவனது கவிதைகளில் ஆன்மிகமே விஞ்சிக்காணப்படுகின்றது என வாதிடுவோரும் உண்டு.

ஆன்மிகம் என்பது ஆன்மாவின் விடுதலை என்பது ஆன்மாவைப் புனிதப்படுத்தும் போதனை. இது இறையியல் அருவுருவக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்தது.

பாரதியார் தோத்திரப்பாடல்களைப் பாடிய போதிலும், அவை ஆன்மிகவிடுதலைப் பாடல்களாக அமையவில்லை. அப்பாடல்களும் மானிட விடுதலைக்கும், மானிட நல் வாழ்வுக்கும், மானிட உயர்வுக்கும் தெய்வம் துணையாக வேண்டும் என்றே விண்ணப்பஞ் செய்கின்றன.

*காணி நிலம் வேண்டும் - பராசக்தி*
*காணிநிலம் வேண்டும் - அங்கு...*
*மாடமாளிகைகள்*
*கேணி, தென்னம் சோலை,*
*நிலாவெளி, குயிலின் குரலோசை,*
*தென்றல் , பத்தினிப்பெண்*

வேண்டும் என லௌகீக வாழ்க்கைக்கு வேண்டியவற்றைக் கேட்பதுடன்

*'அம்மா ! நின்றன்*
*காவலுற வேணும் - என்றன்*
*பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப்*
*பாலித்திட வேண்டும்.'*

என்று சாதாரண லௌகீகவாழ்வுக்குரிய இறைபக்தனாகவே காட்சி தருகின்றாரே அன்றி ஆன்மிக வாதியாக அல்ல. அது மட்டுமன்றி,

*ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி*
*அலையும் அறிவிலிகாள் - பல்*
*லாயிரம்வேதம் அறிவொன்றே தெய்வம்*
*உண்டாமெனல் கேளீரோ!*

என்றும்

*செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்*
*சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்*
*பித்தமனிதர் அவர் சொல்லும் சாத்திரம்*
*பேயுரையா மென்றிங்கு ஊதடா சங்கம்!*

எனப் பகுத்தறிவு வாதக் கருத்துகளை தனது கவிதைகளில் விதைத்துள்ளார்.

பொய்யோ? மெய்யோ?என உலகத்தை நோக்கி வினவும் பாரதி

*'நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே -*
*நீங்களெல்லாம்*
*சொற்பனந்தானோ? பலதோற்ற*
*மயக்கங்களோ?*
*கற்பதுவே! கேட்பதுவே, கருதுவதே*
*நீங்களெல்லாம்*
*அற்பமாயைகளோ? உம்முள் ஆழ்ந்த*
*பொருளில்லையோ?..*

எனக்கேட்கும் பாரதி பாடலின் நிறைவாக

*காண்பவெல்லாம் மறையுமென்றால்*
*மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?*
*வீண் படுபொய்யிலே - நித்தம்*
*விதிதொடர்ந்திடுமோ?*
*காண்பதுவே உறுதி கண்டோம்*
*காண்பதல்லால் உறுதியில்லை*
*காண்பது சக்தியாம் இந்தக் காட்சி நித்தியமாம்.*

என இயற்கைச் சக்தியையும், பொருள் முதல்வாதக் கருத்தினையும் மானிடத்தின் மலர்வுக்கு முன்மொழிகின்றார்.

முப்பெரும் பாடல்களான கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டுப் போன்றவையும் மானிட உறவுகளையும் மானிட விடுதலையையுமே வேண்டி நிற்கின்றன. கண்ணனை அமானுடப் பாத்திரமாக பாரதிபடைக்காது, கண்ணனைத் தோழனாய், தாயாய், தந்தையாய், சேவகனாய், சீடனாய், சற்குருவாய், குழந்தையாய், விளையாட்டுப் பிள்ளையாய், காதலனாய், காதலியாய் எனப் பல்வேறு மானிட உறவுகளில் வைத்துப் பாடி ஈற்றில் தெய்வமாகக் காண்கின்றார். மானிடவாழ்வு சிறக்க தெய்வம் உதவவேண்டும் எனப்பாடுவதன்மூலம் மானிட நேயமே பாரதியின் உயிர் மூச்சானது.

பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி தமது முன்னுரையில் "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை யுடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோன் தமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்" எனக்கூறுவதன் மூலம் அவரே தமிழ் மொழிக்குப் புத்துயிர்தருகின்றார். வியாசர் பாடிய பாரதத்தின் ஒருபகுதியைப் பாரதிபாட முனைந்ததே அவர் வாழ்ந்த காலத்தில் பாரததேசம் இருந்தநிலையினையும் பாரத மக்கள் இருந்த நிலையினையும் பாரதமக்களுக்கு உணர்த்தி மக்களை வீறு கொண்டு எழுந்து வீரசுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்வதே ஆகும். துரியோதனன் சபையில் பாஞ்சாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச்சாதனனால் துகில் உரிந்தமை பாரததேசத்தின் நிலையையும், அதனைப் பார்த்தும் வாழா இருந்த பாண்டவர் நிலையினை பாரததேச மக்களுக்கும் உவமித்துப் பாடியுள்ளார். இவை கூட மானிட விடுதலைக்கே முதன்மை கொடுத்துபாரதி பாடியுள்ளார்.

பாரதி தனித்துப் பாரததேசமக்களுக்காக மட்டும் பாடிய கவிஞன் அல்ல. உலக மக்களின் விடுதலைக்காகவும் பாடினான். இத்தாலிநாட்டின் எழுச்சிக்கும், ஐக்கியத்திற்கும் குரல் கொடுத்தான், பெல்ஜியத்தின் சுதந்திரத்திற்கு வாழ்த்துப் பாடினான், "ஆகாவென்றெழுந்ததுபார் யுகப்புரட்சி!" என புதிய ருஷ்யாவை வரவேற்றுப் பாடினான். பிஜித்தீவினிலே கரும்புத்தோட்டத்திலே தொழிலாளர்படும் வேதனைகளுக்காக இரங்கிப் பாடுகின்றார். இவ்வாறு உலகளாவிய மானிட விடுதலைக்கு உரத்த குரல் கொடுத்த மகாகவியே பாரதியார் ஆகும்.

சமூக மாறுதல்களுக்கு ஏற்ற வகையில் வளைந்து கொடுக்கும் தமிழ் மொழியின் ஆற்றல் பாரதியின் உணர்ச்சிப் பெருவெள்ளத்திற்கு வடிகால் ஆகியது. இதுவே நாட்டுவிடுதலை, பெண்விடுதலை, சமூகத்தளைகளிலிருந்து விடுதலை, மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை, என்பவைகள் மூலம் மனிதம் பாடிய பாரதிமூலம் தமிழ்க் கவிதையும் விடுதலை அடைந்து வீறுநடைபோடுகின்றது.

மனிதனுக்கான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மொழி, கலை, இலக்கியம், பொருளாதாரம், அறிவியல் என்பனபோல் ஆன்மிகமும் மனிதம் உந்நதம் அடைவதற்கே! ஆகவே பாரதி ஆன்மிகம் பற்றியும் தனது கவிதைகளில் தொட்டுச் சென்றிருக்கின்றார். அவை எல்லாம் மானிடத்தின் உயர்வுக்கும் மகிமைக்கும் சிறப்புக்குமே! ஆகவே பாரதியின் பாடல் களில் விஞ்சி நிற்பது மானிட நேயமே ஆகும். □□□

## ஒரு தெருவும் சில பச்சை வீடுகளும்



**கெகிறாவ ஸஹானா**

குப்பைகள் இழுத்துக் குதறப்பட்ட வீதிகளின்
தூசிச் சுழல் மேலே படர்ந்து
நாசியின் உறுதியை சரிபார்க்கிறது.

வெட்டப்பட்டுப் பாறிக் கிடக்கும்
இதுவரை நிழல் தந்த மரத்தின்
அடித்தண்டிலிருந்து
கண்ணீர் சொரிகின்றது.

மரமாய், குலையாய், இளநீராய்க் காய்த்த
தென்னை மரம் ஒன்று
யாரோ ஒருவனின்
புதுவீட்டு அத்திவாரத்தின் முன்னால்
துண்டு துண்டாய்
எரிந்து கிடக்கிறது,
தோற்றுப்போன சினிமா வில்லனின் பதுங்கிடம்
போல.
Shopping bagகளுக்காக
வைக்கப்பட்ட நெருப்பின் மேலே
கனி தூங்கும் கொய்யா மரத்தின் கிளை
வாடிக் கருகிக் கிடக்கிறது
செய்யாத பாவத்தை அனுபவிக்கும் நிரபராதியாக.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நேரத்தில்
ஒவ்வோரிடத்தில்
வைக்கப்படும் தீ
வானம் வரை நழுவுவதாக பேய்க்காட்டி
இறுதியில்
என் வீட்டு ஜன்னலுக்குள் நுழைகிறது
ஒரு கள்வனைப் போல.
வேலியோரமாக எட்டிப் பார்ப்பதால்
எப்பவும்
பெரியவர்களின் கை வீச்சுக்கும்,
சிறியவர்களின் கல் வீச்சுக்கும்,
வாகனங்களின் தலை வீச்சுக்கும்
ஆளாகும்,
பூப்பூத்த என் மாமரம்.

செம்மண் காவியுடை போர்த்து
தவம் செய்யும் என் வீதிச் செடிகள்
'என்னைக் கழுவேன்' என்று
வானத்தைக் கெஞ்சுகின்றன.

தொலைக்காட்சியும் செல்லிடப்பேசியும்
சினிமாவும் பாட்டும்
இலத்திரனியல் பின்னல்களும்
குறிபார்த்து விரித்த வலையில்
சிக்கித் தவிக்கிறது
திசையறியா பிஞ்சுகளின் எதிர்காலம்.

எதிலுமே கறை படாத வெள்ளி நிலா
ஒளித்துச் சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நோக்கற்ற இலக்கிய உருவாக்கங்கள் உப்புச் சப்பற்றவை

பிரகலாத ஆனந்த்

ஒரு இலக்கிய படைப்பின் உன்னதம் அதன் ரசனை ஈர்ப்பை விட, சமூகப் பயன் பாட்டிலேயே தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. படைப்பு ஒன்றின் வகிபாகமானது வாசகனின் சுவைக்கு விருந்தளிப்பதுடன் மட்டும் நின்று விடாது. அவனது வளர்ச்சிக்கும் மனிதாபிமான நோக்குக்கும் தீனி போடுவதாக அமையும் போதே அப்படைப்பின் அறுவடை உச்சம் பெறுகிறது.

ஒரு படைப்பாளியின் அனுபவம், சமூகப் பிரக்ஞை, உத்தித்திறன் என்பனவற்றின் கலவையில் படைப்புருவாக்கம் எய்துகிறது. தரமான இலக்கியம் உருப்பெறுவது, மேற்கூறிய மூன்று அம்சங்களும், குறித்த அளவுப் பரிமாணத்தில் கலவை எய்தும் போதே சாத்தியமாகின்றது. அனுபவ அம்சம் மிகையாக துலங்கும் படைப்புகள், பல சந்தர்ப்பங்களில் வாசகனின் அனுபவத்திற்கு எட்டாததாக ஆகிவிடு கின்றது. இது சுயசரிதைப் பாங்கான படைப்பாகவும் உருவாக்கம் பெற்று விடுவதுமுண்டு. எனினும் படைப்பாளி, சுவைஞன் இருவரினதும் அனுபவங்கள் ஒத்ததாக இருக்கும் போது இவை விரும்பிப்படிக்கப் படுவதுமுண்டு. உதாரணமாக காதல் கதைகளை குறிப்பிடலாம். உண்மையிலேயே படைப்பாளி ஒருவரினது பல்வகை அனுபவங்களில் குறித்த சில வகை அனுபவங்கள் மட்டுமே படைப்பு நிலைக்கு அவசியமானவையாகும். ஒரு கலை இலக்கிய படைப்புக்கு அடிப்படையான விடயம் அனுபவம் தான். ஆனாலும் இந்த அனுபவம் என்பதும் சுய அனுபவம் மட்டுமன்றி சமூகவாழ்வில் பெற்ற பட்டறிவும், பிறரின் வாழ்வியல் அனுபவங்களும் உள்ளடக்கப்பட்டவை தான். அனுபவங்களை தன் வயமாக்கி உணரும் மனப்பக்குவ உணர்வே படைப்புகளை உருவாக்க உந்துகின்றன. ஒரு இலக்கியப் படைப்பாளியால் சில வேளைகளில் எழுதாமல் இருக்க முடியாத நிலையிலே படைப்புகள் உதிக்கின்றன. இவ் அனுபவ வெளிப்பாட்டிற்கு படைப்பாளியின் அறிவோ, கல்வியோ முக்கியமானவையல்ல.

படைப்புருவாக்கத்திற்கு முழுமை எய்தலுக்கு தேவையான ஏனைய இரு அம்சங்களான சமூகப்பிரக்ஞை, உத்தித்திறன் என்பவற்றிற்கும் அறிவுக்கும் நிறையவே தொடர்புண்டு. சமூகச் சூழலின் இயங்கு நிலை பற்றிய படைப்பாளியின் அறிவு, சமூக உலக சூழல்பற்றிய தெளிவை ஏற்படுத்தி அவனது பார்வைப் பரப்பை விரிவடைய வைக்கிறது. இந்த சமூகப் பிரக்ஞை அல்லது உலக நோக்கு படைப்புக்களுக்கான உந்து சக்தியாக அமைகிறது.

மேற்கூறிய இரு அம்சங்களுடன் உத்தித் திறன் என்பது படைப்பாக்கத்தின் உருவக்கட்டமைப்பு, மொழிநடை, அழகியல் சார்ந்த ஏனைய நிலைகளைத் தீர்மானிப்பதுடன் படைப்பை முழுமையுற வைக்கிறது. உத்தித்திறன் மூலமே உணர்த்துமுறைத்திறனை படைப்பாளி பெறுகின்றான். ஒரு படைப்பாளி செதுக்கிய படைப்பினது வெற்றியினை முன்கூறிய மூன்று அம்சங்களின் சிறப்பான அளவான கலவையே தீர்மானிக்கின்றன.

உலக நோக்கு அல்லது சமூக நோக்கு, படைப்புக்கான அனுபவத்தின் பயன்பாட்டு நிலையை தீர்மானிக்கும் அதே வேளை, உத்தித்திறன் அவ் அனுபவத்தின் மொழிசார் தோற்றத்தையும் உருவை யும் கட்டமைக்கின்றது எனலாம். சமூக நோக்கு மிகையாகும்போது படைப்பின் ரசனைத் திறன் பின்தள்ளப்பட்டு, பிரச்சாரமாக ஓங்கி விடுகின்றது. அதுபோலவே உத்தித்திறனில் அதீத கவனம் செலுத்தும்போது படைப்புருவாக்கம் பயன்பாடற்ற தாகவும் மாறிவிடும் அபாயமும் உண்டு.

எது எப்படியோ, முதலில் ஒரு இலக்கியப் படைப்பானது வாசகனை, குறிப்பாக சாமான்ய வாசகனை எட்டவேண்டும். அவனுக்குப் புரியும் படி அமைந்திட வேண்டும். படைப்பாளியின் அதிமேதா வித்தனத்தையோ, மொழியறிதிறனையோ வெளிக் காட்டுவனவாக இல்லாமல் வாசகனின் பகிர்வை எட்டுவனவாக அமைய வேண்டும். இலகுவான மொழிநடை, வாசிப்புத்திறனை ஈர்க்கும் உருவமைப்பு, மனதை ஈர்க்கும் அனுபவப் பகிர்வு என்பன கவனத்தில் கொள்ளப் படவேண்டும். புதிய புதிய களங்களும், மானிட ஈடேற்றத்திற்கான புதுப் புது அம்சங்களும், பயன்மிகு வரலாற்று அம்சங்களின் வெளிப்பாடுகளும் படைப்புகளை மெருகூட்ட வல்லன. அத்துடன் பயன்பாட்டு அம்சங்களையும் அடைவு கொள்ளவைக்கின்றன.

படைப்பு படைப்பாளிக்காக அல்ல. படைப்பு எப்பொழுதுமே சுவைஞனின் சொத்து என்றால் அது மிகையாகாது. □□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் ஏழைகளும் இருக்கிறார்கள்; பணக்காரர்களும் இருக்கிறார்கள்; உழைப்பவர்கள் இருக்கிறார்கள்; பிறர் உழைப்பைச் சுரண்டுபவர்களும் இருக்கிறார்கள். வரலாறு தங்களைக் கடந்து போவதைப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். வரலாற்றையே படைப்பவர்களும் இருக்கிறார்கள்; இப்படியாக இரு கூறாகப்பிரிந்து நிற்கும் சமுதாயத்தில் கலை இலக்கியப் படைப்புகளும் இருகூறாகப் பிரிந்திருக்கின்றன. பாட்டு, இசை, நடனம், நாடகம் என்பவற்றிலும் இந்தப் பாகுபாடு உண்டு.

பரதநாட்டிய சாஸ்திரத்தில் கூறியிருக்கிறபடி பத்மா சுப்பிரமணியம் அற்புதமாக அபிநயம்பிடித்து ஆடியிருக்கிறார். பரதநாட்டியத்தின் நுணுக்கம் தெரிந்தவர்கள் அதை ரசித்துப் பார்த்திருக்கிறார்கள். எம்.எஸ்.சுப்புலட்சுமியின் குரல்வளமும், சங்கீத ஞானமும் இசைப்பிரியர்களை வேறொரு உலகத்தில் சஞ்சாரம் செய்யவைக்கிறது. அரிச்சந்திரமயான காண்டத்தில் நடிகமணி வைரமுத்துபாடும் காட்சியில் ஊரவர்கள் எல்லோரும் மெய்மறந்து போவார்கள்.

# நாட்டார் இயல்



**த. சிவசுப்பிரமணியம்**

ஒரு சமுதாய வரலாற்றில் இந்த இரண்டு வகையான போக்குகளும் இணைந்தே வருகின்றன. இதில் ஒன்று உயர்வானது. இன்னொன்று தாழ்வானது என்றெல்லாம் பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. இந்தப் போக்குகளை பெருமரபு, இணைமரபு என்று அழைப்பார்கள்.

பெருமரபு என்பது கற்றறிந்தோர் போற்றி வளர்ப்பது. அவை எழுத்து வடிவில் பெரும் பாலும் நகரம் சார்ந்து வளர்வது. இணைமரபு என்பது கல்லாத பாமரர் வாய்வழியாகப் பிறந்து வளர்ந்து வாய்மொழியாகவே பரவுவது. பெரும்பாலும் கிராமப்புறம் சார்ந்து வளர்வது. இதற்கு எழுத்துவடிவம் ஏற்பட்டாலும் எழுத்துவடிவத்தையும் தாண்டிய வளர்ச்சியும் உண்டு. இதை நாட்டார் இயல், நாட்டுப்புறவியல் என்று அழைப்பார்கள்.

இசை, பாட்டு, நாடகம், கூத்து என்பவை பிறக்கும் சமூகத்துக்குத் தக்கபடி வேறுபட்ட வடிவங்களைக் கொண்டிருந்தாலும் கதைகள் சொல்லுதல், சடங்குகள் செய்தல் என்பவற்றில் இந்தவேறுபாடு அதிகம் காணப்படாது. இந்தியாவில் ஒவ்வொரு சமூகத்திற்கென்றும் தனிப்பட்ட மரபுகள், பழக்கவழக்கங்கள், கதைகள், கலைவடிவங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. காலப்போக்கில் சிலமாற்றங்கள் தோன்றினாலும் சில அம்சங்கள் மாறாமலே தொடர்ந்துவரும். எப்படியாயினும் மக்களுடைய வாழ்க்கையில் பிரிக்க முடியாத அம்சங்களாக இவை பின்னிப்பிணைந்திருக்கின்றன.

பொருளியல் வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கை ஆகிய நிலைகளில் மக்கள் கைக்கொண்டிருக்கின்ற எல்லாப் பழக்க வழக்கங்களையும், 'வழக்காறுகள்' என்ற பெயரில் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சியாளர்கள் அழைப்பர். இந்த வழக்காறுகளைக் கைக்கொண்டிருப்பவர்களை நாட்டுப்புறத்தார், நாட்டார், ஊரகத்தார் என்று அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. நாட்டுப்புற வழக்காற்றியல் அல்லது நாட்டார் வழக்காற்றியல் என்பது ஒரு மக்கள் தொகுதியின் வாழ்க்கைதான்; அவர்கள் வாழ்வியல்தான் அது.

எமது வாழ்நாளில் பல வழக்காறுகளோடு சம்பந்தப்படுகின்றோம். தாலாட்டு, குழந்தை விளையாட்டு, பாட்டிக்கதை, நண்பர்கள் சொல்லும் கதைகள், வாலிபப்பருவக்கதைகள், தொழில்வழிக் கதைகள், திருமணப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுக்கள், ஒப்பாரிப்பாடல்கள், பழையமரபுக்கதைகள் என்று இவை பலவகையாக விரிந்து செல்கின்றன. இவற்றோடு வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, பாவைக்கூத்து, ஒயிலாட்டம் முதலிய நிகழ்த்து கலைகளும் சேரும். பொதுவான வாழ்க்கை நோக்கு என்பதைவிட தங்களுக்கென்று தனித்த வாழ்க்கைமுறை, ரசனை என்றிருப்பதையே பொதுவாக மக்கள் விரும்புகிறார்கள்.

தமிழில் கதைப்பாடல்கள் நாட்டுப்புறவியலில் அல்லது நாட்டார் வழக்காற்றியலில் எத்தனையோ வகைப்பாடுகள் இருந்த போதிலும் இசையும் பாட்டும் கேட்பது எல்லாத்தலைமுறைகளிலும் சலிப்புத்தராத ஒன்றாக இருக்கின்றது. கதைப் பாடல்களை வில்லடித்துக் கொண்டும், உடுக்கடித்துக்கொண்டும் பாடகர்கள் பாடுவார்கள். பெரும்பாலும் உழவர் சமூகங்களிலேயே இக்கதைப் பாடல்கள் பிரபல்யம் பெற்று விளங்குகின்றன. ஒருபோக அறுவடை செய்தபின்பு அடுத்தபோகத்துக்குப் போகுமுன் இருக்கிற கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளியில் மக்கள் பொழுதுபோக்குக்காக இக்கதைப்பாடல்கள் படித்தும் கேட்டும் மகிழ்வார்கள். ஒரு சமூகத்தின் பண்புகளை வெளிப்படுத்தும் முறையிலும் கதைப்பாடல்கள் அமையும். இந்தியாவின் கிராமப்புறங்களில் இன்றும் இவற்றை முழுமையாக அவதானிக்கலாம். இலங்கையைப் பொறுத்தளவில் இவை அருகிவருகின்ற போதிலும் மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களைப் பொறுத் தளவில் இவை இன்னும் மங்கிவிடவில்லை.

தமிழிலுள்ள கதைப்பாடல்களில் புராணக்கதைப் பாடல்கள், காப்பியக்கதைப் பாடல்கள், சமூகக்கதைப்பாடல்கள், வரலாற்றுக்கதைப்பாடல்கள் என்று பலவகை உண்டு. தமிழிலுள்ள கதைப்பாடல் களுள் பல இராமாயணக் காப்பியத்தையும் மகாபாரதக் காப்பியத்தையும் தழுவியவையாகவே எழுந்துள்ளன. அல்லியரசாணிமாலை, பவளக்கொடிமாலை, ஆரவல்லி - சூரவல்லிகதை, கர்ணமகாராஜன்கதை, தேசிங்குராஜன் கதை ஆகியவற்றில் சில இலங்கையிலும் பாடப்பட்டு வந்தபோதிலும் தமிழ் நாட்டில்தான் அவை பிரபல்யம் பெற்றிருக்கின்றன.

தமிழ்நாடெங்கும் நடக்கும் கிராமப்புறத் திருவிழாக்களில் பல பெரிய எழுத்துக் கதைப் பாடல்நூல்கள் விற்பனைக்கு வரும். இராமப்பய்யன் அம்மானை, தேசிங்குராஜன்கதை, நல்லதங்காள் கதை, கட்டப்பொம்மன் கதைப்பாடல், சுடலைமாட சாமிகதை, காத்தவராயன்கதை, மதுரை வீரசுவாமி கதை என்பவை அதில் முக்கியமானவை. இவை களெல்லாம் மக்கள் மத்தியில் காலங்காலமாகப் புழங்கிவருகின்ற பழையமரபுக் கவிதைகளையும், உண்மையில் நடந்த சில வரலாற்று நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டவை.

'ஐவர் ராசாக்கள் கதை' என்பது குலசேகர பாண்டியனின் கதையாகும். இது பல்வேறு பெயர்களில் வழங்கிவருகிறது. இவற்றை பேராசிரியர் வானமா மலை நூலாகப் பதிப்பித்திருக்கிறார். 'முத்துப்பட்டன் கதை' தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களில் வில்லுப்பாட்டாகப் பாடப்பட்டு வருகின்றது.

'காத்தவராயன் கதை' இலங்கையின் பலபாகங்களிலும் கூத்தாக இன்றும் ஆடப்பட்டு வருவதைக் காணலாம். 'மதுரைவீரன்கதை', 'நல்லதங்காள் கதை' என்பனவும் பிரபல்யம் பெற்றவை. இவற்றை விட 'கோவலன் கதை', 'கண்ணகி கதை' என்பனவும் 'அயோத்திகதை'யும் வில்லுப்பாட்டாகப் பாடப்பட்டு வந்துள்ளன. சுடலை மாடன், இசக்கியம்மன், முத்தாரம்மன் முதலிய நாட்டுப்புறத் தெய்வங்களின் கொடை நாட்களில் அத்தெய்வங்களின் கதைகளோடு பிறகதைகளையும் சேர்த்துப் பாடுவார்கள்.

கதைப்பாடல்கள் ஏதோ ஒரு சம்பவத்தின் அடிப்படையில் தோன்றி சிலகாலம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றபிறகு மறைந்துவிடுவதாகவுள்ளன. மக்களின் வாய்மொழி மரபிலிருந்தோ ஏட்டுச் சுவடியிலிருந்தோ எழுத்துவடிவத்துக்குக் கொண்டு வரப்பட்டால் இலக்கியம் என்ற நிலையில் அது மேலும் உயிர்வாழும். நாட்டுப்புறக் கலைஞர்களால் அதுமக்கள் மத்தியில் மீண்டும் மீண்டும் பாடப்படுகிறபோது அவர்கள் மனத்தில் பதிந்து அவர்கள் வாழ்க்கையின் ஓர் அம்சமாகவே மாறிவிடுகிறது.

உலக இலக்கியங்களிலும் நாட்டுப்புறக் காப்பியங்களின் செல்வாக்கு இருந்துவந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பின்லாந்து நாட்டைச் சேர்ந்த எலியாஸ் லோண்ரோட் என்பவர் 'கலேவலா' என்னும் நாட்டுப்புறப் பாடலை, நாடு முழுவதும் அலைந்து திரிந்து கேட்டு அதைப் பதிவாக்கி நாட்டுப்புறக் காப்பியத்தை வெளியிட்டார். சுமார் இருபதினாயிரம் மைல்கள் நடந்து 65000 வரிகள் கொண்ட அக்காப்பியம் 1835இல் வெளியிடப்பட்டது. பின்லாந்து மக்கள் தங்கள் தேசிய காப்பியமாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பின்லாந்து அரசு பெப்ரவரி 28 ஆம் நாள் கலேவலாதினம்' என்று அதை ஒரு தேசிய எழுச்சிநாளாகக் கொண்டாடிவருகிறது. கிரேக்க காப்பியங்களான 'இலியாது', 'ஒடிசி' என்பன நாட்டுப்புறக்கதைகளாக இருந்து காப்பியங்களாக மாறியவை என்று அறியக்கிடக்கின்றது.

இந்தியாவில் பஞ்சாப், ஹரியானா, ஹிமாச்சல பிரதேசம், குஜராத், உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீஹார், ஒரிசா ஆகிய வடமாநிலங்களிலும் கர்நாடகம், கேரளம், ஆந்திரா, தமிழ்நாடு என்னும் தென்மாநிலங்களிலும் சில குறிப்பிட்ட பகுதிகளிலும் நாட்டுப்புறக் காவியங்கள் இப்பொழுதும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. மக்கள் மத்தியில் கதைகளாகவும், பாடகர்களால் பாடப்பெற்றும், நடிகர்களால் நடிக்கப்பெற்றும் அவை ஜீவனோடு வாழ்ந்து வருகின்றன. 'இந்திய நாட்டுப்புறக்காப்பியங்கள்' என்னும் நூலை அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம் 1989ஆம் ஆண்டு வெளியிட்டது.

இலங்கையைப் பொறுத்தளவில் மட்டக் களப்பு மாவட்டம் மன்னார் மாவட்டம், யாழ் மாவட்டத்தின் சில பகுதிகள் இன்றும் நாட்டார் கலை களைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றன. கூத்து மரபை கிழக்குமாகாணம் குறிப்பாக மட்டக்களப்பு நாட்டுக்கூத்தை வளர்த்து வருகின்றது. எமது பாரம் பரியங்களை அழிந்துபோகவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாட்டார் கலைகளை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். □□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சமயம் கடவுளை மனதில் நினைந்து கொண்டு மனிதனைத் தேடிக் கொண்டிருந்தான் கந்தசாமி. கடவுள் நேரில் வந்தா தரிசனம் தரப்போகின்றார்? இது நடக்கத்தகுந்த காரியமல்ல என்பன இவன் அறியாதவனல்ல. ஆனால் கடவுளைத் தவிர வேறுயார் தனக்கு இப்பொழுது உதவப் போகின்றார்கள்! கடவுள் சில சமயங்களில் மனிதவடிவில் அவதாரம் எடுத்து வந்து அடியார்களுக்கு அபயமளிப் பாராம். தன்னைப் பொறுத்த வரை அது சாத்தியப்படக் கூடியதல்ல என இவன் உள்ளுணர்வு இவனுக்கு உரைக்கிறது. மனிதன் செயற்கரிய செயல்களைச் செய்து சகமனித இதயங் களில் வாழும் தெய்வமா கலாம். அந்தத் தெய்வம் யார்? அவர் எங்கே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்? அந்த மனிதனை இப்பொழுது இவன் கண்டடைய வேண்டும். அவரைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றது இவன் மனம். தேடுகின்றவன் நிச்சயம் கண்டடை வானல்லவா! ''தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும்'' என்றார் யேசு. இவனுக்கு மனதில் அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கை. அந்த மனிதனைக் கண்டடைய முடியும் என்பதில், மனிததேவையில் பிறந்த குழந்தை தான் நம்பிக்கை. இன்றைய தேவைகள் இவனுக்கொரு நிர்ப் பந்தம். இந்த நிர்ப்பந்தத்தில் மனிதனைத் தேடிக் கொண்டிருக்கின்றான்.

சிறிய மண்டபத்தின் பெரிய கதவு இரவு பகலாகவென்ற வேறுபாடின்றி ஒவெனத் திறந்து போட்டுக் கிடக்கிறது. கதவைத்திறந்து வைப்பதால் மண்டபம் விசாலித்து இருப்பதாக மனதில் ஒரு எண்ணம். திறந்த கதவுக்கூடாக எல்லோரும் இலகுவாக உள்ளே போய் வந்து புழங்குவதற்கு நல்லவசதி. கந்தசாமி, மண்டபத்துக்கு வெளியே கதவுக்கு நேர்எதிரில் படர்ந்து கிளை ஓச்சி நிற்கும் ஆலமரத்தின் கீழே, மண்டபத்தை நோக்கிய வண்ணம் ஒரு கல்லின்மீது குந்தி இருக்கின்றான். அந்த மண்ட பத்துக்கும் எதிரிலுள்ள வீதிக்கும் இடைத் தூரம் சுமார் இருபத்தைந்து மீற்றர் வரை இருக்கலாம். அந்த நிலப்பரப்பைத் தாங்கும் குளிர்தரும் குடையாக விரிந்து நிற்கிறது அந்த ஆலமரம். அதன் நிழலில் ஆங்காங்கே பெரும்பாலும் ஆண்கள் பலர் குந்தியிருக்கின்றார்கள். வீதிக்கு மறுபுறத்தில் மூடிக்கிடக்கும் கடைவாசலில் சிலர் அமர்ந்திருக்கின்றார்கள். மண்டப த்துக்கு கிழக்குப் பக்கத்தில் சிறிய ஒரு கோயில். அதனுள்ளேயும் சிலர். பெண்களும் முதியவர்களும் திறந்து கிடக்கும் அந்தச் சிறிய மண்டபத்துக்குள்ளே குறாவிக் கொண்டு இருக்கின்றார்கள். சிலர் சரிந்து படுத்துக்கிடக் கின்றார்கள். அவர்கள் எல்லாரது முகங்களும் இருண்டு கிடக்கின்றன. யார் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. கவலை யேதும் அறியாத குழந்தைகள் சூழ்நிலை அறியாது அங்குமிங்கும் ஓடித்திரிந்து விளையாடுகின்றார்கள்.

# திவ்விய வஸ்திரம்



**தெணியான்**

கந்தசாமி எறும்புபோல படு சுறுசுறுப்பு. இவனோடு வேலை செய்கின்றவர்கள் யாரும் சோம்பி இருக்க இவன் விடமாட்டான். எல்லோரையும் இயக்கிக்கொண்டிருப்பான். தொழிலை விசுவாசித்துச் செய்யவேணும் என்று ஓயாமல் சதா நச்சரித்துக் கொண்டிருப்பான். அதனால் முதலாளி மனசுக்கு இவனை ரொம்பவும் பிடிக்கும். இங்கே சயிக்கிளை கையோடு சிலர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை எடுத்து, அதில் ஏறிக்கொண்டு எங்கோ போகின்றார்கள். கந்தசாமி சயிக்கிளை மண்டபத்துக்கு வெளியே நிறுத்தி வைத்திருக்கின்றான். சூட்கேஸ்பெட்டியைக் கட்டி எடுத்துக் கொண்டு வாகாக வருவதற்கு அந்தச்சயிக்கிளைப் பயன்படுத்தினான். இவன் குடும்பத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் எல்லாம் அந்தச் சிறிய பெட்டிக்குள் அடக்கம். வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து இப்படி வரவேண்டி நேருமென்று இவன் கற்பனை தானும் பண்ணியதில்லை. இவன் விற்பனையாளனாக வேலைசெய்யும் கடை முதலாளி தினமும் ஒரு பத்திரிகை வாங்குவார். முதலாளி மாத்திரம் அதைப்படிப்பதற்கு உரிமை உண்டு. அவர் நண்பர்கள் யாராவது வந்தால் மேசைமேல் கிடப்பதை எடுத்து விரித்துப் பார்ப்பார்கள். அங்கு வேலைசெய்கிறவர்கள், எவரும் பத்திரிகையில் தொடுவதை அவர் விரும்புவதில்லை. தெரியாத்தனமாக யாராவது பத்திரிகையைக் கையில் எடுத்து விட்டால்போதும், 'ஊர்த்துளவாரங்களை விட்டுவிட்டு சம்பளத்தை வாங்கிக் கொண்டுபோய்த் திண்டுவிட்டுப்படுங்கோ! உங்களுக்கு என்னத்துக்குப் பேப்பர்!' என்று சீறுவார். அவர் கொடுக்கும் சம்பளம் தான் வழங்கும் தானம் என்பது அவரின் நினைவு. அதனால் கந்தசாமி தானுண்டு தன்வேலையுண்டு என இருந்து விடுவான். சுற்றுச்சூழலில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தெரியவராது. அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆவலும் மனதில் இல்லை. அட்டம் அருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுகின்றவர்கள் வலிகாமத்தை விட்டுப் புறப்பட்டவேளை, அங்கு தங்கி இருப்பதற்கு இயலாது இவன் குடும்பத்து டன் மெல்லக் கிளம்பினான். வீடுவிட்டு வீதிக்கு வந்த பிறகுதான் இவனுக்கு நிலைமை புரிய ஆரம்பித்தது. சன வெள்ளத்துடன் சிறுதுளியாகக் கலந்து இரவும் பகலும் மழையிலும் வெயிலிலும் மெல்ல மெல்ல ஊர்ந்து ஊர்ந்து சாவகச்சேரியை வந்தடைய பலார்பத்தி நன்றாக விடிந்து விட்டது. சாவகச்சேரிப் பட்டினத்திலும் அதன் சூழலிலும் பாதம்பதித்துத் தரித்து நிற்பதற்கு ஒருதுளி நிலம் இல்லை. அப்படி ஒருசன வெள்ளம் ! பெருகி வந்த பெரு வெள்ளம் வடமராட்சி நோக்கி வழிந்து கொண்டி ருந்தது. அந்த வெள்ளத்தோடு வெள்ளமாக அள்ளுண்டு குடும்பத்துடன் சேர்ந்து இந்தச் சனசமூக நிலையத்தில் வந்து தஞ்சமடைந்தான் கந்தசாமி.

இந்தப் பிரதேசங்களுக்கு உரித்தான சராசரிசன சமூக நிலையந் தான் இது. செய்திப் பத்திரிகைகள் ஒன்று இரண்டினைப் போட்டு வைத்துப் படிப்பதற்கு சிறிய ஒரு மண்டபம். சில வாங்கு மேசைகள். மண்டபத்துக்குள்ளே பழையபத்திரிகைகளை அடுக்கி வைப்பதற்கு ஓர் அறை. அந்த அறைக் குள்ளே நெருக்கி அடித்துக் கொண்டு இரண்டு குடும்பங்கள் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கின்றன. மண்டபத்துக்குள் பத்துக்குடும்பங்கள். கையைத்தூக்கினால் அடுத்தவர் மேல் போய்விழும். முகம் திரும்பினால் சுவாசக்காற்று இன்னொ ருவர் முகத்தைச் சுடும். இடம்பெயர்ந்து வந்து இரண்டு வாரகாலம் கழிந்து போயிற்று. ஆரம்பத்தில் ஆர்வத்துடன் பலரும் ஓடியோடி வந்து உதவிகள் பலவும் செய்தார்கள். அவர்களுந்தான் எத்தனை நாட்களுக்குத் தொடர்ந்து தந்து கொண்டிருக்க முடியும். அரச அதிகாரிகள் பதிவுகளைச் செய்து கொண்டு போனார்கள். உதவி இன்னும் வந்து சேர வில்லை. கடந்த இரவு எல்லோரும் பட்டினி. இன்று காலையிலும் உணவு கிடைக்கவில்லை. இவனுக்கு யாருடனும் வாய்திறந்து பேசுவதற்கு முடியவில்லை. பிள்ளைகளும் மனைவியும் பசித்த வயிற்றுடன் கிடந்து தவிக்கின்றார்கள். அவர்கள் பசிபோக்க மார்க்கம் அறியாது மனசு தவிக்கிறது. மனைவியைப் பார்க்கின்றான். மண்டபத்துச் சுவருடன் முதுகு வைத்துச் சாய்ந்திருக்கின்றாள். மடிமீது கைக்குழந்தை. அவளைச் சுற்றி நான்கு பெண்பிள்ளைகள். மூத்தவளுக்கு வயது பதினைந்து. நான்கு பெண்களும் போதுமென்று தான் இருந்தார்கள். ஆண்குழந்தை வேண்டும் என்னும் ஆவலினால் ஆறாண்டுகள் கழித்துப் பிறந்தது ஒரு குழந்தை. அதுவும் பெண்ணாகவே வந்து பிறந்தது. அந்தக் குழந்தை தான் அவள் மடிமீது கிடக்கிறது. அவள் முகம் வாடிச் சோர்ந்து கிடக்கிறது. கலைந்து கிடக்கும் நீண்ட கூந்தலை நீவி எடுத்து ஒழுங்காக ஒரு கொண்டை போட்டுக் கொள்ளும் ஆர்வம் அவளுக் கில்லை. ஏனோ தானோ என்று அள்ளி எடுத்து குடுமி முடிந்து கொண்டிருக் கின்றாள். அள்ளிமுடித்த குடுமி மயிர் காதுகளைத் தொட்டு கன்னங்களில் வழிந்து சுருண்டு தொங்குகிறது. கட்டிக் கொண்டிருக்கும் ஆடைகள் கசங்கிக்கிடக்கின்றன. அவலமான இந்தக் கோலத்திலும் கருமுகில்கள் மூடிக்கிடக்கும் வண்ண நிலவாக அவள் முகம் ஒளிர்கிறது. இன்னும் திருமணமாகாத கன்னிப் பெண்போல இளமை அழகு பூத்துச் சொரிகிறது. இவனுக்கு மனம் கொள்ளாப் பெருமை. இத்தனை துயரங்களுக்குள்ளும் அரும்பும் ஒரு மகிழ்ச்சி. மண்டபத்துள் தங்கி இருக்கும் ஒரு குடும்பத்து விடலை ஒருவன் இடையிடையே உள்ளே வந்து எதிர்ப்புறச் சுவரில் சாய்ந்து கொண்டிருக்கின்றான். அவன் விழிகள் அடங்காத வேட்கையுடன் அலைந்தலைந்து மேய்ந்து கொண்டிருக்கின்றன. மடிமீது கிடக்கும் குழந்தை வீரிட்டு அழுகிறது. அவள் குழந்தையை ஏக்கத்துடன் பார்த்தவண்ணம் தலை குனிந்திருக் கின்றாள். அவன் பார்வைக்குத் தப்பி சட்டையை விலக்கி குழந்தைக்குப் பாலூட்ட முடியவில்லை. அவள் மனசில் எரிச்சல் மூளுகிறது.

வறுமையினால் செம்மை குலையாது கௌரவமாக வாழ்ந்த குடும்பம். இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டது. என்ன செய்வது! எதனைத் தடுக்க முடிகிறது! இப்பொழுது என்ன செய்யலாம்! மனிதனைத் தேடவேண்டும்! இங்குயாரும் அறிமுகமானவராக இல்லை. முதாலாளியைச் சந்தித்தால் உதவி கோரலாம். அவர் தூரத்து உறவு. இருவருக்கும் பிறந்தமண் புங்குடுதீவு. 'நீ எனக்குச் சொந்தம்' என்று சொல்லிச் சொல்லி நன்றாக வேலைவாங்குவார். அவசரம் அந்தரத்துக்குக் கைமாற்றாகக் காசுதந்து அந்த மாதச் சம்பளத்தில் கறாராக் கழித்தெடுத்துவிடுவார். ஒரு மாதம் தாமதமானால் அதற்கு வட்டிவேறு. அவரைச் சந்திக்க முடிந்தாலும் அவர் உதவி செய்வார் என்று எதிர்பார்க்க இயலாது. தந்த பணத்தைத் திருப்பிப் பெற இயலாது என்று தான் அவர் கணக்குப் போடுவார். இப்போது தேடிக்கண்டடைய வேண்டிய மனிதன் யார்? ஓ...! முதலாளியின் நண்பர் தேவராசா ஆசிரியர். அவர் இங்குதான் இருக்கவேண்டும். அவரைத் தேடிப்பார்க்கலாம். அவர் ஒரு அபூர்வமான பிறவி. முதலாளியின் நண்பராக எப்படி இருக்கிறாரோ! ஒத்த இயல்புகள் இல்லாத இருவர் நண்பர்களாக இருப்பது நடைமுறைச் சாத்தியமற்ற அதிசயம். அந்த அதிசயம் சிலரிடையே எப்படியே நிகழ்ந்து விடுகிறது. அப்படியான அதிசயங்களில் ஒன்றுதான் தேவராசா ஆசிரியருடன் முதலாளிக்குள்ள நட்பு. முதலாளியின் தந்தைக்கு கம்பளையில் கடை இருந்த காலம். அந்தப்பகுதிப் பாடசாலை ஒன்றில் தேவராசா ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டி ருந்தார். முதலாளியின் தந்தை வேண்டு கோளுக்கு இணங்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குப் பின்னுள்ள அறை ஒன்றில் தங்கி இருந்தார். வேதனம் வாங்காத கணக்குப் பிள்ளையாக இரவு நேரங்களில் ஆசிரியரை முதலாளி பயன்படுத்திக் கொண்டார். ஆசிரியர் மிகச் சிக்கனமாக வாழ்கின்றவர். ஆனால் முதலாளியிடம் அடிக்கடி கடன் கேட்டு வாங்கிக் கொண்டிருப்பார். 'உங்களுக்கு எதுக்கிப்ப காசு?' என்று முதலாளி நட்புடன் கேட்பார். ஆனால் பதில் வராது. சிரித்து மழுப்பி விடுவார். பிறகுதான் தெரியவந்தது. அவரிடம் படித்துக் கொண்டிருக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு உணவாக, உடையாக, புத்தகமாக, அவர் கொடுத்துக் கொண்டிருப்பது. இல்லை என்று அந்தரித்து வந்தவர்களுக்குப் பணமாகவும் கொடுத்து விடுவார். அவர் புகழுக்காக விளம்பரத்துக்காகக் கொடுப்பதில்லை. தான் கொடுத்துக் கொண்டிருப்பதை எவருக்கும் வாய்விட்டுச் சொன்னதில்லை. யாராவது கேட்டு விட்டால் ஒரு மெல்லிய மழுப்பல் சிரிப்பு அவ்வளவுதான். முதலாளியிடம் பெற்ற கடனை சம்பளம் கிடைத்ததும் முதல் வேலையாகத் திருப்பிக் கொடுத்து விடுவார். அவர் ஒரு பாடசாலை அதிபர் என்பது பலருக்குத் தெரியவராது. அவர் அதைச் சொல்லித்திரிவதில்லை. வித்தியாசமான மனிதர் அவர்.

இடமாற்றலாகி ஊரோடு அவர் வந்து சேர்ந்துவிட்டார். வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நகரத்துக்கு வந்து போகும் சமயங்களில் எல்லாம் கடைக்கு வந்து முதலாளியைக் கண்டுகொள்ளாமல் போனதில்லை. ஆசிரியரைக் கண்டு விட்டால் போதும் "வாருங்கோ சிவா!" என அன்பாக வரவேற்பார் முதலாளி. ஆசிரியர் கேட்காத வேளை யிலும் 'என்ன வேணும்' என்று வலிந்து கொண்டு கேட்பார். ஆசிரியர் செய்கின்ற நல்ல காரியங்களினால் சம்பாதிக்கும் புண்ணியத்தில் தனக்கும் ஒரு பங்கு வந்து சேரட்டும் என்பது முதலாளி மனதில் கரந்திருக்கும் எண்ணம். கடைக்கு வந்து போகும் சமயங்களில் இவனுக்கு அறிமுகமானவர் ஆசிரியர். அவர் என்றுமே இவனைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. நெஞ்சுக்கு நெருக்க மாக, அன்பாக 'சாமி' என்றே அவர் குரல் இழையும். தான் தேடிக்கொண்டிருக்கும் மனிதர் அவர்தான் அவரிடமே போவோம். அவர்தான் அந்த மனிதர்.

இருளிற்கிடந்து பாதை தெரியாது பரிதவித்த இவனுக்கு ஒளி தெரிகிறது. அந்த வெளிச்சத்தில் பயணிக்க வேண்டும். கலைந்து கிடக்கும் கேசத்தைக் கைகளினால் கோதிவிட்டுக் கொண்டு குந்தி இருக்கும் கல்லிலிருந்து பெருமூச் செறிந்த வண்ணம் மெல்ல எழுகின்றான்.



இவன் உள்ளே வருவது கண்டு சுவரோடு சாய்ந்திருக்கும் விடலை மெல்ல எழுந்து மண்டபத்தை விட்டு நழுவுகின்றான். இவன் உதட்டுக்குள் மெல்ல நகைத்துக் கொள்கிறான். இவனிடத்தில் ஒரு பழக்கம், கடைக்கு வேலைக்குப் போகும் வேளைகளில் மெல்லிய நீலநிறக் சட்டம் போட்ட வெள்ளைச்சாரம் அரையில் கட்டிக் கொள்வான். மேலே ஒரு சேட். வருடத்தில் இரண்டு சாரங்கள். புத்தாண்டு, தீபாவளிக்கு முதலாளியின் தாராள மனசின் உபயம். அந்த இரண்டும் மாற்றி மாற்றிக் கட்ட வருடம் முழுவதும் இவனுக்குப் போதுமானது. எங்காவது இடங்களுக்குச் செல்வதானால் வேட்டியை அரையில் உடுத்திக் கொள்வான். அதற்கென்றே இவனிடம் ஒரு வேட்டி உண்டு. அந்த ஒரு வேட்டி இவனுக்குப் போதுமானது. தினமும் காலை எட்டுமணிக்குக் கடைக்குப் புறப்பட்டுப் போனால் இரவு வீடுவந்து சேருவான். சனிக்கிழமை அரை நாள் வேலை என்பது வெறும் பேச்சு. அன்றைய தினமும் இவன் வீடுதிரும்ப மாலைப் பொழுது மறைந்து விடும். ஞாயிறு ஒருநாள் ஓய்வு. அழுக்குப்போக உடுப்புகளைக்கழுவி எடுக்க, சற்று உடல் ஆறி ஓய்வாக இருக்க அந்த ஒருநாள் கழிந்து போகிறது. குடும்பத்துக்காக உழைக்கவே காலம் கரைந்து போகிறது. இந்த இலட்சணத்தில் என்ன கொண்டாட்டமும் குதூகலிப்பும்! இவனுக்கு எங்கே போய்வர முடிகின்றது? உள்ளது ஒரு வேட்டி அதை உடுத்திக் கொண்டு செல்வதற்கும் வாய்ப்பில்லை. மகள் சூட்கேஸைத்திறந்து வேட்டியை எடுத்து கொடுக்கின்றாள். இவன் மடித்துக் கிடக்கும் வேட்டியைக் குலைத்து அரையில் கட்டிக் கொண்டிருக்கும் சாரத்தின் மேல் சுற்றி அந்தச்சாரத்தை ஒரு கையினால் இழுத்து கால்களுக்குள்ளால் உருவிக்கழற்றி தோளில் போட்டுக் கொள்ளுகின்றான். பின்னர், வேட்டியை ஒழுங்காகக் கட்டி முடிக்கின்றான். அணிந்து கொண்டிருக்கும் மெல்லிய மஞ்சள் நிறமான சேட் நிறம் மங்கி, கசங்கிக்கிடக்கிறது. தலையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தி அந்தச் சேட்டை ஒரு தடவை நோட்ட மிடுகின்றான். அதன் சுருக்கங்கள் நிமிர கைகளினால் அழுந்தி அழுந்தி இழுத்திழுத்து விட்டுக்கொள்ளு கின்றான். இவன் புறப்படுவதை கவலையுடன் மனைவி கவனித்துக் கொண்டிருக் கின்றாள். மூத்தபெண் பிள்ளைகள் இருவரும் முகத்தை முகத்தைப் பார்க்கின்றார்கள். இவன் எங்கே புறப்படு கின்றான் என்ற வினாவை அவர்கள் விழிகள் வினவுகின்றன. இவன் அவர்கள் எவரையும் கவனித்ததாக இல்லை. இவன் முகம் இறுக்கிடக்கிறது. தோள் மீது கிடக்கும் சாரத்தைக் கையில் எடுத்து ஒழுங்காக மடிக்கின்றான். பின்னர் அதைச் சூட்கேஸின்மேல் வைப்பதற்கு சற்று எட்டிக் குனிகின்றான். சர்ர்ர்... என பிருஷ்டத்தின் நடுப்பகுதியில் அந்தப்பழைய வேட்டி வெடித்து நீளத்துக்கு கிழிகிறது. ஐயோ... மானம் போய்ச்சே! எனப்பதறித் துடித்து நிமிர்ந்து பின்புறமாகப் பார்க்கின்றான். வெட்கம் இவனை விழுங்கித்தின்றது. அவசர அவசரமாக கையினால் கிழிந்த பகுதியை இணைத்து மூடிப் பொத்து கின்றான். அந்த மண்ட பத்துக் குள்ளே பெண்களும் சில ஆண்களும் குழந்தை களுமாக உட்கார்ந் திருப்பது இப்பொழுது தான் இவன் கண்களுக்குத் தெரிகிறது. கீழ் வேட்டியை மடித்து மேலே தூக்கி முழங்கால்கள் தெரிய சண்டிக்கட்டாக கட்டிய வண்ணம் விரைந்து வெளியே ஓடுகின்றான். விரைந்து போய்க் கொண்டிருக்கும் இவனை மனைவி மக்கள் வேதனையுடன் பார்த்து கலங்குகிறார்கள்.

இவன் மண்டபத்துக்குப் பின்புறம் வருகின்றான். எவர் கண் களிலும் படாதவாறு மறைந்து நின்று வேட்டியை அவிழ்த்து அரையில் கட்டிய பகுதியைகீழேதொங்க விட்டு மீண்டும் கட்டிக்கொள்ளுகின்றான். எப்படிக்கட்டித் தான் என்ன! அந்தப் பெரிய கிழியல் வெளியில் தெரிகிறது அதை மறைத்துக் கட்ட இயலவில்லை. இப்போது என்ன செய்வது? சற்று நேரம் தடுமாறிக் கொண்டு நிற்கின்றான். பிறகு வேறு மார்க்கமின்றி, ஒரு தீர்மானத்துக்கு வருகின்றான். முன்னர்போல முழந்தா ளுக்குமேல் வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு, சயிக்கிளை எடுத்து உருட்டிய வண்ணம் புறப்படுகின்றான்.

அங்கிருந்து புறப்பட்ட பிறகே இவன் மனசில் ஒரு பிரச்சினை வினாவாக மெல்ல அரும்புகின்றது. தேவராசன் ஆசிரியர் வீடு எங்கே இருக்கிறது? அதை எப்படிக் கண்டுபிடிப்பது? மனசு குழம்ப ஆரம்பிக்கிறது. 'வாய் இருந்தால் வங்காளம் போகலாம்' என்பர்கள். வங்காளம் ஒவ்வொருவர் வீட்டு முற்றத்துக்கும் வந்து விட்டகாலம் இது. ஆனால் எங்கள் வீட்டுக்குள்ளே இருக்கும் தேவராசா ஆசிரியர் வீட்டைத் தேடவேண்டி இருக்கிறது. பசி, நித்திரையின்மை, அலைச்சல், மனத்துயர், உடற்சோர்வு எல்லாம் சேர்ந்து இவன் நன்றாக இளைத்துப்போனான். இவற்றோடு ஒரு மணிநேரம் தொடர்ந்து அலைச்சல் இறுதியில் ஆசிரியர் வீட்டைக் கண்டு பிடித்துவிடுகின்றான். சயிக்கிளை 'கேற்று'க்கு வெளியே நிறுத்தி விட்டு ஒருகணம் அங்கு தயங்கி நிற்கின்றான். மடித்துக்கட்டிய வேட்டியுடன் அவர் முன் எப்படிப்போய் நிற்கிறது? அவர் என்ன நினைப்பார்? அவரை அவமதிப்பதாக அல்லவா, இருக்கும்! என்ன செய்யலாம்? ஒரு முடிவுக்கு வர இயலாது மனம் குழம்புகிறது. சிறிது நேரம் மேலும் குழப்பத்தில் கழிகிறது. புதிய வழி எதுவும் மனசுக்குத் தென்படுவதாக இல்லை. தவிர்க்க இயலாது ஒரு தீர்மானத்துக்கு வருகின்றான். மடித்துக்கட்டிய வேட்டியை அவிழ்த்துக் கீழே தொங்க விடுகின்றான். வேட்டிக்கிழியல் இவனைப் பார்த்து ஏளனமாக நகைக்கிறது. அதன் வாயைக் கையினால் பற்றிப்பிடித்தவாறு உள்ளே பார்த்து 'ஸேர்' எனக்குரல் கொடுக்கின்றான்.

"வாறேன்..." முதல் குரலுக்கு ஆசிரியர் 'கேற்று'க்கு வந்துவிடுகின்றார். "ஆ... சாமி ! வா... தம்பி... வா..." அணைத்துக்கொண்டு உள்ளே அழைத்துப்போகின்றார். "இஞ்சை வாருங்கோ... எங்கடை சாமி வந்திருக் கிறார்" அவர் கொடுத்த குரலுக்கு வெளியே வந்து மலர்ந்த முகத்துடன் அவர் மனைவி இவனைப்பார்த்து 'வாருங்கோ' என உபசரிக்கின்றார். முதற்பார்வையிலேயே ஆசிரியருக்கு உகந்த மனைவிதான் என இவன் மனம் கணித்து கொள்ளுகிறது. "இஞ்சாரப்பா...! கம்பனை முதலாளியின்ரை கடையிலே வேலை செய்கிறசாமி இவர்தான்"! மனைவிக்கு இவனை அறிமுகஞ் செய்து வைக்க, 'இப்ப எனக்கு நல்லாத் தெரியுது' என இவனை நோக்கி நெருக்கமாக அன்போடு மெல்லச் சிரித்த வண்ணம் அவர் மனைவி உள்ளே போகின்றார். ஆசிரியர் இவனை அனுசரித்து ஆதரவுடன் பேசிக் கொண்டிருக்கின்றார். இவனால் சாதாரணமாகக்கதிரையில் அமர்ந்து இருக்க இயலவில்லை. இவனது மெலிந்த தொடையை கிழிந்த வேட்டி அப்பட்டமாக வெளியே காட்டு கிறது. வேட்டியை இழுத்திழுத்து விட்டு இரகசியமாக அதை மூடி மறைக்கப் பிரயத்தனப்படுகின்றான். "இந்தா ருங்கோ... முதல் இதைச் சாப்பிடுங்கோ" ஒருகையில் தோசையும், மறுகையில் தேநீருமாக ஆசிரியர் மனைவி. இவன் முன் வந்து ரீப்போவின் மீது வைக்கின்றார். இவன் நெஞ்சம் பட்டினியாக இருக்கும் மனைவி பிள்ளைகளை நினைத்து ஒருகணம் கலங்குகிறது. இவனுக்குண்டான குழப்பத்தையும் தயக்கத்தையும் ஆசிரியர் அவதானிக்கிறார். "சாமி நல்லாக் களைச்சுப் போய் இருக்கிறியள்... முதல் சாப்பிடுங்கோ... பிறகு எல்லாம் யோசிப்பம்" என்கிறார். "பிள்ளைகளைக் கூட்டி வந்து எங்களோடை இருங்கோ, சாமி !" எனக்கேட்கின்றார். அவர் தங்களுக் கென்று வசதியான பெரிய வீடு ஒன்றைக் கட்டிக் கொள்ளவில்லை மாதச் சம்பளத்தில் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசுதான் பெரிசு. அவருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என இவன் மனம் தீர்மானித்துக் கொள்ளுகிறது. இவன் சிறிது நேரம் இருந்து பேசிவிட்டு வேட்டிக் கிழிசலை அவதானமாக மறைந்துப்பிடித்த வண்ணம் அங்கிருந்து புறப்படுகின்றான். ஒரு பிளாஸ்ரிக் பையில் அரிசி, தேங்காய், உணவுப்பண்டங்களை அவர் மனைவி போட்டு நிரப்பி வருகின்றார். ஐந்நூறு ரூபா தாள் ஒன்றை ஆசிரியர் இவன் கைக்குள் வைத்து மெல்லப் பொத்துகின்றார். ஆதரவாக இவனை வெளிக் 'கேற்' வரை அழைத்து அதுவரை மறைவாக வைத்திருந்த காகிதப்பொதி ஒன்றை எடுத்து இவன் கையில் இருக்கும் பைக்குள் வைத்துவிட்டு. "பின்நேரம் வாறன் சாமி" எனச் சொல்லிக் கொண்டு உள்ளே திரும்பு கின்றார். அவர் தாமதிக்காது உள்ளே சென்று விட்டது நல்லதாகப் போயிற்று. இவன் சயிக்கிளில் ஏறிக்கொள்வதற்கு வசதியாக இருக்கிறது. இவனை விளங்கிக் கொண்டுதான் அவர் உள்ளே சென்றாரோ! இவனுக்கு அது தெளிவாக இல்லை. அப்படி இருக்காது என தன்னைச்சமாதானப் பண்ணிக் கொண்டு வேட்டியை முன போல முழுந்தாள் தெரிய மடித்துக் கட்டிக் கொண்டு சயிக்கிளில் இவன் புறப்படுகின்றான்.

இவன் வரும்போது மனதில் இருந்த சங்கடம் எதுவும் இப்பொழுது மனதில் இல்லை ஆசிரியரிடம் உதவி நாடி வருவதில் இவனுக்குத் தயக்கமிருக்க வில்லை. ஆனால் பிச்சை கேட்டுப் போகின்றவன் அநுதாபத்தைப் பெறுவ தற்காக, கிழிந்த வேட்டியை அரையில் கட்டிக் கொண்டு போவது போல செல்ல வேண்டி இருக்கிறதே என்று தான் மனம் மறுகினான். இப்பொழுது அந்த உறுத்தல் இல்லை. மனதில் பூரண திருப்தி. ஆசிரியரோ அவர் மனைவியோ அதைக் கண்டு கொள்ளவில்லை. மகிழ்ச்சி. இவன் தேவை உணர்ந்து அவர்கள் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கின்றார்கள். மனதில் புதிய ஒரு ஆர்வம். இவன் புறப்படும் சமயம் ஆசிரியர் மறைத்தெடுத்து வந்து எதைத் தந்திருக்கின்றார்? மனம் ஆவலாதிப் படுகிறது. அதனை உடனே அறிந்து விட வேண்டுமென துடியாத் துடிக்கிறது. மனதைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. ஓடிக் கொண்டிருக்கும் சயிக்கிள் வேகத்தைக் குறைத்து ஒற்றைக்காலை நிலத்தில் ஊன்றி, தரித்து நிற்கின்றான். சயிக்கிளில் தொங்கிக் கொண்டிருக்கும் பைக்குள் கைவைத்து அந்தக் காகிதப் பொதியை எடுத்து விரிக்கின்றான். இவனுக்கு இவன் விழிகளை நம்ப முடியவில்லை. இவனுக்கு இதுவரை மனதில் இருந்த நம்பிக்கை தகர்ந்து விழுகிறது. ஆசிரியர் அவதானித்து இருக்கின்றார். அவர் மனைவியும் அறிந்திருக்கக்கூடும். ஆனால் அவர்கள் அதைக்காட்டிக் கொள்ளவில்லை. அப்படித்தான் ஒரு பண்பு. அவர் வேட்டி ஒன்று தந்திருக்கின்றார். சிவப்புக்கரை போட்ட பால் வண்ண வேட்டி. இவனுக்கு ஒருகணம் எல்லாம் மறந்து போகிறது. அந்த வேட்டியைத்தூக்கி கண்களில் பல தடவைகள் ஒற்றுகிறான். மானம் காக்க அந்த மனித தெய்வம் அருளிய வஸ்திரம். கண்கள் கலங்குகின்றன. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்றல்லவா சொல்லி இருக்கின்றார்கள். பசியினால் மானமும் போய் விடுமாம். மானங்களில் மேலானது எது? நிர்வாணத்தை மறைப்பது. பசித்த வயிற்றுடன் இருந்து விடலாம் நிர்வாண உடலுடன் நிலைத்திருக்க இயலுமா? தனது நிர்வாணத்தை தானே கண்டு கொள்ள இயலாது. பிறர் காண்பதென்றால்...? "அற்றம் மறைப்பது நின்பணியே!" எனச் சிவன் செயலாகக் காணுகின்றார்கள். மானம்காக்க 'கண்ணா...கண்ணா...! என பரிதவித்த பாஞ்சாலிக்கு ஆடை அளித்து அபயம் அளித்தவன் கண்ணபிரான். ஆசிரியர் தேவாராசா சிவனா? கண்ணனா? தான் தேடிக் கொண்டிருக்கும் மனிதர் அவர்தான். மனிதனாகத் தோன்றும் தெய்வம். இவன் மனதில் தோன்றும் புளகாங்கிதத்தில் உள்ளம் பூரித்துப் போகிறது. உற்சாகமாக விரைந்து வந்து, கொண்டு வந்திருக்கும் உணவுப் பண்டங்களையும் பணத்தையும் மனைவியின் கையில் கொடுக்கின்றான். வேட்டியை பக்குவமாக எடுத்து மூத்த மகளிடம் ஒப்படைக்கின்றான்.

***

காலையில் தனியார் கல்வி நிலையத்துககுச் சென்ற மகளை எதிர்பார்த்து இவன் கேற்றுக்கு வெளியே வீதி ஓரமாக நின்று கொண்டிருக்கின்றான். இன்று ஞாயிற்றுக் கிழமை. கடையை மூடிவிட்டு இவன் ஓய்வாக இருக்கும் நாள். யாழ்ப்பாண நகரத்து மையப்பகுதிக்கு அண்மையில் கஸ்தூரியார் வீதியில் இப்போது இவன் வீடு. வீதியில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி. மகள் ஒன்பதுமணிக்கு வகுப்பு முடிந்து வந்து சேரவேண்டியவள் அரைமணிநேரம் கடந்து போயிற்று. அழகான பெண்பிள்ளைகள் வீதியில் நடமாடித்திரிய முடியாத காலம். மகள் வருகின்ற திசையைப் பார்த்த வண்ணம் எதிர்பார்த்து நிற்கின்றான். இவன் பார்வையில் அவள் தென்படுவதாக இல்லை. ஆனால் வீதியில் வந்து கொண்டிருக்கும் ஒருவர் அகஸ்மாத்தமாக இவன் பார்வைக்குள் வந்து விழுகிறார். எங்கோ பார்த்த ஒருவராக ஆரம்பத்தில் இவனுக்குத் தோன்றுகிறது. அவர் நெருங்கி நெருங்கி வர வர... ஓ...! தேவராசா ஆசிரியர். அவர்தான். அந்த மனிதர்தான். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அதே தோற்றம்... அதே நடை.... இவனுக்கு உடல் புல்லரிக்கிறது. அவர் நெருங்கிவந்து விட்டார். இவன் வீதியில் முன்னேறி கைகளை விரித்த வண்ணம் அவரைப்பார்த்து 'ஐயா!' என அழைக்கின்றான். " ஆர் சாமியா? எப்படி இருக்கிறியள் !" அன்பாக இவன் கரத்தை மெல்லப் பற்றுகின்றார்! இதுதான் என்ரை வீடு... வாங்கையா... உள்ளே வாங்க... அவரை அழைத்துக் கொண்டு இவன் உள்ளே போவதற்குத் திரும்புகின்றான். அந்தச் சமயம் மகள் சயிக்கிளில் வந்து இறங்குகின்றாள். 'ஐயாவுக்கு ஆரென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுதோ?' இவன் கேட்கின்றான். 'ஓமோம்... சாமியின்ரைபிள்ளை'. "நாங்கள் வடமராட்சிக்கு இடம் பெயர்ந்து வந்த நேரம் இவ கைக்குழந்தை" சொல்லிக் கொண்டு நடு மண்டபத்துக்கு அழைத்து வந்து பணிவுடன் வசதியான ஒரு கதிரையில் அமர வைக்கின்றான். 'பிள்ளை ஐயா வந்திருக்கிறார்'. இவன் குரல் கேட்டு மனைவியும் மகளும் அங்கு வந்து சேருகிறார்கள். 'ஐயாவைச் சந்திச்சு கனகாலம். யாழ்ப்பாணம் கரைச்சல் எண்டு முதலாளி கடையை மூடிப்போட்டு குடும்பத்தோடை கொழும்புக்குப் போன பிறகு ஐயாவை நான் காணவில்லை. ஐயாவை எப்படியும் ஒரு நாளைக்குக் காணுவன் எண்ட எண்ணம் மனதிலே இருந்தது' என்கிறான். தொடர்ந்து "சாமி இப்ப என்ன தொழில் செய்கிறியள்?" ஆசிரியர் வினவுகிறார். "ஐயா, என்ரை பிள்ளையள் நல்ல வடிவுதானே! வெளிநாட்டு மாப்பிள்ளை மார் தேடி வந்தினம். இப்ப மூத்தவை இரண்டு பேரும் சுவிஸிலே, அடுத்தவ யூ.கே.யிலே, மற்றவவையும் கேக்கினம், அனுப்பப் போகிறன். நான் கடை நடத்திறன். நல்லா இருக்கிறன் ஐயா." சொல்லிக் கொண்டு இவன் ஆசிரியரைப் பார்த்து கை எடுத்து வணங்குகிறான். "சாமி... நீங்கள் நல்லா இருப்பியள்... நல்லா இருப்பியள்... அது எனக்குத் தெரியும்." ஆசீர்வதிப்பது போல திரும்பத் திரும்ப கூறுகின்றார். 'ஐயாவுக்கு குடிக்க ஒண்டும் தரயில்லை. அதுக்கு முதல் ஐயா ஒருக்கால் என்னோடை வரவேணும்' இவன் கேட்டுக் கொண்டு மீண்டும் கையெடுத்து வணங்கு கின்றான்.

ஆசிரியருக்கு ஒன்றும் புரிய வில்லை. இவன் எதற்காகத்தன்னை அழைக்கின்றான் என அவரால் ஊகித்துக் கொள்ள இயலவில்லை. இவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் மெல்ல எழுகின்றார். 'வாருங்கையா...!' அவரை அழைத்துக் கொண்டு இவன் உள் வீட்டுக்குள் போகின்றான். மனைவியும் பிள்ளைகள் இருவரும் பின் தொடர்ந்து வருகிறார்கள். இவன் சுவாமி அறை வாசலுக்கு வந்து முன் கதவைத்திறந்து 'ஐயா உள்ளே வாருங்கோ' என மரியாதையாக அவருக்கு வழிவிட்டு தானும் உள்ளே நுழைகின்றான். இவன் மனைவி பிள்ளைகளும் அறைக்குள்ளே வருகின்றார்கள். சுவரோடு இணைத்து நீளவாக்கில் உருவாக்கப் பெற்றிருக்கும் சிமெந்து பீடத்தின் மீது சட்டமிட்ட கண்ணாடிக்குள் தெய்வப் படங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. வண்ண மின்குமிழ்கள் அந்தப் படங்களுக்குமேல் ஒளி உமிழ்கின்றன. ஒவ்வொரு படத்துக்கும் புஷ்பங்கள் சார்த்தி, சாம்பிராணிப் பத்தி கொளுத்தி வைக்கப் பட்டிருக்கின்றது. சாம்பிராணி, சந்தனம், கருப்பூரம், மலர்களென இதயத்தை நிறைக்கும் தெய்வீக நறுமணத்தில் அந்த அறை நிறைந்து கமழ்கிறது. இவன் தெய்வங்களுக்கு முன்னுள்ள அகல் விளக்கை ஏற்றுகின்றான். அந்தப் பீடத்துக்குக் கீழுள்ள அலுமாரியை மெல்லத் திறக்கின்றான். பூசைக்கு வேண்டிய பொருட்களால் அலுமாரி நிறைந்து கிடக்கிறது. அதற்குள் இருக்கும் வெள்ளித்தட்டொன்றைக் கையில் எடுத்து, தெய்வங்களுக்கு முன் பீடத்தில் வைக்கின்றான். வெள்ளித் தட்டை மூடிக்கிடக்கும் பட்டுதுண்டை நீக்கிவிட்டு, மலர்களை அள்ளி வெள்ளித்தட்டின் மீது தூவி கைகூப்பி வணங்குகின்றான். ஆசிரியர் அந்த வெள்ளித் தட்டில் இருக்கும் பூசைப்பொருளை கூர்ந்து நோக்குகின்றார். என்ன ஆச்சரியம்! சிவப்புக் கரை இட்ட பழைய வேட்டி ஒன்று வெகு பக்குவமாக மடித்து அங்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியருக்குத்தன் உணர்வுகளைக்கட்டுப் படுத்த முடியவில்லை. 'சாமி' குரல் தளதளக்க கைகளைக் கூப்பிக் கும்பிடுகின்றார். 'ஐயா' இவன் மெல்லக் குனிந்து அவர் பாதங்களைத் தொட்டுப் பணிந்து வணங்குகின்றான்.

அவர்கள் எல்லோரது விழிகளும் மெல்லப் பனிக்கின்றன.

துயரத்தினால் மாத்திரம் உள்ளம் உடைந்து, நெஞ்சம் கரைந்து விழிகள் பனிப்பதில்லை. □□□

---

## வாக்காளர்கள்

**சுதந்திரம் கிடைத்த**
**எங்கள் நாட்டில்**
**சுதந்திரமாய்த் திரிவதற்கு**
**சுதந்திரமில்லை**
**எங்களுக்கு!**



**இன்னுமொரு**
**சுதந்திரத்திற்காய்**
**அடுத்த கட்டத் தேர்தலில்**
**எல்லோரும் நின்று கொண்டோம்**
**சுயேட்சை வேட்பாளராய்...!**

**சீனா. உதயகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம் – ஈழத்து ஆக்க இலக்கியப் பெண் படைப்பாளிகள்



க.பரணீதரன்

தமிழிலக்கியத்தில் பெண்ணியம் என்னும் எண்ணக்கரு தற்போது வளர்ந்து வரும் ஒன்றாகக் காணப்படுகின்றது. பெண்ணியம் என்ற சொல் Feminism என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமே. இது Femina என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பெண்களைப்பற்றிப் பேசுவது, படிப்பது, எழுதுவது, பெண்களே எழுதுவது எல்லாம் பெண்ணியம் என்பதனுள் அடங்கும்.

பெண்களின் பிரச்சினைகளை பெண்கள் எழுதுவதன் மூலம் தான் உணர்வு பூர்வமாக தங்கள் பிரச்சினைகளை உலகிற்கு வெளிச்சமிட்டுக்காட்டி, தீர்வுகளை மேற்கொள்ள முடியும் என பரவலாக எழுத்தாளர்கள் கருதுகின்றனர். பெண்ணியம் பற்றி பெண்கள் எழுதத்தொடங்கும் முன்னரே பெண்ணின் விடுதலைக்காக ஆண்கள் எழுதத் தொடங்கி விட்டார்கள். அந்த வகையில் பெண்ணியத்தை வளர்த்த் முன்னோடிகளாக பாரதி, பாரதிதாசன் ஆகியோரைக் கருதலாம். பாரதி பெண்விடுதலை, பெண்ணுரிமை, ஆண் - பெண் சமத்துவம், ஆண் - பெண் கற்பு, பெண்ணியச் சிந்தனைகள் என்பவற்றை தனது படைப்புகள் மூலம் படைத்து பெண்களுக்கு என ஓர் உயர்ந்த ஸ்தானத்தை அவர்கள் அடைய அடித்தளம் இட்டுக் கொடுத்தார். பாரதிதாசன் தன் படைப்புகளில் பெண்கல்வி, பெண்விடுதலை, குழந்தைமணம், பொருந்தாமணம், கைம்மைக் கொடுமை என்பவற்றை தனித்துவமான முறையில் எடுத்துரைத்தார். இன்று பெண்ணியம் ஆனது,

1) *மார்க்ஸியப் பெண்ணியம்*
2) *சோஷியலிசப் பெண்ணியம்*
3) *மிதவாதப் பெண்ணியம்*
4) *தீவிரவாதப் பெண்ணியம்*
5) *தலித் பெண்ணியம்*

என்ற அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு வளர்ந்து கொண்டு செல்கிறது. பெண்ணியம் தொடர்பான பல கோட்பாடுகளும் நாளுக்கு நாள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஈழத்தில் ஆக்க இலக்கிய வாதிகளான பெண் படைப்பாளிகள் நாளுக்கு நாள் உருவாகிய வண்ணம் உள்ளனர். இவர்களில் அநேகரின் எழுத்துகளில் பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்படு வதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் தமது பெண்ணிய சிந்தனைகளை வெளிப்படுத்து வதற்காக சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் ஆகிய எழுத்து வடிவங்களை கையாண்டு வருகின்றனர். ஈழத்து ஆக்க இலக்கியப் பெண் படைப்பாளிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை என்பவற்றில் அசைக்க முடியாத ஓர் இடத்தைப் பெற்றுள்ள போதிலும் நாவல் இலக்கியத்தில் குறிப்பிடக்கூடியளவு முன்னேறவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகத் தோன்றுகின்றது. எனினும், இன்றை புதிய இளம் பெண் எழுத்தாளர் களின் எழுத்துக்களை நோக்குகின்றபோது அவர் களால் எதிர்வரும் காலத்தில் நல்ல நாவல்களையும் ஆக்கித்தர முடியும் என உணர முடிகின்றது.

ஈழத்து ஆக்க இலக்கியப் பெண் படைப்பாளி களில் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கெக்கிராவ சஹானா, தாட்சாயணி, கோகிலா மகேந்திரன், மஸீதா புண்ணியாமீன், சந்திரகாந்தா முருகானந்தன், சித்திரலேகா மௌனகுரு, கார்த்திகாயினி சுபேஷ், பிரமிளாபிரதீபன், குந்தவை, பவானி சிவகுமாரன், ஆ.புனிதகலா, வசந்தியாபரன், பத்மா சோமகாந்தன், தேவகௌரி, அனார், மும்தாஸ் ஹபீஸ், யோகா பாலச்சந்திரன், ரூபராணி, தாமரைச்செல்வி, அம்மன்கிளி முருகதாஸ், ராஜேஸ்வரி சுப்பிரமணியம், அன்னலட்சுமி ராஜதுரை, ராணிசீதரன், ஆனந்த ராணி, கெக்கிறாவ ஸீலைஹா, பெண்ணிலா, சலனி ஆகியோர் தற்போது பெண்ணியம் தொடர்பான படைப்புகளை படைத்துக் கொண்டு இருப்பவர்களாக காணப்படுகின்றனர். ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர்நாடுகளில் வாழ்ந்து கொண்டு பெண்ணியம் பற்றி எழுதிவருபவர்களாக ஆழியாள், றஞ்சி, அருண்விஜயராணி, பாமினி, தர்மினி, சாரங்கா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இந்த படைப்பாளிகளில் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த சில படைப்பாளிகளின் எழுத்துகளில் தொனிக்கும் பெண்ணியக்கருத்துகளை மேலோட்ட மாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்** தன் நீண்ட கால இலக்கிய அனுபவத்துடன் படைப்புகளை படைத்து வருபவராகக் காணப்படுகின்றார். இவர் ஆன்மீகத்தளத்தில் நின்று கொண்டு பெண்ணியக் கருத்துக்களை எழுதிவருகின்றார். இவர் தனது கருத்துகளை சிறுகதை, கவிதை, நாடகம், கடிதம் என்ற வடிவங்களின் ஊடாக வெளிப்படுத்துகின்றார். சமஸ்கிருதத்தை சிறப்புப்பாடமாக கற்ற இவர், வங்கியின் முகாமையாளராக இருந்து ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய படைப்புகளில் பெண்ணியம்சார் கருத்துக்கள் பெண்களை வழிப் படுத்துவனவாக, பெண்களை சிந்திக்க தூண்டுவன வாக, மென்மையான உணர்வுகளாக வெளிப்படு வதை காணமுடிகின்றது. பெண்களை சிந்திக்கத் தூண்டும் வகையில் கடித இலக்கிய தொகுப்பொன்றை *'உனக்கொன்று உரைப்பேன்'* என்ற பெயரில் அண்மையில் வெளியிட்டிருக்கின்றார். இவருடைய எழுத்துக்கள் தனியே ஆண்களை சாடி குறை கூறுபவையாக அமைவதில்லை. ஆண், பெண் ஆகிய இருசாராரும் விட்டுக்கொடுத்து, பொறுத்துப்போகும் தன்மையினால் மகிழ்ச்சியான வாழ்வு வாழலாம் என்று கருதுகின்றனர். இக்கருத்தினையே

> *''குடும்பத்தில் பிரச்சினை வந்தால் அதைச் சமாளித்து, பொறுத்துப் போகும் தன்மை ஆணுக்கும் வேண்டும். பெண் ணுக்கும் வேண்டும், பொறுத்து போககூடிய விடயங்களையெல்லாம் தூக்கி யெறிந்துவிட்டு போர்க்கொடி தூக்குவதை ஆணும் செய்யக்கூடாது பெண்ணும் செய்யக்கூடாது''*

என தன் கடித இலக்கிய நூலில் குறிப்பிடு கின்றார். இவருடைய எழுத்துக்கள் எளிய மொழி நடையில் காணப்படுவதனால் அனைவரும் வாசித்து விளங்குவது இலகுவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லீம் சமூகத்தில் குறிப்பிடத்தக்க பெண்படைப்பாளிகளாக **கெக்கிராவ சஹானா, மஸீதா புண்ணியாமீன்** ஆகியோர் விளங்குகின்றனர். இவர்களின் எழுத்துக்களில் மத ஒடுக்கு முறைகளில் பெண்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் பேசப்படுகின்றன. ஏனைய சமயங்களுடன் ஒப்பிடும்போது இஸ்லாமிய சமயம் அதிதீவிரமாக பெண்களுக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அக்கட்டுப்பாடுகளை அங்கீகரிக்க இயலாதவர்களாக இவர்களது எழுத்துக்கள் காணப்படுகின்றன. முஸ்லீம் பெண்கள் தடைகளை தகர்த்து முன்னேற வேண்டும் என்ற கருத்துகள் இவர்களது படைப்புகளில் காணப்படுகின்றன. சஹானா சிறுகதை, கட்டுரை, கவிதை என்பவற்றை தளமாகக் கொண்டும், மஸீதா சிறுகதை, கவிதைகளை தளமாகக் கொண்டும் பெண்ணியக் கருத்துகளை முன்வைக்கின்றனர். முஸ்லீம் சமூகத்தில் 'மையத்தை' கூட பெண்கள் பார்க்க முடியாத நிலைமை காணப்படுகிறது. இக்கருத்தை தன் 'உண்மை = பெண்மை' என்ற சிறுகதையில்

> *'' 'பொம்புளைக்கு மைய்யித்த காட்ட மாட்டாங்களாம்' பக்கத்தில் ஒருத்தர் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்ட லத்தீபாவுக்கு தலை வலித்தது. எவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கிறோம்..? கடைசியாக ஒருமுறை Sir இன் முகத்தைப் பார்த்திட்டுப் போவதற்கு தானே. இப்போது இப்படிச் சொன்னால்...''*

என்று மிகவும் உணர்வு பூர்வமாக சஹானா கூறுகின்றார்.

மஸீதாவின் எழுத்துக்களில் பெரும்பா லானவை பெண்ணியத்தை கண்ணியமாய் மதிக்கத் தெரியாத காட்டுமிராண்டித்தனம், காடைத்தனம், சமுதாய அடக்குமுறை, ஒடுக்குமுறை ஆகிய வற்றிற்கு தீர்வு காணும் வகையினவாய், சரிவில்லாமல் வளர்ந்துவரும் படைப்புகளாகக் காணப்படுகின்றன. மஸீதா கணித விஞ்ஞான ஆசிரியையாக இருந்து கொண்டு கலை இலக்கியப் படைப்பாளியாக திகழ்வதும் சிறப்பிற்குரியது. இவர்கள் இருவரின் படைப்புகளிலும் முஸ்லீம்களின் பேச்சுத்தமிழ் இடம்பெறுவது அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது.

ஈழத்து பெண்ணியம் சார்ந்த படைப்பாளி களில் மிகவும் முக்கியமானவராகவும், பெண் விடுதலைக்காக போராடிய முன்னோடியாகவும் **சித்திரலேகா மௌனகுரு** வைச் சொல்லலாம். இவர் சோஷலிசப் பெண்ணிலைவாதி, கல்வியாளர், சிந்தனையாளர், சமூகவியளாளர், மானிடவியளாளர் என பல்பரிமாணங்களைக் கொண்டுள்ளார். பெண்ணிலை வாதத்திற்கு தன் எழுத்துக்களாலும், செயற்பாடுகளாலும் உரம் ஊட்டிக் கொண்டு இருப்பவர். 'மார்க்சியத்துக்குள்ளால்தான் தத்துவ ரீதியாக எனக்கு பெண்ணிலைவாதம் அறிமுகம் ஆனது' என நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார். பெண்களின் சமத்துவத்தை ஊக்குவிப்பதற்காக பாடுபடுபவர். வெளிநாட்டில் உயர்கல்வியை கற்றதன் காரணமாகவும், பல்வேறுபட்ட பெண் சமூகங்களை நோக்கியதன் காரணமாகவும் இவர் கோட்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக பெண் அடக்கு முறைகளை பகுப்பாய்வு செய்து எழுதிவருபவர். இவரது எழுத்துக்களில் அதிதீவிரமான பெண்ணியம் சார் கருத்துகள் முன்வைக்கப் படுகின்றன. தனியே எழுத்து மூலம் பெண்விடுதலை பற்றி பேசாது பெண்களுக்கென கழகங்கள், சங்கங்கள், கூட்டங்கள் என்பவற்றினை உருவாக்கி பெண்ணின் விடுதலைக்காக போராடி வரும் படைப்பாளியாக இவர் விளங்குகின்றார்.

உளவியல் நோக்குடன் பெண்ணியம் சார்ந்த இலக்கியம் படைப்பவர்களில் முதலிடம் வகிப்பவர் **கோகிலா மகேந்திரன்**. வாழ்க்கையில் பெண்கள் அனுபவிக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளை மென்மையான சிறுகதைகள் ஊடாக வெளிக் கொணர்வது இவரது இயல்பாக உள்ளது. இவர் தனியே பெண்ணியத்துடன் நின்றுவிடாமல் போரின் வடு, மனவொழுக்கம், சீர்மிய இயல்புகள், துன்பியல் உணர்வு நடத்தை மாற்றங்கள் என்ப வற்றை வெளிப்படுத்தும் வகையில் தன் படைப்புகளை படைத்து வருகின்றார். இவருடைய பெரும்பாலான கதைகளில் உள ஆரோக்கியத்தின் அவசியம் உணர்த்தப்படுகின்றது. உளவள ஆலோசகரான (counsellor) இவர் பெண்ணினத்திற்கு பல வகையிலும் ஆலோசகராக விளங்கிக் கொண்டு, தன் எழுத்து மூலம் பெண்களை விழிப்படையச் செய்து, பெண் விடுதலைக்காக போராடி வருபவர். உணர்வு பூர்வமான பிரச்சினைகளை உளவியல் ரீதியில் ஆராய்ந்து வெளிக்கொணர்வதில் சிறப்பான பெண்படைப்பாளியாக இவர் மிளிருகின்றார்.

**சந்திரகாந்தா முருகானந்தன்** அண்மையில் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவராயினும் இவரது படைப்புகளில் அனேகமானவை பெண்ணியம் சார் கருத்துகளை உடையவை. இவரது கட்டுரைகளில் அதிகமாக பெண்ணியம் பேசப்படுகின்றது. பெண்ணானவள் நாளுக்கு நாள் அனுபவிக்கும் துன்பங்கள், பாலியல் ரீதியான ஒடுக்கு முறைகள், குடும்பத்தில் பெண்கள் அனுபவிக்கும் துன்பம், வார்த்தைத் தாக்குதல்களால் பெண்ணில் ஏற்படும் பாதிப்பு என்பவற்றை இவரது கட்டுரைகள், சிறுகதை களில் தெட்டத் தெளிவாக வெளிக் கொணர்கிறார். பெண்ணை எமது சமூக கட்டமைப்பு தான் அடிமையாக கருதுகின்றது. இதில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும் என கருதுகின்றார் இதனையே,

> *''ஆணாதிக்க கருத்துக்களும் அதனால், ஊறிப்போய்விட்ட சமூகக் கட்டமைப்புகளும் ஒன்றாக இணைந்து பெண்ணை விழித்தெழ முடியாதவளாக பாரம்பரிய நம்பிக்கைகளில் ஊற வைத்து பெண்ணை தியாகமுள்ள தாயாகவும், பொறுமையுள்ள மனைவியாக வும் போலி முகம் காட்டவைத்து தொடர்ந்த நிலையைத் தகர்ப்பதில் பெண் விடுதலைப் போராட்டங்கள் படிப்படியாக வெற்றி கொண்டு வருகின்றன''*

எனக் கூறுகின்றார். பெண்ணின் உயர் விற்கு அவளது உடலும் அழகும் தடையாக உள்ளது எனக்கூறி, வயதுக்கு மீறிய இளமை, இயற்கை எழில்சார்ந்த தோற்றம் என்பன பெண்ணின் முன்னேற்றத்திற்கு விலங்கிடுகின்றன என்கிறார். இவரது எழுத்துக்களில் பெரும்பாலானவை பெண்ணை பெண்ணாக பார்த்து அவளின் உயர்விற்கு வழிசமைத்தல் அவசியம் என்பதை வலியுறுத்து வனவாக அமைத்துள்ளன.

விஞ்ஞான பட்டதாரியான **தாட்சாயணி** இன்று மிகவும் முக்கியமான இளம் பெண்படைப்பாளி யாக காணப்படுகின்றார். இவரது படைப்புகளில் போரின் வடு, பெண்ணியம், காதலின் காயம், தனி மனித அவலம் என்பன வெளிப்படுகின்றன. இவர் சமூகவியல் நோக்குடன் பெண்ணியத்தை கட்டி எழுப்புவர் ஆக காணப்படுகின்றார். இவர் மிகவும் மென்மையாக தனது பெண்ணியக் கருத்துகளை சிறுகதைகள் ஊடாக வெளிப்படுத்துகிறார். சமூக முன்னேற்றம், சமூக மேம்பாடு, சமூக அபிவிருத்தி, சமூக சீர்திருத்தம் என்பவற்றுடன் பெண்ணியத் தையும் தன் கருப்பொருளாக கொண்டு எழுதி வருகின்றார். சமூகப்பார்வையூடாக பெண்ணியம் சார்ந்த கருத்துகளை முன்வைக்கிறார்.

பெண்ணியம் சார்ந்த படைப்புகளை படைத்து வரும் இளம்படைப்பாளிகளில் **கார்த்தி காயினி சுபேஷ், பிரமிளா பிரதீபன்** என்போரும் குறிப்பிடத்தக்கவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன், முற்றுமுழுதாக பெண்ணியத்தை தமது படைப்புகளில் படைக்காது விடினும் ஈழத்து பெண் படைப்பாளிகளில் **குந்தவை, பத்மா சோமகாந்தன், யோகா பாலச்சந்திரன்** என்போர் முக்கிய மானவர்களாக திகழ்கின்றனர்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் இந்தியா போன்று பெண்கள் பெரும் கொடுமைகளை அனுப விப்பது குறைவு என்றே கூறலாம். பெண்ணே பெண்ணுக்குக் கொடுமை இழைக்கும் மாமியார் கெடு பிடி அங்கு அதிகம். இருப்பினும் பெண் ஒடுக்கு முறைகள், பாலியல் வன்முறைகள், சீதனக் கொடுமைகள், குடும்ப வன்முறை என்பன இங்கும் காணப்படுகின்றன.

இவற்றுள் தலித்துகளாக இருக்கும் பெண்களிற்கு இழைக்கப்படும் கொடுமைகள் ஏனைய பெண்களை விட வேறுபட்டவையாகவும், தீவிரத் தன்மை உள்ளவையாகவும் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் பெண்ணிலைவாதிகள் தலித்தியப் பெண்களுடைய பிரச்சினைகளை தீவிரத் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் ஓரளவு வெளிக்கொண்டு வருகிறார்கள். பெண்ணியவாதிகள் சிலர் தலித்துக்களாக இருப்பதே காரணம் எனலாம். ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் தலித் பெண்கள் பெண்ணிய வாதிகளாகவோ, படைப்பிலக்கிய வாதிகளாகவோ இன்னும் உருவாகவில்லை. இங்கு பெண்ணியக் கருத்துக்களை முன் வைக்கின்ற ஆக்க இலக்கிய வாதிகளான பெண்கள், தலித்பெண்கள் பக்கம் தமது பார்வையை திருப்பாது இருப்பது துரதிஷ்டமே. இவற்றை உணர்த்த வேண்டியது இன்றைய பெண்ணியவாதிகளான படைப்பாளிகளின் கடமையாகும். பெண்மொழி என்பது பச்சையாக, கொச்சையாக எழுதுவதுதான் என்னும் தவறான கருத்து ஒரு சில பெண்ணிய படைப்பாளிகளிடம் இருந்து வருகின்றது. ஆனால் ஈழத்துப் பெண் படைப் பாளிகள் அவ்வாறு இல்லாது தமது படைப்பு களைப் படைக்கின்றார்கள். இத்தகைய நோக்கு ஈழத்துப் பெண்ணியப் படைப்பாளிகளின் சிறப்பான அம்சம் எனலாம். இவர்களிடம் இருந்து இன்னும் பல செழுமையான படைப்புகள் வெளிவர வேண்டும்.□

---

# குண்டுமணி

பாரதியின் வீட்டிலே கண்ணன் குடிபுகுந்த
வாறு எனக்கு வந்து வாய்த்தவனே குண்டுமணி
மாலை படலையிலே கண்டதுமே தாவி வந்து
காலின் செருப்பெடுத்து காற்றாய்ப்பறப்பாயே
வெள்ளத்தில் போன உன்னை மீட்டெடுத்தான் என் மைந்தன்
பல்துலக்கி உன்னைக் குளிப்பாட்டுவாள் என் மகள்
தறுகுறும்பு யாவும் பொறுத்துத் தனது கையால்
ஒரு பிடிதந்தன்றி உறங்காளே என் மனைவி
உண்டகளையில் உடல் சாய்த்தால் உன் முதுகை
அண்டக் கொடுத்தென் அருகில் படுப்பாயே
ஊர் நீங்கும் நாளில் உனைப்பேண முன்வந்து
வேர்விட்ட உறவெல்லாம் விக்கித்து நின்றுவிட
ஊண் துறந்து வாடி உருகி உயிர்துறந்தாய்.
நான் உடைந்து போகும்படி கண்ணால் விடைபெற்றாய்

மாதுளையின் கீழ் உன்னை மண்ணுக்குள் மூடிய என்
பாதகத்துக்கோ இப்பரிதவிப்பை தந்து சென்றாய்
முற்றம் வெளிக்க முழிவியளம் இழந்து
வெட்டவெளியில் எனை ஏன் விட்டாய் குண்டுமணி?
பற்றுக்களெல்லாம் அறுத்தல் ஈடேற்றம் என
கற்றதமிழ் எனக்கு கைகொடுக்கவில்லையடா
மண்ணுக்குள் போய்விட்டாய் என்று மனம் ஒப்பவில்லை
கண்ணுக்குள் நிற்கின்றாய் காலை முகர்ந்தபடி!



சோ.பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலை பேசி

ராதிகா

"வருகிற வரத்தைப் பார்க்க இண்டைக்கும் சரிவரல்லப் போல"

சித்தாலேபவை முழுங்கால்களுக்குத் தடவிக் கொடுத்தபடி தன்னுள் முணுமுணுத்துக் கொள்கிறாள். முழங்கால் வலியை விட மனவலி முன்னுக்கு நின்றது.

"என்ன ஏதாச்சும் கதைச்சியளோ?" என்று வாய்விட்டே கேட்டாள், அருகில் வந்த கணவனிடம்.

"காரியம் நடந்திருந்தா இப்படியே வருவன்... நான் அண்டைக்கே சொன்னன் தானே. உனக்கும் உன்ர கௌரவம் இப்ப எல்லாம் தலைகீழாய்ப் போச்சுது"

"இப்படிப் புராணம் ஓதினா எனக்கு விளங்குமே?" என்று சற்று ஊன்றிக் கதைத்தவள் சித்தாலேபவை மூடிவிட்டு எழும்பி நகர்ந்தாள். கந்தப்புவினால் அடக்க முடியவில்லை. தானே வலியச் சென்று, "அவன் டெலிபோன மாத்தீற்றானாம்... அவன்ர நம்பர் வேல செய்யாதாம், இனிமேல் அவனா எடுத்தாச் சரி" என்று கூற, அது மீனாட்சியின் நகர்வைத் தடுத்தது.

"ரெண்டு நாளா டெலிபோன் அவனிட்ட இல்லாமல், அவள் இங்கிலீசில கதைக்கேக்கயே சொன்னன்தானே. உன்ர மகன் வெளிநாடு போறனென்று இஞ்சயே ஆரோவெள்ளச்சியோட போட்டான்" பொரிந்து தள்ளியவாறு சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு மாமரத்தடியில் வந்தமர்ந்தார்.

மீனாட்சிக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு... வந்து சரிந்தவள் திடீரென யோசனை தோன்றியவளாய் தேவாரப் புத்தக மட்டையில் குறித்து வைத்த அவனது டெலிபோன் இலக்கங்களை அழுத்தி காதுக்கருகில் பிடிக்கிறாள். மனதைச் சுதாகரித்து ஆவலாகிறாள், "ஹலோ" என்ற ஒலியைக் கேட்க.

ஆனால்.. பாவம் மீனாட்சி! மீண்டும் தலை சுற்றியது. "அவள் தான் இங்கிலிசில கதைக்கிறாள்" என்றவாறே மாமரத்தடிக்கு விரைகிறாள்.

"இஞ்ச கொண்டுவா, தமிழ்ல கதைப்பியோ என்று கேட்டுப்பார்ப்பம். ம்.. அவள் அதுக்கிடையிலே நிப்பாட்டீற்றாள் கொண்டு போ"

கந்தப்புவினால் முகத்தை மட்டும்தான் துடைக்க முடிகிறது. மனதைத் துடைக்க அவன்தான் வர வேண்டும்.

அவன்?

அவன்தான் இருவர்தம் ஏகபுத்திரன். இருபத்தெட்டு வருடங்களாகக் கட்டிக் காத்து வளர்த்து இன்று வெளிநாடு செல்வதற்காய் கொழும்பிற்குச் சென்றவன்தான். அம்மா, அப்பா என்று சொல்லி ஒரு மாதத்திற்கும் மேலாக எவ்வித தொடர்புமில்லை. அக்கறையின்மையால் அல்ல, யாழ்ப பாணத்தில் நிலவும் "கவரேஜ் கட்" தான் காரணம். பெற்றோருடன் கதைக்கும் ஆவலுடன் ஒரு கைத்தொலைபேசியையும் கொடுத்துச் சென்றான்.

பெற்றோரால் அவனைவிட்டுப் பிரிய முடியவில்லை. மனதைக் கல்லாக்கிக் கொண்டு.



"எங்கட காலம்தான் போயிற்றுது அவனாவது எங்க இருந்தாலும் நல்லா இருந்தால் சரி" என்ற இருவரதும் முடிவோடு புறப்பட்டான் வெளிநாடு செல்வதற்கு.

வெளிநாடு செல்லக் காத்திருக்கும் ஏராளமானோரில் இவனும் ஒருவன்.

"டேய் பாபு! அம்மாவுக்கு ஒருக்கா நான் எடுத்ததா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிடடா. வீட்டுக்குக் கதைக்கிற தென்டால் தெரியும் தானே உனக்கு கவரேஜ் பிரச்சினை. நான் சுகமாய் இருக்கிறன் என்று சொல்லி விடடா மச்சான்" என கியூட் தன் நண்பனிடம் கூறுவதும். பாபு ஆமாம் போடுவதும் வழக்கமாகி விட்டன. மீனாட்சி கண்களைக் கசக்கி மூக்கைச் சீறுகிறாள் வாசலோரம்.

"இப்படியே ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டு ஊமையும் ஊமையும் மாதிரி இருக்கேலாது. நான் கைதடிக்குப் போகப் போறன். நீயும் வாறதென்றால் வா" என்றார் கந்தப்பு திடமாக.

"நீங்க போனா நான் ஏன் பிறகு இருப்பான்" என்றவாறே சீலைத் தலைப்பில் முடிந்திருந்த நூறு ரூபாய் தாளை பௌவியமாய் எடுத்து தாஸையாவின் கடைக்குச் சென்று "டெலிபோன் காட் ஒன்று தாங்க" என்றாள்.

அருகில் நின்றவனிடம், "தம்பி இதை ஒருக்கால் ஏத்தி விடும்" என்று கூற அட்டையும் தொலைபேசியும் அவன் கைகளில்.

ஐயோ, பாவம் மீனாட்சி!

தொலைபேசியில், அட்டையில் இருந்த இலக்கங்கள் பதியப்படவில்லை. அவன் தான் நினைத்த இலக்கங்களைப் பதிந்து விட்டு,

"சரியம்மா காசு போட்டாச்சு" தொலைபேசியைக் கொடுத்துவிட்டு நகர்கிறான்.

அவனுக்கு இன்று நூறு ரூபாய் அட்டை இலவசம்.

"ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுக்காரர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்" என்பது மீனாட்சி வரையில் நிஜமாகி விட்ட ஒன்று.

வீடு வந்து சேர்ந்தவள், மனத்தவிப்புடன் "கடைசியா இப்ப எடுத்து அவனிட்ட குடுக்கச் சொல்லி கேட்டுப் பார்ப்பம்" என்று முணுமுணுத்தாள்.

இலக்கங்களை நடுங்கிய விரல்களால் அழுத்தி காதுக்குள் செலுத்துகிறாள் டெலிபோனை.

"த நம்பர் இஸ் நொட் இன் யூஸ்
பிளீஸ் றை எகயின் லேற்றர்"

கந்தப்புவும் ஆவலுடன் அருகில்.

"பிள்ள! ஒருக்கா கியூட்டிற்ற குடுங்கோ அம்மா கதைக்கிறன் என்று..." சொல்லி முடிவதற்குள், "ம்... பிடிபிடி, அது கீக் கீக் என்றுது. கொண்டு போய்ப் போடு அங்கால. இப்பத்த இளந்தாரியள் மாதிரித்தான் இதுகளும்"

டெலிபோன் செல்கிறது ஒரு மூலைக்குள்

"வேலை இல்லாததுகளுக்குத் தான் இதுகள் சரி"

வீட்டிற்குள் நுழைந்து தனது சீருடையான வெள்ளை வேட்டியையும் கோடன் சேட்டையும் சால்வையையும் மடித்து வைத்து ஆயத்தமாகிறார், கந்தப்பு.

மீனாட்சிக்கு முழங்கால் குத்தும் மனக்கவலையும் போட்டி போடுகின்றன.

பொழுதும் சாய்கிறது. இருவரும் சாய்ந்து கொள்கின்றனர் பொழுதோடு பொழுதாக.

***

"சொன்னால் பெரிசா சத்தம் போடுவியள். ஒருக்கா இவன்ர நம்பர இங்கிலிஷ் மாஸ்ரரிட்ட குடுத்துக்கதைக்கச் சொல்லுங்கோவன். அவர் பள்ளிக்குப் போகமுதல் போயிட்டு வாங்கோவன்"

"நீ சொல்றதைக் கேட்டால் ஊரைக் கூப்பிடுவாய் போல. அவனிட்டப் போய்க் கேட்டு உன்னுடைய மகன்ர கேவலத்தை மற்றவைக்கும் சொல்லப் போறாய்"

அப்பளம் போல் பொரிந்தார் கந்தப்பு.

இனிமேல் ஆகப்போவது ஒன்றுமில்லை என்ற தீர்மானத்துடன் இருவரும், புறப்படுகின்றனர் கைதடி முதியோர் இல்லத்திற்கு.

என்ன செய்வது? இருவரும் முதியோர் இல்லத்தில் புதிதாய் இணைந்த பள்ளி மாணவர்கள் போல்.

"நாங்கள் மட்டுமா இவர்களும் இப்படித்தானே"


மீனாட்சி, ஏனையவர்களைப் பார்த்து தன்னைத் தானே ஆற்றுப்படுத்தத் தான் முடிகிறது. □□□

## ஜீவநதியின் அஞ்சலி

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்து, கூட்டுறவு இயக்க இலட்சியங்களின் நடைமுறைகளுள் ஒன்றாய் கலை இலக்கியங்களின் பேணுகைக்கான ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கி வந்த திரு. த. சிதம்பரப்பிள்ளை அவர்கள் மறைந்துவிட்டார். அன்னாருக்கு 'ஜீவநதி' தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நேர்காணல்*



**மலையகத்திலிருந்து 1988 ஜனவரி முதல் வெளிவந்துகொண்டிருக்கும் 'கொழுந்து' எனும் கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியரான திரு. அந்தனி ஜீவா அவர்கள் பல்வேறு இலக்கிய வகைமைகளுடன் பரிச்சயம் உள்ளவராவார். ஈழத்து இலக்கியங்களை தமிழ்நாட்டிலும் ஏனைய தமிழர் வாழும் நாடுகளிலும் அறிமுகஞ் செய்யவேண்டும் என்பதில் தீவிர ஈடுபாடு காட்டி வரும் அவர், உலகத் தமிழச் சிற்றிதழ்கள் சங்கத்தின் இலங்கைக் கிளையை நிறுவுவதில் முன்நின்று உழைத்தவராவார். திரு. அந்தனி ஜீவா அவர்களுடனான நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்காகத் தருகிறோம்.**

**1) மலையக இலக்கியம் பற்றிப் பேசும்போது, அந்தனி ஜீவா என்ற பெயர் தவிர்க்கப்பட முடியாத அளவுக்கு அதனோடு தொடர்புபட்டுள்ளீர்கள். மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களென யார் யாரைக் குறிப்பிடுவீர்கள்? அவர்கள் எவ்வகையில் மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றினார்கள்?**

மலையக இலக்கியம் பற்றிக் குறிப்பிடும்பொழுது - அதன் முன்னோடியாக வாய்மொழி இலக்கியமான நாட்டார் பாடல்களைத் தான் குறிப்பிடமுடியும். அதன் பிறகு மலையக இலக்கியத்தின் முன்னோடிகளாக அதற்கு நீர் பாய்ச்சியவர்களாக "தேசபக்தன்" கோ. நடேசய்யரையும் அவரது மனைவி மீனாட்சி அம்மையாரையும் தான் குறிப்பிட வேண்டும். மலையக ஆக்க இலக்கியம், அரசியல், பத்திரிகை, தொழிற்சங்கம் என கோ. நடேசய்யர் முன்னோடியாக திகழ்ந்துள்ளார். மலையகத்தின் முதற் சிறுகதையை இவர் எழுதியுள்ளார். மலையக கவிதைத் துறையின் முன்னோடி மீனாட்சி அம்மையார் மலையக கவிதைத் துறையின் முன்னோடி மாத்திரமல்ல. ஈழத்து கவிதைத் துறையின் முன்னோடியுமாவார். இன்னொருவர் மலையக மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை. இவரின் பங்களிப்பும் மிக முக்கியமானது.

**2) ஈழத்து இலக்கியத்தில் மலையக இலக்கியத்திற்கான சரியான 'கணிப்பு' கிடைத்துள்ளது எனக் கருதுகிறீர்களா?**

ஆம், நிச்சயமாக, இன்று மலையகம், மலையக இலக்கியம், மலையக மக்கள் என்ற அங்கீகாரம் கிடைத்து விட்டது. ஈழத்து தமிழ் இலக்கியத்தில் "மலையக இலக்கியம்" தனித்துவமுள்ளதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**3) 'கொழுந்து' என்ற சஞ்சிகையின் 26 இதழ்களை இதுவரை வெளிக்கொணர்ந்துள்ளீர்கள். இச்சஞ்சிகை வெளியீட்டில் நீங்கள் எதிர்கொண்ட இடர்பாடுகள் யாவை?**

கொழுந்து என்ற சஞ்சிகையை 1988 - ல் கண்டியிலிருந்து வெளியிட்டேன். மிகவும் சிரமப்பட்டு, இதுவரை 27 - இதழ்களை கொண்டு வந்துள்ளேன். இந்த கொழுந்து இதழ்களை வெளியிட நான் பட்ட சிரமங்களை ஒரு நாவலாக எழுத முடியும்.

**4) பல்வேறு இலக்கிய வகைமைகளில் ஈடுபட்டுவரும் நீங்கள் எந்த இலக்கிய வகையில் உங்கள் முத்திரையைப் பதிக்க விரும்புகிறீர்கள்?**

நான் ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதியுள்ளேன் - பின்னர் நாடகத் துறையில் தான் எனது பங்களிப்பு சிறப்பாக அமைந்துள்ளது என பலரும் கூறியுள்ளனர். 'கொழுந்து' சஞ்சிகையை தொடர்ந்து வெளியிட்டு ஒரு சாதனையை படைக்க வேண்டும் என்பதே என் அவா.

**5) டானியல், எஸ். பொ., ஜீவா போன்ற அக்கால இலக்கிய ஆளுமைகளுள் உங்களிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியவர் என எவரைக் குறிப்பிடுவீர்கள்? எவ்விதத்தில் அத்தாக்கம் அமைந்தது?**

தலித் இலக்கிய முன்னோடி கே. டானியல் யாழ்ப்பாணத்தில் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை எழுத்தில் கொண்டு வந்தவர். அவர் படைப்புகள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. எஸ். பொ.வின் எழுத்துக்கள் என்னை வாசிக்கத் தூண்டியது - டொமினிக் ஜீவாவின் 'தனிமனிதனாக' மல்லிகை தொடர்ந்து வெளியிடும் அவரது உழைப்பு சஞ்சிகைகள் வெளியிடுவோர்களுக்கு ஒரு வழிகாட்டியாகும். ஆனால் - என்னை இலக்கியத் துறையில் பாதித்தவர்கள் பாரதியும் புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும். வாழும் எழுத்தாளர்களில் ஜெயகாந்தனை மிகவும் மதிக்கிறேன்.

**6) உங்களுடைய இலக்கியப் பணிகளுள் உங்களுக்கு ஆத்ம - திருப்தியைத் தந்த பணியாக எதனைக் கருதுகிறீர்கள்?**

எனது முகம் தெரியாதவர்கள், என் முகவரியை தெரிந்து என் எழுத்துக்களைப் பற்றி தெரிவிக்கும் கருத்துக்கள், எனது "விதி" நாடக முயற்சியின்போது நேரடியாக பார்வையாளர்கள் சொல்லும் கருத்துக்கள் எனக்கு மிகுந்த ஆத்ம திருப்தியை தந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7) தமிழகத்துடன் பல தொடர்புகளைக் கொண்டிருக்கும் நீங்கள், தமிழக - ஈழத்து இலக்கிய உறவைப் பேணுவதில் என்ன பங்களிப்பை வழங்கி வருகிறீர்கள்?**

நான் ஒவ்வொரு தடவையும் தமிழகம் செல்லும்போது நம்மவர்களின் படைப்புகளை எடுத்துச் சென்று அறிமுகப்படுத்துகிறேன் - இங்கு வெளிவரும் சஞ்சிகைகள் அனைத்தையும் எடுத்துச்சென்று அறிமுகப்படுத்துகின்றேன். அது மாத்திரமல்ல, 2007 - ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற "அயலகத் தமிழர் வாழ்வும் இலக்கியமும்" என்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றபொழுது, கருத்தரங்கில் கலந்து கொண்ட அயல் நாட்டவர்களை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சுப்பிரமணியம் தஞ்சைப் பல்கலைக்கழகத்துக்கு அழைத்து பாராட்டு நடத்தியபொழுது, தஞ்சைப் பல்கலைக்கழக நூலகத்தில் ஈழத்து தமிழ் நூல்களும் புலம்பெயர்ந்தவர்களின் நூல்களும் இடம்பெற வேண்டும் என வேண்டுகோளை விடுத்து என்னிடமிருந்த இரண்டு நூல்களை அவரிடம் வழங்கினேன். அவர் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு, அப்பொழுதே அவர் அங்கிருந்த அயல்மொழி பிரிவுக்கு தலைவராக இருந்த பேராசிரியர் கார்த்திகேயனிடமும் பல்கலைக்கழக நூலகரிடமும் நூலகத்தில் அயல்மொழி பிரிவு என்ற பகுதியை உருவாக்கி அயல்நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை வைக்கும்படி கூறினார். பின்னர் நாடு திரும்பிய ஈழத்து எழுத்தாளர்களின் ஒரு தொகை நூல்களை அங்கு அனுப்பியதுடன், பத்திரிகை சஞ்சிகை வாயிலாகவும் 100க்கு மேற்பட்ட எழுத்தாளர்களுக்கு கடிதமூலம் நூல்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டேன். அங்கு இப்பொழுது எம். பில், டாக்டர் பட்ட ஆய்விற்கு சில பட்டதாரி மாணவர்கள் ஆய்வு செய்வதை இந்த தடவை திருச்சி சென்றபொழுது அறிய முடிந்தது.

**8) 'மலையக வெளியீட்டகம்' தனது வெளியீடுகளுக்கான நூல்களைத் தேர்ந்தெடுக்கும்போது பின்பற்றும் பிரமாணங்கள் எவை?**

மலையக எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் தான் 'மலையக வெளியீட்டகம்' என்ற அமைப்பை உருவாக்கினோம். ஆரம்பத்தில் நான், சாரல்நாடன், கவிஞர் முரளிதரன் மூவருமே இதன் பங்காளிகள். பின்னர் - நான் மாத்திரமே இதன் செயற்பாட்டாளராக இருக்கிறேன். நூல்களை வெளியிட்டு கையைச் சுட்டுக் கொண்டதே உண்மை - இருந்தாலும் "தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா" என்ற மகாகவி பாரதி பாடலையே நினைத்துக் கொள்வேன் - மலையக வெளியீட்டகம் மூலம் கவிஞர் குறிஞ்சி தென்னவனின் கவிதைகளை வெளியிட்டு அவரை நாடறியச் செய்தோம். மலையகப் பெண் படைப்பாளிகளின் முதற் சிறுகதைத் தொகுதியைக் கொண்டு வந்தேன். மலையக மக்களோடு ஆரம்ப கால முதல் இன்று வரை இரண்டறக் கலந்திருப்பது தொழிற் சங்கங்கள். ஆனால் அவர்கள் செய்யாத பணியை மலையக கலை இலக்கியப் பேரவை என்ற அமைப்பின் மூலமும் மலையக வெளியீட்டகம் மூலமும் நாங்கள் செய்தோம் என்ற வரலாற்றுத் தகவலை கூறி வைக்க விரும்புகிறேன்.

**9) 'ஜீவநதி' வாசகர்களுக்காக உங்களின் தற்போதைய இலக்கிய முயற்சிகள் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்?**

இலங்கை திருநாட்டில் எந்த மூலை முடுக்கிலும் சிற்றிதழ்கள் வந்தால் தேடிப் படிப்பதுடன், மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவது எனது வழக்கம்... இப்பொழுது எனது நோக்கம் இலங்கையில் வெளிவரும் சிற்றிதழாளர்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வருவது, அதற்காக உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்க இலங்கை கிளையை அண்மையில் ஏற்படுத்தினோம். உதாரணமாக 'ஜீவநதி' யாழ்ப்பாணத்தில் எங்கோ ஓரிடத்தில் வெளிவருகிறது - இதனை இலங்கை எங்கும் வாழும் இலக்கிய வாசகர்களிடம் எவ்வாறு கொண்டு செல்வது என்பது தான் எமது திட்டம். இதன் முதல் நோக்கமாக தமிழ் சிற்றிதழ்களின் கண்காட்சியையும் கருத்தரங்கையும் வாசிப்பு மாதமான அக்டோபரில் நடத்த வேண்டும் என்பதே. ஜீவநதி வளரட்டும். வாழ்த்துக்கள். □□□

**நூல் அறிமுகம்**




**நூல் - கொழுந்து**

**ஆசிரியர் - அந்தனி ஜீவா**

**தொடர்புக்கு - 57,மகிந்த பிளேஸ்**
**கொழும்பு - 06**
**0776612315**

**விலை - 30/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையைத் தொலைத்தல், தேடல், பிரக்ஞையாய் இருத்தல்...



இ.ஜீவகாருண்யன்

கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, நீலாவணை போன்ற கிராமங்களுக்குப் பயணம் செய்பவர்கள் அவற்றின் தனித்துவ அழகில் திளைக்காதிருக்க முடியாது. கடற்கரையில் பதிதடம் கரைய நடக்கும் ஒருவன் அல்லது மரங்கள் செறிந்த மூட்டத்துள் நடக்கும் ஒருவன் கவிஞனாகாது இருக்கமுடியாது என்று எனக்குத் தோன்றியதுண்டு. கொஞ்சம் அதீத கற்பனைதான். அந்தக் கற்பனையைத் தூண்டுவது அந்தப் பிராந்தியத்தின் இயற்கை அழகு. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த மூன்று கவிஞர்கள் என் ஞாபகத்துக்கு வருகிறார்கள். நீலாவணன், எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம்.

உதாரணத்துக்கு நீலாவணன், எம்.ஏ.நுஃமான் ஆகியோரது கவிதைகளில் ஒவ்வொன்றைப் பார்த்துக் கொண்டு சண்முகம் சிவலிங்கத்திடம் வருவோம். நீலாவணனின் 'ஓ! வண்டிக்காரா' என்ற கவிதை.

*"ஓ... ஓ... வண்டிக்காரா*
*ஓட்டு வண்டியை ஓட்டு*
*போவோம் புதிய நகரம் நோக்கி*
*பொழுது போம் முன்னோட்டு.*

*காவில் பூவில் கழனிகளெங்கும்*
*காதல் தோயும் பாட்டு*
*நாமும் நமது பயணம் தொலைய*
*நடந்து செல்வோம் கூட்டு*

*பனியின் விழிநீர்த் துயரத்திரையில்*
*பாதை மறையும் முன்னே*
*பிணியில் தோயும் நிலவின் நிழல்நம்*
*பின்னால் தொடரும் முன்னே..."*

எவ்வளவு உன்னதமான கவிதை! ஒவ்வொரு வரியும் வாழ்வின் உண்மையைத் தேடி நடத்துகிறது பயணம். "போவோம் புதிய நகரம்" எழுப்பும் நம்பிக்கைக் குரலும் 'பொழுது போம்'; 'பயணம் தொலைதல்'; 'பனியின் விழிநீர்த்திரை' (எவ்வளவு அற்புதமான படிமம் பிணியில் தோயும் நிலவு நோயில் தொய்ந்துபோகும், முதுமையில் தொய்ந்து போகும் உடல், தேய்பிறை என்று வாழ்வின் மறுபக்கத்தை நினைவுறுத்தியவாறே, "காவில், பூவில், கழனிகள் எங்கும் காதல் தோய இயற்கையோடு இயைந்து வாழக்கோரும் வாழ்க்கையின் நோக்கத்தைத் தொகுத்துத் தருகிறது கவிதை. இது போன்ற பாடல்கள் சாகாவரம் பெற்றவை என எனக்குத் தோன்றுவதுண்டு.

அடுத்த கவிஞர் எம்.ஏ.நுஃமான். அவரது 'உலகப்பரப்பின் ஒவ்வோர் கணமும்' என்ற கவிதையிலிருந்து சில வரிகளை எடுத்துக் காட்டுகிறேன்.

*"குளத்தங்கரையில் குளிர்ந்த புற்களை*
*பச்சைக் கம்பளப் படுக்கையாய் நினைத்து..."*

*"யாரோ ஒருவன் அமைதிக்காக*
*ஓய்வு தேடி உட்கார்ந்திருக்கவா*
*புற்கள் இங்கே புதிதாய் முளைத்தன?"*

*"புற்கள் ஊடு புகுந்து திரியும்*
*சிற்றெறும் பிதனைச் சிந்தனை செய்யுமா?"*

*"மேய்ந்து மேய்ந்து வீடு செல்கின்ற*
*மாடுகள் பற்றியும்*
*வயல் வரம்புகளில்*
*குந்தி இருக்கும் கொக்குகள் பற்றியும்*
*சத்தமிட்ட தவளை பற்றியும்..."*

*"வெள்ளிகள் வானில் மினுங்கிக் கிடக்குமே*
*சந்திரன் எழுந்து தண்ணொளி சிந்துமே"*

*"அக உலகத்தின் ஆழத்தே நான்..."*
*ஒவ்வோர் உயிரும்*
*ஒவ்வோர் உலகாய்ச்*
*சுற்றிச் சுழல்கின்ற வழியில்*

*"பாழ்வெளிக்கப்பால்*
*தனித்த பாதையில்..."*

*"யார் என் நண்பர்?*
*யார் என் பகைவர்?"*

*"இருட்டு வந்தெனை எழுப்பிவிட்டது!*
*மரங்கள் அசைந்து மகிழும் படியாய்க்*
*காற்று வீசிக் கடந்து சென்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேற்கில் இருந்தோர் வெள்ளி வீழ்ந்தது"*

*"இன்னும் இன்னும்*
*இப்படி இப்படி...*
*எல்லா உயிர்களும் இயங்குகின்றன"*

*"செய்மை அண்மையில் செல்வதைக்*
*கண்டேன்"*

இயற்கையோடு இயைந்து செல்லும் இந்தத் தேடலின் பின்னால் ஓர் ஆழமான மனம் இருக்க வேண்டும். செயற்கையான வரட்டுத் தத்துவங்களில் தன்னைத் தொலைக்காதபோது நுஃமான் ஒரு கலைத்துவமான கவிஞர். புல்வெளியில் அமர்ந்திருக்கும்போது தன்னைச் சுற்றிய இயற்கையைக் காண்கிறார்; இந்த இயற்கையுள் தன் இடம் எது என்ற விசாரத்தில் ஈடுபடுகின்றார்; சிற்றெறும்பு, மாடு, கொக்கு, தவளை, இருட்டு, காற்று, மரங்கள், வெள்ளிவான், சந்திரன் எனப்பிரபஞ்சத் தேடலை நடத்தும் நுஃமான்.

*"அக உலகின் ஆழத்தில் நான்..."*

*"ஒவ்வோர் உயிரும்*
*ஒவ்வோர் உலகாய்ச்*
*சுற்றிச் சுழல்கையில்..."*

*"யார் என் நண்பர்?*
*யார் என் பகைவர்?"*

என்கிறார். சின்னப் பொறிகளிலிருந்து தப்பி பூரணத்துடன் இணைந்துகிடக்கும் அனுபவம் இது. இவ்வளவு பீடிகையும் சண்முகம் சிவலிங்கத்தைப் பற்றி எழுத வருமுன் அவசியம் என்று படுகிறது. இந்த வழியிலேதான் சண்முகம் சிவலிங்கமும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆழத்தேடல்; வாழ்க்கையைத் தொலைத்தலும் தேடலுமான இருமையுள் அவர்படும் அவஸ்தையே அவரது கவிதைகள்.

இந்தக் கட்டுரையை எழுதுதற்கு சண்முகம் சிவலிங்கத்தின் 'நீர்வளையங்கள்' என்ற கவிதைத் தொகுதியை மட்டுமே எடுத்துக்கொள்கிறேன். அதில் அவர் 1966ஆம் ஆண்டிலிருந்து 1988 வரை எழுதிய 54 கவிதைகள் உள்ளன. இந்த 23 வருடங்களில் 1975, 1981, 1983, ஆம் ஆண்டுகளில் அவர் கவிதை எதுவும் எழுதவில்லை அல்லது எழுதியிருந்தால் இந்தத் தொகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அவரது சிறுகதை களோ விமர்சனங்களோ கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை; காரணம் அவை தொகுப்பாக வரவில்லை; அவரே தன் முன்னுரையில் இந்தக் கவிதைத் தொகுதியைப் பற்றிச் சொல்லியிருப்பது இதுதான்: "இந்தத் தொகுதியை இலங்கைத் தமிழ்த் தேசியப் போராட்டத்துடன் அவ்வளவு சம்பந்தப்படாத 83க்கு முந்திய கவிதைகளாக கொள்ளவே வேண்டும். ஆமை போல் ஐந்தடக்கிய அந்த ஊமைக் குரல்கள் பின்னொரு நாளில் வெளிவரக்கூடும். 83க்கும் 87க்கும் பிற்பட்ட கவிதைகள் ஒரு கால நிறைவுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன." எனவே இவ்வென் முயற்சி அவரைப் பற்றிய முழுமையான தேடலாக இராத போதிலும், அவரது கவிதையாக்க நெறியையும் மனப் போக்கையும் புரிந்துகொள்ள உதவுமென்றே நம்புகிறேன்.

"சண்முகம் சிவலிங்கம் கிழக்கிலங்கையில் பாண்டிருப்பு என்ற கிராமத்தில் 1939ஆம் ஆண்டு பிறந்தவர். அவர் பிறந்தது ஒரு வைதீக இந்துக் குடும்பத்தில். அவர் பெயரே அதைச் சொல்லும். ஆனால், இளம் வயதில் பாடசாலைக் காலத்திலேயே கத்தோலிக்கராக மதம் மாறியவர் (விலகிச் செல்லும் மையங்களில் அவர் குறிப்பிடும், பதினொரு வயதில் அவரை ஊடுருவிய தாடிவாலாவின் செல்வாக்கு அதற்குக் காரணமாக இருக்கலாம்). அதன் பொருட்டு அவர் வீட்டில் அடியுதை வாங்கியவர். ஒரு கத்தோலிக்க குடும்பத்திலேயே திருமணம் செய்துகொண்டவர். ஆறு ஆண்பிள்ளைகளின் தகப்பன். அவரது கிராமத்தில் ஸ்ரீபன் (மாஸ்ரர்) என்ற கிறிஸ்தவப் பெயராலேயே இன்றைக்கும் பலர் அவரை அறிந்துவைத்திருக்கின்றனர். கேரளப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெற்ற அவர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார். இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் பலவும் எழுதியுள்ள இவர் பிறமொழிக் கவிதைகளையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்."

*('நீர்வளையங்கள்' தொகுதியிலுள்ள எம்.ஏ.நுஃமானின் முன்னுரையிலிருந்தும் 'காலச்சுவடு' வெளியீடாக வந்துள்ள பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' தொகுதியிலிருந்தும் தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.)*

*"சண்முகம் சிவலிங்கம், அ.யேசுராசா போன்றவர்கள் மாக்சியத்தை தம் நோக்காக வரித்துக் கொண்டவர்கள். ஆனால் இலக்கியச் சிருஷ்டி என்று வரும்போது இவர்கள் ஆக்கங்கள் இவர்கள் வரித்துள்ள மாக்சியத் தளங்களை மீறிச் செல்வதைப் பார்க்கிறோம்.*

*...சண்முகம் சிவலிங்கத்தின் ஆரம்பக் கவிதைகளில் ஒன்றான 'காற்றிடையே' என்ற கவிதை மார்க்சியப் பார்வைக்கு ஒத்துப்போகக்கூடிய ஆத்மார்த்தப் பண்புடைய கவிதைக்கு நல்ல உதாரணம். கவிதையின் கரு, ஓர் இரவில் பிள்ளையின் சுகயீனத்தால் மாறிமாறித் துன்பப்படும் கணவன் மனைவியைப் பற்றியது. ஆனால் அதன் பின்னணியாக எழுப்பப்படும் இரவின் சூழல், அத் தம்பதிகளின் உடன்நிகழ் துன்பத்துக்குப் பின்னணியாய் இருப்பதைவிட, ஏதோ ஒன்றைப் பிரிந்துவிட்ட முழு மனிதஇனமும் படுகின்ற பெருந் துயர்களுக்குப் பொதுப் பின்னணியாகவே அமைகிறது.*

*...அநேகமாக இவரின் அத்தகைய கவிதைகள் எல்லாம் மேற்கத்தைய இருப்புவாதகீற்றுகளும், ஆத்மார்த்தப் படிவுகளும் உடையனவாகவே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எழுகின்றன. எதனாலும் சலனப்படாது 'இருக்க' முயல்வதைக் காட்டும் 'நீக்கம்' என்ற இவரது கதை, தனது இருப்பைத் தேடும் 'தொலைவும் மீட்பும்' என்ற இன்னொரு கதை, 'சம்ஹாரம் கோருகின்ற அற்றநிலைச் சார்பினுக்கும்' வாழ்வின் முழுமையைத் தேடும் 'மறுதலை', 'நிலவின் வெள்ளி ஓர இமைப்புக்குள்ளும்' தன்னைத் தேடும் 'நிலவும் வழிப்போக்கனும்' இன்னும் 'நண்டும் முள்முருக்கும்', 'வெள்ளிப்பூக்கள்', 'வெளியார் வருகை' போன்ற இவரின் அநேக சிருஷ்டிகள் எல்லாவற்றுக்குமே கரு. இருப்பும் அதுபற்றிய தேடலும் இவற்றின் விளைவாக எழுகின்ற மெல்லிய துயரும் விரக்தியும்."*

*- மு.பொன்னம்பலம் ('யதார்த்தமும் ஆத்மார்த்தமும்')*

## 2

நுஃமான் - சண்முகம் சிவலிங்கம் இரட்டையர்களில் எனக்கு முதலில் பரிச்சயமானவர் நுஃமான். 1970களின் முற்கூறில் கொழும்புப் பல்கலைகழக மாணவராக கொள்ளுப்பிட்டியில் தங்கியிருந்தார். நானும் கொள்ளுப்பிட்டியிலேயே அக்காலத்தில் வதிந்தேன். அவர் நடத்திய 'கவிஞன்' இதழில் என் 'தேடல்' வந்திருந்தமையால் அவருக்குப் பெயரளவில் என்னைத் தெரிந்திருந்தது. அத்தோடு 'பூரணி' ஆசிரியர் குழுவிலும் நான் இருந்தமையால் அவர் என்னைப்பற்றி அறியவந்தார். முதற் சந்திப்பில் காலிமுக வீதியில் நடந்து சென்றதும், 'அஸ்ரா'ஹொட்டேலில் தேநீர் அருந்தியதும் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. நுஃமானின் அறையிலேயே நான் முதன்முதலில் சண்முகம் சிவலிங்கத்தைச் சந்தித்தேன். அவரை மட்டுமல்ல; மஹாகவி, சேரன் இன்னும் பல எழுத்தாளர்களை. அக்காலத்தில் நுஃமானது அறை, ஒரு எழுத்தாளர் Rendezvous. நுஃமானைப் போலவே சண்முகம் சிவலிங்கமும் மனம்விட்டுப் பழகினார். மார்க்சியமும் ஆத்மிகமும் எங்கள் பழக்கத்துக்குத் தடையாக இருக்கவில்லை. மனம் திறந்து விவாதிப்போம், தர்க்கங்களை முன்வைப்போம். அவை எப்போதுமே பகைமுரணாக மாறியதில்லை. "எந்தத் தர்க்கத்தின் போதும், கருத்துகளுக்குப் பின்னாலுள்ள உன்னத மனிதனை நேசிக்க வேண்டும்" என்று ஏ.ஜே.கனகரத்னா எப்போதும் சொல்வார். இந்தவகையான உறவே எங்களிடையே நிலவியது. எனது உத்தியோக அலுவல்கள் காரணமாக கல்முனைக்குச் செல்லவேண்டி ஏற்பட்ட வேளைகளிலும் அவரோடு கொண்ட நட்பில் நெருக்கம் ஏற்பட்டது. பின்னர் அவர், கல்வி நூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் நூலாக்கக் குழுவின் உறுப்பினராகி கொழும்பு வந்தபோது, அவரோடு இன்னும் நெருங்கிய உறவைப் பேணக்கூடியதாக இருந்தது. இந்தக் காலத்தில் அவர் பங்குபற்றிய இரண்டு நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடுதல் அவசியம் என்று நினைக்கிறேன்.

சாந்தனது 'ஒரே ஒரு ஊரிலே' என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் அவர் சொன்னார்:

*"ஒவ்வொரு இனத்துக்கும் கலாசாரரீதியான முரண்பாடுகள் இருப்பது இயல்பே. இப்படி இருப்பதன் காரணமாக ஒரு இனத்தை இன்னோர் இனம் பகைக்கவேண்டியது அவசியமில்லை. ஒவ்வொரு இனமும் தத்தம் தனித்தன்மையையும் கலாசாரத்தையும் பேணியவாறே இன்னோர் இனத்தோடு ஒற்றுமை காணவேண்டும். ஒரு இனம் தனது கலாசாரம் முழுவதையும் இழந்து இன்னோர் இனத்துடன் ஒற்றுமை காண விழைவது துரதிஷ்டவசமானது. ஆனால் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் முற்போக்கு எழுத்தாளர்கள் பலர் எல்லாவற்றையும் இழக்கத் தயாராக இருக்கின்றனர் யாராவது புத்திபூர்வமாகவும் உண்மையாகவும் இந்தப் பிழையை எதிர்க்கின்றபோது அவர்களை வகுப்புவாதிகள் என்கின்றனர். இதனால் வரும் நட்டங்கள் அநேகம். முக்கியமானது அரசியல் நட்டம். மேலும் மக்கள் கலாசாரத்தைப் புரிந்துகொண்டு வழிநடத்தாமையால் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற முடியாமலும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை அரசியல்வாதிகள் தங்கள் இலாபங்களுக்காக பயன்படுத்த விட்டுவிடுகின்றனர்."*

*-('பதிவுகள்' : அலை - 2 தை 1976)*

இரண்டாவது நிகழ்ச்சி : இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்திய தேசிய ஒருமைப் பாட்டு சிங்கள - தமிழ் எழுத்தாளர்கள் மகாநாட்டு நிகழ்ச்சியில், கவிதை ஒன்றின் மூலமாக அந்த மகாநாட்டின் போலித்தன்மையையும் இயலாமையையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துக்காட்டி, ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். பார்வையாளர் மண்டையில் அப்போது தான் உறைத்தது இந்த மகாநாடுகளால் ஏதும் தேசிய ஒற்றுமை ஏற்பட்டுவிடப் போவதில்லை என்று; புண் ஆழமாகப் புரையோடிக் கிடக்கிறது என்று.

இன்னும் ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட வேண்டும் என்று நினைக்கிறேன். ஒரு நாள் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குப் போய்க் கொண்டிருந்தேன். அந்தப் புகைவண்டியில் சண்முகம் சிவலிங்கமும் பயணம்செய்தார். அவர் ஒரு Compartment இலும் நான் இன்னொரு Compartment இலும் இருவரும் buffet இல் தேநீர் அருந்திவிட்டு திரும்பி வருகையில், என் இருக்கையில் இன்னொருவர். சசி அவரிடம் அது என் இருக்கை என்றும், நாங்கள் தேநீர் அருந்தச் சென்றோம் என்றும் சொல்லி விளங்கப் படுத்தினார், அவன் ஏற்கவில்லை. கோபத்தோடு அவனைப்' பிடித்து இழுத்துவிட்டு, என்னை அங்கு இருக்கச் செய்தார். வேறுவழியின்றி அவன் எழுந்து நின்றான். இச் சம்பவம் அவரது கவிதைகளில். நியாயத்துக்காக ஆக்ரோசம் கொள்ளும் இயல்பை ஞாபகப்படுத்துகிறது. 'வெளியார் வருகை'யில் வரும்.

*"குத்துவோம் வெட்டுவோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொத்தி வீழ்த்துவோம்*
*இந்த வழியே*
*இனி மரணத்துள் வாழ்வோம்"*

என்ற நேரான கூரான வரிகளையும் 'எகிப்தின் தெருக்களிலே' வரும்

*"ஏன் எங்கள் ஆண் உடம்பு*
*இன்னும் எழுவதில்லை*
*ஏன் எங்கள் யோனியிலே*
*அரிப்புக் குதிர்வதில்லை"*

என்று பச்சையாகத் தொடங்கி

*"சுயமதிப்பு இல்லாத ஈனம்"*

என்று கோபமாகத் தொடரும் வரிகளும் அவரது உண்மையான இயல்பின் வெளிப்பாடு. அநியாயத்தைக் கண்டு கெம்பி எழும் பண்பு பாரதியிடம் இருந்தது; ஆனால், பெரும்பாலான கவிஞர்களிடம் அது வெறும் அறிக்கையிடலாகவே வெளிப்படுகிறது.

## 3

அடுத்து முக்கியமான கேள்விக்கு வருவோம்.

சசி ஒரு மார்க்சியரா?
மார்க்சியம் சசியைக் கவர்கிறது.
அதில் அவர் நம்பிக்கை வைக்கிறார்.
நடைமுறையில் அது என்னவாகிறது?

இந்தச் சுவாரஸ்யமான கேள்விக்கு அவரது கவிதைகளே விடையளிக்கின்றன.

1968 இல் எழுதப்பட்ட 'சந்தியிலே நிற்கிறேன்' என்ற கவிதையில்,

*"சுமந்த மக்கள்*
*வெந்தெழுவார்*
*சமர் செய்வார்*
*வில் நிமிர்த்தும் துரியர் படை*
*வென்றிடுவார்.*
*நல்ல பல விதி செய்வார்."*

என்று நம்பிக்கையோடு குரல் கொடுத்த சசி, அதே ஆண்டிலேயே எழுதிய 'ஆக்காண்டி' என்ற கவிதையில்,

*" 'கடலும் நமதன்னை*
*கழனியும் நமதன்னை*
*கொல்லன் உலையும்*
*கொடுந்தொழிற் சாலையதும்*
*எல்லாம் நமதே' என்றார்*
*எழுந்து தடி எடுத்தார்*
*கத்தி எடுத்தார்*
*கடப்பாரையும் எடுத்தார்.*
*யுத்தம் எனச் சென்றார்*
*யுகம் மாறும் என்றுரைத்தார்.*
*எங்கும் புயலும்*
*எரிமலையும் பொங்கிவரச்*
*சென்றவரைக் காணேன்*
*செத்து மடிந்தாரோ?"*

என்று சந்தேகக்குரலை எழுப்புகிறார். 1971 இல் எழுதப்பட்ட 'மண்ணில் முளைக்கும் ஒரு வால் நட்சத்திரம்' ஓர் அழகான விமர்சனத்தை முன் வைக்கிறது. இது பொதுவாக இலங்கையில் இளைஞர் எழுச்சி பற்றிக் குறிப்பிட்டாலும், 1971 இல் ரோகண விஜயவீரவின் தலைமையில் கிளர்ந்த இளைஞர் புரட்சி (இலங்கையின் சேகுவேராப் புரட்சி)யின் உள் தூண்டுதலால் (Inspiration) எழுதப்பட்டது என்பதைக் கண்டுகொள்ள முடியும். 'மண்ணில் முளைக்கும் வால்நட்சத்திரம்' என்ற தலைப்பே, இளைஞர்களின் எழுச்சியை சசி எவ்வளவு உன்னதமாகக் கருதினார் என்பதைக் காட்டுகிறது. அந்தக் கவிதை:

*"பேராதெனியா*
*கட்டுப்பெத்தை*
*புறக்கோட்டை*
*போபஸ் ஒழுங்கை*
*பஸ், நிறுத்தங்கள்*
*ரயில் நிலையங்கள்*
*பண்டாரநாயக்க விமான நிலையம்*
*கூட்டுத் தாபனக் குறுக்கு மூலைகள்*
*எங்கும்*
*நீங்கள் ஓர் இராட்சச உடலில்*
*சொட்டும் குருதியில் துளிர்த்த கணங்களாய்"*

(கணங்கள் : தேவகணங்கள்; வரியைக் கூர்ந்து கவனியுங்கள். இராட்சத உடலில் / சொட்டும் குருதியில் / துளிர்த்த கணங்கள்: தேவகுமாரர்கள்) என்று சொல்கிற சசி பழைய மார்க்சியரை விமர்சிப்பது சுவாரஸ்யமாக இருக்கிறது.

*"மக்கள் எழுச்சி என்னும் ஓர்*
*வால் நட்சத்திரத்தை நாங்கள் வானிலே*
*காத்து நிற்கையில்..."*

*"முப்பது வருஷமாய் முழித்திருக்கின்றோம்"*

*" 'வால்நட்சத்திரம் வானில் வரும்' எனச்*
*சொன்னவர் எங்கே?*
*திரும்பிப் பார்க்கிறோம்*
*அவர்களோ -*
*செஸ் ஆடுகிறார்கள்*
*வொவி ஃபிஷ்ஷரும், ஸ்பாட்ஸ்கியும்*
*பின்னால் நின்று பிச்சை இரக்க*
*அவர்கள் ஒரு செஸ் ஆடுகிறார்கள்"*

(வொவி ஃபிஷ்ஷரும் ஸ்பாட்ஸ்கியும் என்று வரும் இடத்தில் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீற்றர் கெனமன் என்று மாற்றிப் போட்டுப்பாருங்கள்).

*"பாவம்*
*இன்று அவர்கள் பழுத்த கிழவர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மண்டை யோடு வழுக்கை யாயினார்*
*வழுக்கை விழாத மற்றவர்களும்*
*நரைத்துப் போயுளார்*
*நாட்பட நாட்பட*
*அறளை பெயர்ந்து*
*ஆட்டமே கதியென மயங்கி விட்டார்கள்."*

சசியின் மார்க்சியக் கனவு இவ்வாறு கலைந்தது. 1971 புரட்சியில் அவர் வைத்த நம்பிக்கை பின்னர் சிதைந்து போகிறது (இன்றைய ஜே.வி.பி.யின் நிலைமையைப் பார்த்தால் அவர்கள் மேல் கொண்ட நம்பிக்கை எவ்வளவு அபத்தமானது என்று தெரிய வரும்) '71ன் பின்னர்' என்ற தலைப்பில் 1973ஆம் ஆண்டு எழுதிய கவிதையில், பின்வருமாறு சொல்கிறார்.

*"வெற்றுச் சுலோகங்களை வீணே*
*இடுவதேன்?"*

*'கொண்டு வந்தது வெறும் பனிக்கட்டி*
*இடைவழியில் உருகி*
*விரல் இடுக்கில் ஒழற்று'*

இப்படி மார்க்சியப் புரட்சி இலங்கையில் இரண்டுமுறை தோற்றதை அழகாகக் காட்டும் அவர், 1988இல் 'சரத் முத்தெட்டுவேகம'வின் இறப்புப் பற்றி எழுதுகையில்,

*"பல்லாண்டாய்*
*உன்னைப் பக்கம் பக்கமாய்ப் புரட்டி*
*படிக்கலாம் என நாங்கள்*
*காத்திருந்த காவியமே*
*நீ*
*திடீரென முடிந்த சிறுகதையானாய்."*

*"கௌரவர்கள் மத்தியில்*
*வில் ஒடிந்த வீரனே"*

(கவனிக்கவும் : காவியம் சிறுகதையானது. கௌரவர்கள் : பொய் அரசியல்வாதிகள், முதிய மார்க்ஸிஸ்டுகள், 1971இன் இளைஞர்கள் உட்பட 'சந்தியிலே நிற்கிறேன்' என்ற கவிதையிலும் துரியர் (துரியோதனனாதியோர், படை என்று வருவதையும் கவனிக்க.) என்று கூறிய சசி, சரத் முத்தெட்டுவேகம பற்றிப் பின்வருமாறு தொடர்கிறார். முத்தெட்டுவேகம,

*"கடைசி மனச்சாட்சி"*

*"இந்த மையிருட் காட்டின்*
*ஒரே மின்மினி"*

*என்றவர்*
*"மின்மினி*
*காட்டைக் கொளுத்தும் என*
*யாரும் கருதவில்லை!"*

இந்த வெறும் சலசலப்புகள் புரட்சியைக் கொண்டுவரும், மாற்றத்தைக் கொண்டுவரும் என்று சசி நம்பவில்லை என்றாலும்,

*"வாழ்ந்திருந்தால்*
*.....................*
*இந்து சமுத்திரத்தில்*
*சோவியத் வியூகத்திற்கு*
*துணை போயிருப்பாய்..."*

(இந்த சரத் முத்தெட்டுவேகம தான் கடைசியில் கிடைத்த "மார்க்கிய நம்பிக்கை நட்சத்திரம்." வேடிக்கையாக இல்லையா? மார்க்சியத்தின் நிலைகண்டு பரிதாபமாக இருக்கிறது.)

சரத் முத்தெட்டுவேகம மேல் வைக்கும் விமர்சனம் ஒவ்வொன்றும் மார்க்சியர்கள் மேல் வைத்த விமர்சனம் என்றே கொள்ளவேண்டும். மார்க்சியம் நடைமுறையில் தோற்றுப்போவதைக் காட்டுவது.

சசி வரட்டு மார்க்சியரில்லை; யார் யாரோ சொன்னதை, சொல்வதை கண்ணை மூடிக்கொண்டு நம்புதற்கு, குருட்டுத்தனமாக தத்துவங்களைச் சுயசிந்தனை இழந்து பின்பற்றுதற்கு முற்போக்கினரோடு ஒத்துப்போக மறுத்த சாந்தனின் 'ஒரே ஒரு ஊரிலே' நூல் வெளியீட்டு விழா - பேச்சையும், தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டில் அவர் வைத்த வித்தியாசமான விமர்சனத்தையும் காட்டலாம். நுஃமானைப் போல கைலாசபதியைத் தூக்கிப் பிடிக்கவில்லை. சசியிடம் காரியவாதித்தனம் இல்லை. இதுவே, விலகிச் செல்லும் மையங்களில் நுஃமான் தன்னை விலகிச் செல்வதாக சசி காணுதற்குக் காரணமாக இருக்கலாம்.

சசி 1983க்கும் 1987க்கும் பிந்தியதான தனது கவிதைகள் இந்தத் தொகுப்பில் அதிகம் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்றும், இந்தக்காலப் படைப்புகள் திடீர் திருப்பம் பெற்றவையாக - இலங்கையின் பொதுத் தேசிய உணர்வோட்டப் பரிமாணத்திலிருந்து இன ஒடுக்குமுறையின் காரணமாக எழுச்சி பெற்ற தமிழ்த் தேசியவாதத்துடன் சம்பந்தப்பட்டவை என்கிறார். என்றாலும் இந்தக் காலத்துக்குரிய கவிதைகள் சில இந்தத் தொகுப்பில் உள்ளன. 'பாடாத பாடல்கள்', 'பிள்ளைக்கறி', 'காவல் அரண்கள்' 'ஆனையிறவு முகாம்', 'இப்போது', 'எமது பாடுகளின் நினைவாக', 'மணல்மேட்டுச் சரிவுகளில்' ஆகிய கவிதைகளை அவ்வாறான கவிதைகளாகக் கொள்ளலாம். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம். 'பாடாத பாடல்கள்' என்ற கவிதையில்:

*"தெருவில் பிணங்கள் நாறுகின்றன"*
*"கரையில் பிணங்களைத் தேடச்*
*சொல்கிறார்கள்*
*கரையில் ஒதுங்கிய பிணங்கள்*
*கடலில் கொட்டப்பட்டவை என்றும்*
*சொல்கிறார்கள்"* (1984)

'பிள்ளைக்கறி'யில்:

*"காக்கிச் சட்டைகள் துப்பாக்கிகளுடன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கரும்பச்சை வாகனங்களின் யுத்த நெருக்கடி*
*முற்றுகை - ஓட்டம் - முகமூடி*
*தட்,தட்... பட்... பட்..."*

*படீச் படீச்... படீச் ... எஸ் எம் ஜி"*

*"எத்தனை குருத்து வெண்புறாக்களோ?"*
(1985)

(இது ஒரு அந்நிய மண்ணில் நிகழவில்லை. அந்நியப் படையெடுப்பும் அல்ல. உள்நாட்டில் ஓரினம் இன்னொரு இனத்துக்கு எதிராக).

'எமது பாடுகளின் நினைவாக' என்ற கவிதையில், தமிழ் இளைஞர்களுக்குச் செய்யப்படும் சித்திரவதைகளை விபரிக்கையில், யேசுவைப் பார்த்துக் கேட்கிறார் - யேசு யூதர்களால் சித்திரவதை செய்யப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டவர்:

*"உம்மை உயரத்தில் தொங்கவிட்டார்களா?*
*தொங்கவிட்டு*
*எரிபுகையை உம்மைச்*
*சுவாசிக்கச் செய்தார்களா?*
*உமது ஆண் உடம்பின் துவாரத்தில்*
*கம்பியை ஓட்டினார்களா?*
*உமது கண்களிலும் மலவாயிலிலும்*
*மிளகாய்த்தூள் தூவினார்களா?"*

*"உமது கண்களைப் பிடுங்கினார்களா?*
*உம்மை தீயில் பொசுக்கினார்களா?"*
*"உம்மை நாய்போல் ஓடவிட்டு*
*துப்பாக்கியால் சுட்டார்களா?"* (1986)

'மணல் மேட்டுச் சரிவுகளில்' என்ற கவிதையில் :

*"நாற்பது தமிழ் இளைஞர்-*
*நற்பிட்டி முனையிலிருந்தும்*
*துறை நீலாவணையிலிருந்தும்*
*சுட்டும் அடித்தும் துரத்தியும்*
*...சிறைப்பிடித்த*
*நாற்பது தமிழ் இளைஞர் -*

*தம்பட்டையூரின் சரிந்த மணல்மேட்டில்*
*தங்கள் சவக்குழியை தாங்களே வெட்டினார்,*
*வெட்டிய குழிகளில் வீழச்சுடப்பட்டார்,*
*அரை உயிரும் குறை உயிருமாய்*
*அங்கு புதையுண்டார்."* (1987)

(இது 2ஆம் உலக மகாயுத்தத்தின்போது ஹிட்லர் யூதர்களுக்குச் செய்த கொடுமைகளை ஞாபகத்துக்குக் கொண்டுவரவில்லையா?).

தமிழ்த் தேசியம் எவ்வாறு வளர்ந்தது என்பதற்கு இவ்வளவு மேற்கோள்களும் போதும் என்று நினைக்கிறேன். இதேபோல கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரங்கள் பற்றியும் 'இனிப்புகளும் கசப்புகளும்', 'எல்லைகளில் ஒரு நள்ளிரவில்', 'சமாதானச் சாக்கடை' போன்ற கவிதைகளில் சொல்கிறார்.

'எல்லைகளில் ஒரு நள்ளிரவில்' என்ற கவிதையில், தமிழர்களும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல ஒன்றுக்குள் ஒன்று பின்னிப் பிணைந்து சமாதானமாக, ஒற்றுமையாக வாழ்ந்து வந்தவர்கள்; திடீரெனத் தோன்றிய சுயநல அரசியல் அவர்களிடையே வேறுபாடுகளை விதைத்தது - அதன் விளைவாக,

*"பெட்றோல் கலன், அணைப்பு, பெரிய பை...*
*அலவாங்கு!*
*நில்லுங்கள் அங்கே - நெருங்கி வராதீர்*
*எல்லையா! எல்லை எது?... எங்கள்*
*எல்லைகள்*
*வீடுகள் கவ்விய சர்ப்ப வியூகமல்ல*
*உச்சி வகிடும் அல்ல*
*அவை, ஒன்றினுள் ஒன்றூர்ந்த*
*மண்டை ஓட்டின் என்பு மூட்டுகள்*
*இரண்டு கைவிரல்களும்*
*ஒன்றினிறையினுள் ஒன்று கோர்த்தவை*
*ஒரே பொதுவேலியின்*
*உள்ளும் புறமும்*
*முக்காடும் குங்குமமும்*
*மூன்றுவிரல் பூச்சும், ஐந்தொழுகைத்*
*தழும்பும்,*
*இந்த எல்லையை எவர் காக்கமுடியும்*
*எங்கள் இருவரைத் தவிர"* (1984)

என்கிறார். தமிழ் - முஸ்லிம் உறவுகள் ஒன்றினுள் ஒன்றூர்ந்த மண்டை ஓட்டின் என்பு மூட்டுகள் என்பது, தமிழ் - முஸ்லிம் உறவுகள் எவ்வளவு இணக்கமாக, நெருக்கமாக இருக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

'சமாதானச் சாக்கடை' என்ற கவிதை யிலிருந்து சிலவரிகள், சுயநல அரசியல்வாதிகள் எவ்வாறு அரசியல் நடத்துகிறார்கள் என்பதைக் காட்டுதற்கு,

*"வானில் லொட லொடத்து*
*இலங்கை இந்திய*
*ஒற்றைக் கருந்தும்பி*
*ஒவ்வொருநாளும் வந்து போகும்."*

*"ஆங்காங்கே,*
*அந்திவரை ஆட்கடத்தல்*
*இரு புறமும்,*
*அந்திபடச் சவப்புதையல்*
*இரு புறமும்,*
*இந்த நிலையில்,*
*சமாதானச் சாக்கடையில்*
*தமிழ்ப் புறாக்களும்*
*முஸ்லீம் புறாக்களும்*
*ஏழெட்டு நாட்களாய்க் குந்தி*
*எச்சமிடும்."* (1988)

சமாதான முயற்சிகள் வெறும் ஏமாற்றாகி உண்மையற்றுப் போய்விடுவதை - முக்கியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இக்கவிதை காட்டுகிறது. இங்கே, 'சசி' தமிழராக இருந்தபோதிலும் தவறு இரண்டுபுறமும் உள்ளது என்பதைச் சொல்லத் தவறவில்லை.

அடுத்த முக்கியமான கேள்வி -

சண்முகம் சிவலிங்கம் ஆத்மார்த்தப் பண்புகளைக் கொண்ட கவிஞரா?

*"வெயிலோ புழுங்கும்*
*வேலித் தழைகளின்*
*குச்சு நிழல்கள் கோட்டுப் பின்னலாய்*
*நித்திரை செய்யும் நீண்ட தெருவிலே"*

*"சைக்கிள் ஒலியில்*
*நித்திரை கலைந்த நிழலின் பின்னல்கள்*
*வரி வரியாய் என்*
*மார்பிலும் தோளிலும்*
*திரைப்பட மோட."*(வெள்ளிப் பூக்கள் 1967)

உன்னதமான திரைப்படமொன்றில் 'கமரா' நுட்பமாக நகர்ந்து காட்சிகளின் சூக்குமத்தை கண்முன் நிறுத்துவது போன்று சொற்றேர்வையும் சொற்கலவையையும் கையாண்டு எம்மை வித்தியாசமான அனுபவத்துக்கு இட்டுச் செல்கிறார் சசி. இட விபரிப்புகளையும் இயற்கைக் காட்சிகளையும் பருவகாலங்களையும் அகண்ட வான் பிராந்தியங்களையும் பகைப் புலமாக்கி, கவிதையுள் செறிந்துள்ள உணர்வோட்டங்களுள் தானும் திளைத்து வாசகர்களையும் சிறைப்பிடிக்கும் அற்புத கலைத்துவ மொழி அவரது. நுஃமான் சொல்வதுபோல அவரை யாரும் பிரதிபண்ண முடியாது. தென்னோலை திடீரென்று சலசலக்கும், தூரக் கடல் இரைந்து கேட்கும்; புல்வெளி, கடற்காற்று, வேப்பமரம், மயானபூமி, கோயில், அரசமரம், பாலைவனம், சுடுமணல், துருவத்தரை, வசந்தப் பூ, சாண் உயர் பூக்காடு, பின் நிலவு, வெள்வாடை, மங்கல்படல், பனித்திரை, சீதளக் காற்று உறை கூதல் போன்ற கால இடப் பரிமாணங்களைப் பகைப்புலமாக்கி, எம் மனத்தை ஒரு Surrealistic மனத் தளத்துக்கு நகர்த்துகிறார். விண்வெளியும் வானும் பற்றிய விபரணங்கள் எம்மை எங்கோ உயரத்துக்கு இட்டுச் செல்கின்றன.

*"மங்கல் படும்வானின் ஊடே*
*ஒரு காகம்*
*எங்கோ பறந்து செல்லும்"*

*"எல்லா இலையும்*
*உதிர்ந்த கிளைகளின் பின்னால்*
*நரைத்த பெரிய நிலாப்பந்து."*

*"வாழ்வினிலே அகன்று செல்லும்*
*அடிவானத்தை*
*வசப்படுத்த"*

*"மீளத் தொடர்ந்து விரியும் புதுவானின்*
*நீளம் அளக்கும் நினைப்போ அதற்குளது"*

இவ்வளவும் அவரது கவிதைக்கான பின்னணி. அவர் காட்டும் அற்புத உணர்வோட்ட வெளிப்பாடுகள்தான் எம்மை வியக்கவைக்கின்றன. கவிஞர் ஒருபுறத்தில் மென்மையான மனம் படைத்தவர்; இன்னோர் புறத்தில் ஆக்ரோஷ உணர்வுகளுடன் கெம்பி எழும் பாங்கானவர். சின்னச் சின்ன விடயங்களும் அவரிடம் உரசி உணர்வுகளைக் கிளர்த்துகின்றன. கவலைப்படுகிறார், சிந்திக்கிறார், குழம்புகிறார், தர்க்கரீதியாகச் சம்பவங்களைக் காண முயல்கிறார். பல தர்க்கத்துக்கும் அப்பால் சென்று விடுகின்றன. நான் இக் கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்னது போல, இருத்தலுக்கும் தொலைத்தலுக்குமான இருப்பிடையே அவரது மன அலைக் கழிவே அவரது கவிதைகள்.

'கறுத்தப் புள்ளிகள்' (1978) என்ற கவிதை கருகலானது, விளங்கிக்கொள்ளக் கடினமானது என்கிறார் சசி. ஓரளவு அது உண்மையும் தான். அவரது பல கவிதைகளில், பல்வேறு உணர்வுகளை ஒன்றிணைத்து வெளிப்படுத்த முயலும்போது அவர் என்ன சொல்கிறார் யாரைப்பற்றிச் சொல்கிறார் என்ற தெளிவு ஏற்படாது போய்விடச் சாத்தியமுள்ளது.

முரண்பாடான உள் மனநிலைகளில் தன்னில் உள்ள குறைபாடுகளை வெளிப்படுத்தி, நண்பரிடம் அவர் எதிர்பார்ப்பதையும் சொல்கிறார்.

*'நண்பனே*
*எனது கவிதைகள் உனக்கு*
*விளங்குவதில்லை*
*நான் எனக்காகவா எழுதுகிறேன்?"*

*"எனது மூலவிக்கிரகத்தை*
*நீ காணவேண்டும் என்பதற்காக"*

*"இந்தத் திரை நீக்கம் நிகழ்கிறது"*

*"ஆனால் நீயோ*
*மூல விக்கிரகத்தைக் காணவில்லை*
*திரையைத்தான் காண்கிறாய்"*

இங்கே சசியின் மூல விக்கிரகம்தான் முக்கியம். தன் நண்பன் தன்னைப் புரிந்து கொள்ளுவான் என்று நம்பித் தன் மனத்தைத் திறந்து காட்டுகிற போது, ஏமாற்றமே காத்திருக்கிறது. அதுதான் அவரது துயருக்கான காரணம். மனித உறவின் ஆனந்தம், ஒருவரை ஒருவர் ஆழமாக உண்மை யாகப் புரிந்துகொள்வதிலேதான்; ஆழ்மனங்களை சொற்களையும் புத்தியையும் கடந்து சந்திப்பதிலேதான்.

நட்பைப் பற்றிப் பேசுகின்ற இன்னொரு கவிதை 'நீர் வளையங்கள்' (1968)

*'இன்று மிகத் துயர் உற்றேன்'*

என்று தொடங்கும் அக்கவிதையில் கவிஞர் தன் மென்மையான மனத்தைப் பற்றியும் தனது நண்பரது மென்மையான மனத்தைப் பற்றியும் பேசுகிறார்.

*"இன்று இந்த மிகச் சிறிய சம்பவத்திற்காக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இவ்விதமோ துயர் உறுதல்"*

*"எனது மனம் பூஞ்சிட்டின் மென்*
*சிறகுத்தூவல்"*

*"என் நண்பர் மிக இனியர்"*

*"காலம் எனும் நதியில் கலப்பதற்கே*
*உயிர்செய்த*
*காதல் உரு ஆனார்..."*

என்று கூறும் கவிஞர் என்றாலும் இருவரிடையே கசப்புகள் , மனமுறிவுகள் ஏன்? பின்னர் தேற்றிக்கொள்கிறார் 'போகட்டும்...'

*"என் மனதை என்றும்*
*நோகாது வைத்திருக்க வேண்டுமென*
*எண்ணேன்*
*நொந்தவர்கள் வாழ்க்கையிலே சாதனைகள்*
*செய்தார்*
*ஆதலினால்*
*என் மனதைக் கல்லாக்கிக் கொள்வேன்."*

பின்னர் தான் நினைப்பதே சரி என்று எண்ணக்கூடாது என்று நினைக்கிறார்.

*"ஏகமும்*
*தாம்என்று எண்ணுபவர் மாள்வார்"*

பின்னர் அவர் வாழ்க்கையைப் பார்க்கும் பார்வை எம்மை எங்கோ இட்டுச் செல்கிறது.

*'ஆகாய வீதியிலே*
*என் நெஞ்சைக் கிள்ளி அத்தனையும்*
*இட்டதுபோல்*
*மின்னுகிற*
*வெள்ளிப் பூ அனந்தம்"*

*"என் இதயம்*
*இப் பரந்த வான் முழுதும் ஆகி இருப்பதனை"*

***"விண்வெளியில்***
***உதிர்ந்துள்ள இவ்வெள்ளிப் பூக்கள்***
*...இழிந்து*
*நிலம் சொட்டுவதைப் போல் மறைந்து*
*போமோ..."*

உயர்ந்து மிளிரும் அற்புதமான ஆளுமை நிலம் வந்து, அதாவது கீழான இயல்புகளோடு கலந்து வீணாகிப் போய்விடுமோ என்கிறார் சசி. இதனோடு 'மண்ணில் முளைக்கும் வால் நட்சத்திரம்' என்ற கவிதையை ஒப்பிட்டுப் பார்த்தால், வானுக்கும் மண்ணுக்குமான தொடர்பு புலப்படும். இதற்கு எதிர்மாறாக அவரது 'மண்ணும் மனிதரும்', 'சுயவார்ப்புகள்' - மண்ணே எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும், விஞ்ஞானத்தை நம்பிக்கை தரும் ஆதார சுருதியாகவும் காட்ட முயன்று தோற்றுப் போவதைக் காணமுடியும். தொடர்ந்து -

*"எச்சிறிய புல்லும்*
*அதன் இயல்பினிலே முழுமை"*

*"இடுகாட்டில் முளைக்கின்ற கழனியும் ஓர்*
*அருமை"*

*"...இந்த நிலவில்*
*அகன்ற இலை வாழையிலே பனிசொட்டும்*
*கீதம்"*

உலகின் ஒவ்வொரு சிறிய பொருளும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் கவிஞர் அடுத்துத் தரும் சொல்தான் பிரமாண்டமான மனக் காட்சியை விரிக்கிறது. 'இடுகாட்டில் முளைக்கின்ற கழனி' (பட்டிப் பூ) எல்லாரும் ஒதுக்கி விட்ட, புறக் கணிக்கப்பட்ட, அற்பமெனக் கருதக்கூடிய இடுகாட்டுப் பூ - அதுகூட ஒரு அருமை. இந்த இடத்தில் கவிஞரின் 'அற்பங்கள்' என்ற கவிதை ஞாபகத்துக்கு வருகிறது.

*"அற்ப நிகழ்வும்*
*அர்த்தம் அற்றதும்*
*என்னுடன் வருக."*

*"பாதையின் ஓரம் படரும் சிறுபுல்லும்*
*கானகத்தில் எங்கோ கண்மலரும் ஓர்பூவும்*
*போதும் எனக்கு"*

இந்த நேரத்தில் அவரது இயற்கையை நயக்கும் அற்புதமான கவிதைகளில் ஒன்றான 'நண்டும் முள்முருக்கும்' ஞாபகம் வருகிறது. நண்டுக்கும் முள்முருக்குக்கும் என்ன தொடர்பு? இயற்கையின் இரண்டு தனித்தனி இருப்புகள். இப்படித்தான் நாம் எண்ணிக்கொள்வோம். ஆனால் அவை இனம்புரியாத வகையில் ஒன்றோடொன்று தொடர்புற்று முழுமையுறும்.

*"சிவப்புப் பூக்கள்*
*முள் முருக்கம்*
*மைனாக்கள் வரும், போகும்."*

*"அடியில் உள்ள பூக்களை*
*மைனா கோதும்."*

*"மொட்டுகள்*
*நண்டின் பூப்போல"*

*"முள்முருக்குப் பூக்க*
*சினைக்கும் நண்டுகள்."* (1979)

இயற்கையின் இந்த அற்புத தாம்பத்தியம் மனத்தைப் புதிய தளத்துக்கு நகர்த்துகிறது.

கவிஞர், தன் நண்பனுக்கும் தனக்குமுள்ள சிறு முரண்பாடு - கருத்து வேற்றுமையில் தொடங்கி, தன்னையே சுய விசாரணை செய்துகொண்டு மேலே சென்று அகண்டத்தையும் முழுமையையும் தொடும் மனத்துக்கு வளர்ந்துவிடுகிறார். இவ்வாறே நட்பைப் பற்றிப் பேசும் பல கவிதைகள். 'நாங்கள் இரு தும்பிகள்', 'பரவளைவுக்கோடு' போன்றன. 'மரியாத உயிர்ச்சுவடும் விலகிச் செல்லும் மையங்களும்' கவிதையில் (1986) பழைய நினைவுகளை மீட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர், அவரது நண்பரைப் பார்த்துச் சொல்கிறார்.

*''சரி..*
*நீ இப்போது வந்திருக்கிறாய்*
*நேற்று உன்னைப் பார்க்கையிலே,*
*என் மகனின் நினைவு வந்ததோர் கணம்.*
*நீ தூக்கிய பாலகன்தான்-*
*எனினும்,*
*காலப் பரவுளைவில் ஆளை ஆள்*
*கடக்கையில்.*
*நீயும் அவனும் ஒரு புள்ளியில்*
*ஒரு சிறிய*
*காலப்பின்னத்தில்-*
*வாழ்க்கைக் கனவுகளைப் பொறுத்தவரை-*
*முன்னேறும் முனைவுகளைப்*
*பொறுத்தவரை,*
*நீயும் அவன் போல நெடுந்தூரம்*
*செல்கின்றாய்.''*

கவிஞரின் மகன் கவிஞரை விட்டு வெகுதூரம் சென்றிருக்க வேண்டும். நண்பரைக் காண்கின்றபோது மகனின் நினைவும் அவன் விலகிச் சென்றுள்ளதும் ஞாபகம் வருகிறது. விலகல் பௌதீக விலகலைக் குறிக்கவில்லை; ஆழ்மன ஒவ்வாமை, ஆத்மார்த்த உறவில் அந்நியனாதல்.

'வாழ்வும் மரணமும்' என்ற கவிதையில் மனைவி அழுகிறாள் இறந்துபோய்விட்ட மகனை நினைத்து. சரித்திரத்தை உந்தும் காரியத்தில் ஈடுபட்டு அவன் செத்துப்போகிறான். கணவன் ஒரு புத்திஜீவி. "நானும் அவள்போல் அழுது நயமென்ன?" என்று தனக்குள்ளேயே கேட்கும் அவனால், அவ்வாறு இருந்துகொள்ள முடியவில்லை. அவன் தன் துயரை வெளிக்காட்டும் முறை வேறாக இருக்கிறது.

*''நாலைந்து முறை*
*நடந்து குழம்பினேன்.''*

*''மணல் சிதற*
*எங்கும் நடந்தேன்*
*எனது அடியின் கீழ்ப்பட்டு.*
*இறுதிப் புதிந்தும் உதிர்கின்ற*
*மண்ணின் நெருளை மனதில் புரட்டுகிறேன்''*

*''இன்னமும் வேகமாய், இன்னுமின்னும்*
*வேகமாய்*
*மேலும் கீழும்,*
*மீண்டும் மீண்டும்,*
*எனது கால் நோகும் வரையும்*
*மணல்கள் நொறுங்க நடந்தபின்*
*ஆறிப் படியில் அமர்கிறேன்.''*

புத்திஜீவி சாவை வாழ்வின் தவிர்க்க முடியாத நியதியாக எடுத்துக்கொண்டு, ஆறுதல் பட்டிருக்க வேண்டும்; ஆனால் முடிகிறதா? புத்தியல்ல வாழ்வை இயக்குவது; உணர்வுகள். புத்தி வாழ்வதற்கு உதவுகிறது; ஆதாரமாக இருப்பது உணர்வுகள். அன்பு, பாசம், காதல், தியாகம், உண்மை வாழ்க்கை வாழவேண்டும் என்ற உந்துதல், உயிருணர்வுத் தளத்துக்கான பால், பொறாமை, போட்டி, ஆசை, அதிகார வேட்கை போன்றனவும் உணர்வுகளே. மற்றவர்களின் சாவை விமர்சனம் செய்யும் நாம், நம்மிடமே அது நெருங்கி வருகின்றபோது எவ்வளவு கலங்கிப்போகிறோம். நாம் எம் வாழ்வை, எம் இருப்பை எவ்வளவு நேசிக்கிறோம் என்பதை இது காட்டவில்லையா?

சண்முகம் சிவலிங்கத்தின் முக்கியமான கவிதைகளில் ஒன்று; 'மறுதலை'. இது பிரமாண்ட நினைவுத் தொடர்களை எழுப்ப வல்லது. ஒரு பெண்ணின் நினைப்பு, அவளை இழந்த நிலையிலும் அவளை அடையமுடியாத நிலையிலும் மனத்தை அலைக்கழித்துத் துன்புறுத்துகிற நிலையில், வாழ்க்கை பற்றிய விசாரம் ஒன்றை நிகழ்த்துகிறார். மறந்துவிட, தொலைத்துவிட நினைக்கிற பெண் தொலைந்து போகிறாள் இல்லை நினைவிலிருந்து.

*''நிம்மதிதான் - எந்த நிகழ்வும்*
*முடியுமெனில்...''*

ஆனாலும் முடியவில்லை. நிஜத்தில் புறநிகழ்வு முடிந்துவிட்டது; ஆனால் அகத்தில்... அதுவே கவிஞர்படும் துன்பத்துக்கான காரணம். அது அவரை அடுத்தகட்ட விசாரத்துக்கு எடுத்துச் செல்கிறது. அநித்தியத்தை நித்தியம் என்று மாறாட்டம் செய்கின்றபோது ஞானியர் எழுப்புகின்ற கேள்வி இது!

*''நான் அதுவல்ல,*
*அதுவாக என்னை நான்*
*வீணாய் உருவகித்து, சற்று*
*மினக்கெட்டதெல்லாம்*
*ஊமை மயக்கமென இப்போதுணர்கிறேன்.''*

"வாழ்வு மகத்தானதே" - அப்படியானால் வாழ்வு மகத்தானது ஆகாமல் தடுப்பவை எவை? "கோடி விழலான சிந்தனைகள்", அதனால் ஏற்படுகின்ற துயர், விரக்தி. வேடிக்கை என்னவென்றால், இந்த விரக்தி நிலையே எதிரியக்கமாக இயக்கவியல் நிகழ்கிறது.

*''இந்த நிராசையை முன்னர்*
*இகழ்ந்ததுண்டு.*
*'வாழ்வின் முனைவுக்கு இது மாறு'*
*என்றதனை*
*நானும் உறுதியாய் நம்பி நிராகரித்தேன்.*
*ஆயினும்,*
*வாழ்வின் ஆறாத காதலுக்குக்*
*கீழே அடிவேராய்*
*பின்னிக் கிடப்பதும்*
*வாழ்வு முனைவின் மறுதலையாய்*
*உள்ளதுவும்*
*இந்த நிராசையே என இப்போதுணர்கிறேன்.''*

பிறகு சொல்கிறார்:

*''எனது நிராசையே எனது நிஜங்கள்.''*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நிராசையின் கீதமும் வாழ்வின் ஒரு முனைப்பே."*

இது 'வாழ்க்கை மகத்தானது' என்பதற்கு நேர் எதிர்மாறானது; விரக்தியின் வெளிப்பாடு. அப்போது அவருக்கு இன்னொரு வெளிச்சம் கிடைக்கிறது.

*"என் நினைவு ஊர்ந்த சிறு தடமும்*
*இல்லாமல்,*
*.............*
*தூர்ந்து அழிதல் ஒன்றே சுகம்"*

அதாவது மனத்தில் அவள் நினைவு முற்றாக அழிந்துபோகிற நிலை. ஆனால் அதுவும் சாத்தியமில்லை என அடுத்துவரும் சிலவரிகள் உணர்த்திவிடுகின்றன.

*" 'சம்ஹாரம்' கோருகின்ற*
*அற்றநிலைச் சார்பினுக்கும்*
*வாழ்வின் நிறைவு மிகத்தேவை"*

அந்த நிறைவை, முழுமையை, பூரணத்தை எய்துகிற போது தான் - அந்தச் சொற்கடந்த, நினைவு கடந்த Wordless thought இருப்பை எய்த முடியும். அது முடியாதபோது,

**"கோழியின் மேச்சலில்... குறுகுறுத்து**
**ஓடி அலைந்தே"** திரும்புகிறார்.

ஆழ உண்மைகளைத் தேடி முனையும் போது நிகழும் பல்வேறு ஊசல்களைக் கலைத்துவமாகத் தந்திருக்கிறது கவிதை. இந்தக் கவிதையிலுள்ளவை கவிஞரின் சொந்த அனுபவம்; அதனால் உண்மை அனுபவம்.

நுஃமான் சொல்கிறார், "1977க்குப் பிந்திய பத்தாண்டுகள் சசியின் தனிப்பட்ட வாழ்க்கையின் நெருக்கடிகள் மிகுந்த காலம். விரக்தியும், சோர்வும், நிராசையும் அவரை ஆட்கொண்ட காலம் இது. அவரது சொந்த மனமுறிவுகள் இக்காலத்தில் எழுதப் பட்ட பல கவிதைகளில் பதிவாகியுள்ளன. நிலவும் வழிப்போக்கனும், மறுதலை, வெறும் வரிகளும் ஒரு முன் இளவேனிலும், நத்தை சுகம், தவறிய பருவங்கள், ஒரு பிரியாவிடை, மீண்டும் எழுந்திருக்கையில், மரியாத உயிர்ச் சுவடுகளும் விலகிச் செல்லும் மையங்களும் முதலியவை இத்தகையன. சில வேளை நிராசையை ஒரு வாழ்வியல் தத்துவமாகக் காண இவர் தூண்டப்பட்டுள்ளார்."

நுஃமான் விடும் தவறு, 1977ஆம் ஆண்டுக்குப் பிந்திய கவிதைகளில்தான் இந்த நிராசைப்(?) போக்கு அவரது தனிப்பட்ட வாழ்க்கையின் நெருக்கடி காரணமாக ஏற்படுகிறது என்ற தோற்றத்தை எழுப்ப முயல்வது. நுஃமான், சண்முகம் சிவலிங்கத்துடன் நெருக்கமாகப் பழகுகிறார்; சசிக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை அவர் அறிந்திருக்கிறார். ஆனால், அவர் அறிந்தது வெளிப்புறம் மட்டும் தான்; அவர் அறியாதது சண்முகம் சிவலிங்கத்தின் 'அகம்'. அவரது ஆரம்ப கால 'அழைப்பு' கவிதையிலேயே, அவரது வித்தியாசமான பண்பு- துயரக்குரல் - தட்டுப்படுகிறது.

*"பாதி இரவினிலும்*
*பட்டப்பகலின் அனலிலும்*
*மோதித் தெறித்து*
*மெல்ல முனகி அழுவது போல்*
*.................*
*குரல் ஒன்று"* (1966)

அதைத் தொடர்ந்து வரும் வரிகள், அவரது ஆத்மார்த்தத் தன்மையை அற்புதமாக விளக்குவன.

*"தொடரவரும் பிறப்பெல்லாம்*
*எங்கோ தூரத்தில் கேட்டதுபோல்"*

"தொடரவரும் பிறப்பெல்லாம்"- கத்தோலிக்கரான அவருக்கு மறுபிறப்பு இல்லை; இந்துவாக இருந்தால் இருக்கிறது. இரண்டும் இல்லையாயின்... இருக்கிறதா? இல்லையா? என்ற சொற்றொடர் வாழ்க்கையின் புதிரான அம்சங்களின் ஒரு முனையைத் தொடுவது போலவும் இருக்கிறது. அவரது எல்லாக் காலத்துக்குமான கவிதைகள் பலவற்றின் பொது அம்சமாக, தொலைத்தலும் துயருறுதலும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. முற்போக்கு விமர்சகர்கள் சிலர் புதுமைப்பித்தனையும் மௌனியையும் நிராகரிப்பதற்கு வழக்கமாகப் பாவிக்கும் வாய்பாடு, "அவர்கள் விரக்தியான படைப்பு களையே தந்தார்கள்" என்பதுதான். புதுமைப்பித்தனது தரிசனம் அவன் வாழ்க்கையை உண்மையாகப் பார்ப்பதால் ஏற்படுகிறது. மௌனி யினது - 'அகத்தைப் பார்த்து, தன் முழுமையின்மையின் மேல் வைக்கும் விமர்சனத் தேடல் வாய்ப்புகளையும் வசதிகளையும் வளர்ப்பதே நோக்கமாக - புலனின்ப வாழ்க்கையையே இறுதியாகக் கருதுபவர்களுக்கு, வாழ்க்கையின் ஆழமும் அர்த்தமும் தெரியாது. இச் 'சிறுவட்டத்'துள் ஆழமானவன் திருப்திப்பட மாட்டான்; அவனது, வழிதெரியா வெளியில் திசை தெரியாத் தேடலின் பயணம்; நெருக்கடிகள் போல் தோன்றும் சவால்களையும், துன்பங்களைப் போல் தோன்றும் ஆழ்மன இடைத் தங்கல்களையும் சந்தித்து போராடித் தாண்டவேண்டியிருக்கிறது. உண்மை நோக்கிய பயணத்தில் இந்தச் சந்திப்பும் போராட்டமும் வாழ்க்கைக்கு அர்த்தம் தருகிறது. சவாலற்ற சகட வாழ்க்கை, இருப்பின்போது இல்லாமைதான்; வாழும்போது வாழாமைதான், வாழும் வாழ்க்கையின் வெளிப்பாடுதான் சசியின் நிராசை. தன்னை எந்தத் தத்துவத்துக்குள்ளும், இழக்காமல் திறந்த மனத்தோடு வாழ்க்கையை அணுகும் அவரது தேடல். 'நாங்கள் இரு தும்பிகளி'ல் வரும் ஆத்மார்த்த நண்பர், 'விலகிச் செல்லும் மையங்களில் விலகிச் செல்கிறார். நிராசைக்கு உதாரணமாகக் காட்டப்படும் எல்லாக் கவிதைகளும் 'நிராசை'யை உள்ளடக்கமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கவில்லை. அவை சசி சொல்லும் "பிடிபடா முழுமையின் இழுபடும் உள்ளம்." ஆழ, ஆழ அவர் செய்யும் ஆத்ம தவத்தின் வெளிப்பாடு. அதனால் அவை அற்புதமான கவிதை வெளிப்பாடுகளாக உள்ளன.

நிராசைக்கு உதாரணமாக நுஃமான் காட்டும் 'நிலவும் வழிப்போக்கனும்' நிராசையை உட்கிடையாகக் கொண்டது அல்ல.

*"நிலவே"*

*"அகண்டமாய் வானத்தின் நடுவே"*

*"நிறைவாய்த் ததும்புகிறாய்"*

இந்த நிலவைக் கிக்கிலிக் கொட்டையென்று நினைத்துவிட முடியுமா? அதனுடன் ஒப்பிட முடியுமா?

*"கிக்கிலிக் கொட்டையைக் கிலுக்கிப் பார்த்தால்*
*சத்தம் கேட்கும்"*

இது அரைகுறை அறிவுடனான அகம்பாவச் செயற்பாட்டைக் குறிக்கிறது; ஆனால் 'நிலவோ' பேரியற்கையின் குறியீடாக இருக்கிறது. அதைப் பார்த்து சசி சொல்கிறார்:

*"நீயோ நிறைந்திருக்கிறாய்.*
*இவன் இன்று வந்தவன்.*
*இவன் வர முன்னரே*
*நீ நிரம்பி இருக்கின்றாய்*
*நிரம்பி இருப்பது கிலுங்காது அல்லவா?*
*அது அடக்கம் எனப்படுவது அல்ல.*
*நிறைவு - நிறைவான நிறைவு."*

இதில் எங்கே வந்தது விரக்தி? இதேபோல, நிராசைக்கு உதாரணமாக நுஃமான் காட்டும், 'வெறும் வரிகளும் ஒரு இளவேனிலும்' ஒரு பெரும் தேடல். அங்கே நிராசையில்லை; அர்த்தமற்ற இருப்புப் பற்றிய விமர்சனம்; இப்போது நாம் வாழும் யாந்திரிக சிறுவட்ட வாழ்க்கையின் ஆழமின்மையைக் கூறுவது. தலைப்பே சூசகமாக உட்பொருளைத் தெரிவித்து விடுகிறது. ஒன்று வெறும் வரிகள் அர்த்தமற்றது. மற்றது: இளவேனில் - வசந்தகாலம், அற்புத இருப்பு.

*"வெறும் வரிகள்... வெறும் Dots.*
*வெறும் கோடுகளும்... வெறும் புள்ளிகளும்*
*வெறும் இதயம்."*

'வெறும் இதயம்' என்பதற்கு அழுத்தம் தந்துள்ளேன் அதன் ஆழத்தை உணர்த்துவதற்காக. அடுத்த கேள்வி, அவன் என்ன Sisyphus ஆ? Sisyphus தரக்கூடிய ஓவியம் எவ்வாறிருக்கும் 'கடவுளை எதிர்த்த Sisyphusக்கு கடவுளால் ஒரு தண்டனை: ஒரு பாறையை அடியிலிருந்து மலையின் உச்சிக்கு உருட்டிச் சென்று, பின்னர் அதனை மலையின் அடிக்குத் தள்ளிவிடவேண்டும்; பின்னர் மலை உச்சிக்கு உருட்டிச் செல்லவேண்டும்; மீண்டும் மீண்டும் அதைச் செய்து கொண்டே இருக்கவேண்டும். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த அர்த்தமற்ற செயற்பாட்டை அவன் சந்தோஷமாகத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறான் அது போலத்தான் நானுமா? என்று கேட்கிறார் சசி. இந்த அர்த்தமற்ற இருப்புப்பற்றிய தெளிவுதான் இக்கவிதையில் நாம் பெறும் வெளிச்சம். எங்கே நிராசை வந்தது இங்கு?

'நத்தைச் சுகம்', 'தவறிய பருவங்கள்', 'ஒரு பிரியாவிடை' என்பவற்றில்கூட நிராசை இல்லை. 'ஒரு பிரியாவிடை' சமூகத்தோடு ஒத்தோட மறுத்த ஒருவன் சமூகத்தால் புறக்கணிக்கப்படும்போது ஏற்படுகின்ற விளைவுகளையும் மனநிலையையும் காட்டுகிறது.

*"உங்கள் சேட்டில்*
*ஓட்டியிருந்த தூசியைப்போல்"*
*"உங்கள் ஏளனத்துக்கு இலக்காய் இருந்த*
*ஒரு காலிப் பயல்"*

இந்த விபரிப்பு விரக்தியினால் ஏற்பட்டது அல்ல; யதார்த்தத்தில் முரணான சமூகத்தை எதிர்கொள்வது பற்றியது. தொடர்ந்து-

*"உங்கள் கோர்த்த கரங்களுக்கு*
*வெளியேதான்*
*நீங்கள் அவனை வைத்திருந்தீர்கள்"*

*"உங்கள் பலம் பொருந்திய வியூகங்களின்*
*முன்*
*அவன் என்ன?*
*சாணம் உருட்டிய பீ வண்டு"*

என்று சொல்லி தன் இறப்பின்போது என்ன நடக்கும் என்று காட்டி முடிக்கிறார். சமூகத்தில் குளிர் காய்பவர்களுக்குப் பிரச்சினை இல்லை. எதிர்த்தோடு பவர்களின் நிலை இதுதான். நுஃமான் சசியின் விரக்திக் காலம் என்று சொல்லும் காலத்திலே அவர் அற்புதமான இயற்கை நயப்புக் கவிதைகளை எழுதி யுள்ளார்; உதாரணம், 'நண்டும் முள்முருக்கும்' (1979)

ஆங்காங்கே சில மேற்கோள்களைத் தந்து சசியை நான் உங்களுக்குத் தர முடியாது. மனித ஆளுமை, எதனுள்ளும் பிடிபடாத மகத்துவமான இரகசியம். ஒருவனுடைய வெளிப்பாடுகளிலிருந்து சொல், செயலிலிருந்து ஒரு சிறுபகுதியைத் தெரிந்து கொள்ளுகிறோம். நாம் அவனைப்பற்றித் தெரிந்து கொள்ளாத பகுதிகள் நிறைய எப்போதுமே இருந்து கொண்டிருக்கும். கலை இலக்கியங்களில் ஈடுபடு பவன் தன்னை அதிகமாகவே வெளிப்படுத்திக் கொள்கி றான். அதற்குக் காரணம் அவன் அக ஆழத்துள் செய்யும் பயணம். சசியின் ஆளுமையில் 'நீர் வளை யங்கள்' ஒரு சிறு பகுதி; அதிலும் நான் மேற்கோள் களால் காட்டியிருப்பவை ஒரு சிறு பின்னம். தமிழ்க் கவிதையை நேசிக்கும் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய கவிதைத் தொகுதி 'நீர் வளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள்'. அவரது முழுக் கவிதைகளையும் வாசிக்கின்றபோது கிடைக்கும் அனுபவத் திளைப்பு ஆழமானது. அதை நான் மேற்கோள்களினூடாகத் தர முடியாது.

இது, 'என் வாசிப்பு'; நீங்கள் வேறுவிதமான வாசிப்புகளையும் வெளிச்சங்களையும் பெறக்கூடும். பெறுவீர்கள். அந்த வகையில், சசியின் கவிதைகள் விரிவான பல விசாலங்களுக்கு விட்டுக் கொடுக்கும்.

சசியின் 'ஆமைபோல் ஐந்தடக்கி ஊமையாக இருக்கின்ற கவிதைகளும்' வெளிவந்து, இதுவரை நூலுருப் பெறாத சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், இன்னும் கையெழுத்துப் பிரதிகளாய் இருப்பவை அனைத்தும் நூலுருப் பெறவேண்டும். அவருடைய மூல விக்கிரகத்தை தரிசிப்பதற்காக. அதனைத் தரிசிக்கும் போது நாம் எமது மூலவிக்கிரகத்தையும் தரிசிக்கலாம்; அதுதான் கலையின் உன்னத பயன்பாடு.

கடைசியாக, நுஃமான் சசியைப் பற்றிச் சொல்லிய கருத்துகளுடன் இக் கட்டுரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்- "சண்முகம் சிவலிங்கம் தன் சுயத்தை முழுமையாக வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதை விரும்பும் ஒரு கவிஞர். 'இருத்தலும் இருத்தலுக்குப் பிரக்ஞையாய் இருத்தலும்' முக்கியமென்று கருதுபவர். தற்காலத் தமிழில் சசி ஒரு வித்தியாசமான, தனித்துவமான கவிஞர் இவர்மூலம் நவீன தமிழ்க் கவிதை சில சிகரங்களை எட்டியுள்ளது." □□□

## தொலையும் பொக்கிஷங்கள்...

வலிகள் நெருடிய
வாழ்வுதனை
வந்தவழி பின்னோக்கி
வருடியதில்
வாழ்வே சூன்யமான சூக்குமத்தை
நானுணர்ந்தேன்.
எம் வாழ்க்கைப் பயணத்தில்
தொலைத்தவை நீண்டன.
தொலைந்தவர்
பட்டியலாய்...
தொலைந்தவற்றின்
பெருமைதனை
மீட்டிப்பார்க்கும்
ஓர்நொடியும் அகிலம்விட்டு
அந்தரத்தில்
உல்லாசமாய்
உன்மனது...
ஆர்ப்பரிப்பு நீளவில்லை
அரைநொடியில்
அஸ்த்தமனம்
மீதமுள்ள பொக்கிஷத்தை
காப்பவர் எவர்தானோ...?
என்மனத்திரை
ஓரமெங்கும்
அலைமோதின
கேள்விக்கணைகள்
பதில் கூறமுடியாது
மௌனித்தது
என் சிந்தை...



- மா. செல்வதாஸ்

## வானம் பார்த்து

வாழ்க்கை!
மரணம் மலிந்த
பூமியில்
கானலாய்
நகர்கின்றது.

நாளை என்பது
நிச்சயமற்றதாகி
தூங்கா இரவுகளே
தொடர்ந்து நீளும்.

நிழல் தந்த
குற்றத்துக்காய்
வீதியோர மரங்களின்
தலைகள்
சாய்க்கப்படுகின்றன.
நீதி கேட்ட
தராசின்
துலாக்கள்
அறுக்கப்படுகின்றன.

மழை விட்டும்
தூவானம் மாறிடாத
மகிழ்வற்ற களம்.

மனச்சாட்சி
முட்களாய் உறுத்த
வானம் பார்த்த
பூமியாய்
நான்.



- கு. கோபிராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகையும் அதன் மணமும் நானும் என் மனமும்



பேருவளை றபீக் மொஹிடீன்

ஈழத்தின் பிரபல்யம் வாய்ந்த இலக்கிய இதழொன்று என் வீடு தேடிவந்தது. கையிலெடுத்துப் பார்த்தேன். அது மல்லிகையாக இருந்தது. நான் கொழும்புக்குச் சென்றால் அங்கே வெள்ளவத்தை பூபாலசிங்கம் புத்தக நிலையத்தில் மல்லிகையை வாங்கி வருவது வழக்கம். மல்லிகை மீது எனக்கொரு பற்றும் ஈர்ப்பும் இருந்தபோதும் இதுவரை நான் அதன் சந்தாதாரனாகி விடவில்லை. மல்லிகையில் எனது ஓரிரண்டு ஆக்கங்கள் வெளிவந்திருந்த போதும் மல்லிகையில் நான் பூரண உறுப்புரிமை பெறவில்லை. ஆனாலும், நான் மல்லிகையை தொடர்ந்து வாசிப்பதுண்டு. நேசிப்பதுண்டு. சுவாசிப்ப துண்டு. மல்லிகை எனக்குப் பிடித்த இதழ். மல்லிகை எனக்குப் பிடித்த மலர். அதனால் தான் என் வீட்டு முன்பக்க முற்றத்தில் மல்லிகைச் செடியை நட்டு வளர்த்து வருகிறேன். அதன் மணம் என் வீட்டு முற்றத்தை மட்டுமல்ல. என் முற்றத்துக்கு வெளியே போவோர் வருவோரையெல்லாம் ஈர்த்தெடுக்கும் இயல்பு வாய்ந்தது. மல்லிகை மலரைப் போன்றுதானே மல்லிகை இதழும். கொழும்பிலிருந்து பேருவளையை நோக்கி வீசிய மல்லிகையின் நறுமணத்தினை அருகே சென்று சுவாசித்திட அன்றே திடசங்கற்பம் பூண்டேன். உடனே மல்லிகையின் காவலர் மல்லிகை டொமினிக் ஜீவாவோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினேன். நான் கொழும்புக்கு வரும்போது கட்டாயம் மல்லிகைப் பந்தலுக்கு வருவதாகக் கூறினேன்.

ஓரிரு வாரங்கள் கழித்து நான் கொழும்புக்குச் சென்றபோது மல்லிகைப்பந்தல் இருக்கு மிடத்தைத் தேடியலைந்தேன். கொழும்பு கொட்டாஞ்சேனைக்கு வந்து கொட்டாஞ்சேனை இந்துக்கல்லூரி அமைந்திருக்கும் வீதியிலிருந்து மல்லிகைப் பந்தல் அமைந்திருக்கும் ஸ்ரீகதிரேசன் வீதியைத் தேடினேன். வழிநடையாகவே போவோர் வருவோரிடம் கதிரேசன் வீதி இருக்குமிடத்தை மெல்லமெல்லக் கேட்டறிந்து ஒருவாறு மல்லிகைப் பந்தல் அமைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தேன். நீண்டதொரு வீட்டொழுங்கை. அதன் மேல்மாடியின் ஒரு பகுதியில் மல்லிகைப்பந்தல் என எழுதப்பட்டிருந்த தைக்கண்டு மகிழ்ச்சி கொண்டவனாக அவ்வீட்டொ ழுங்கைக்குள் நுழைந்தேன் .அதற்குச் செல்லும்போது ஒரு பெண் ‘எங்க போறீங்க?’ என்று என்னை வினவ ‘ஜீவா சேரைப்பார்க்க’ என்று பதில் கூறினேன். நானளித்த பதில் அப்பெண்ணுக்கு திருப்தியளிக்க வில்லை போலும் தொடர்ந்து நான் ‘மல்லிகை டொமினிக் ஜீவாசேரைப்பாக்கணும்’ என்றேன். ‘மேலே போங்க’ என்றாள் அவள். மேலே சென்றேன். சிறியதொரு அறை அந்த அறையின் நுழைவாயிலுக்கு நேரே ஒரு சாய்வு நாற்காலியில் ஒரு மாமனிதர் சாய்ந்த வண்ணம் இருந்தார். அவருக்குப் பக்கத்தில் கணினியில் தட்டச்சு செய்துகொண்டு ஒரு பெண் தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்த மாமனிதர், ஆம் அவர்தான் மல்லிகைப்பந்தல் ஆசிரியர் டொமினிக்ஜீவா. அவரை நான் ஓரிருதடவை நேரிலே கண்டிருப்பினும் அவருடன் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியதில்லை. ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் நடாத்தப்படும் ஆய்வரங்குகளில் கவிஞர் ஏ.இக்பாலுடன் நான் சென்றிருக்கும் சமயம் அவரை நான் நேரிலே கண்டிருக்கிறேன். இலக்கியத்துறையில் இமயத்தை எட்டிநிற்கும் அப்பேரிலக்கியவாதிகளோடு இலக்கியப் பாலைப் பருக தவழ்ந்து தவழ்ந்து நடைபயிலும் இந்தக் கன்றுக்குட்டி பேசுவதற்கு என்ன இருக்கிறது. தாய்ப்பசுவின் பின்னால் செல்லும் கன்றுக்குட்டிபோல கவிஞர் ஏ.இக்பாலின் பின்னால் நின்று அவரோடு அவர்கள் பேசுவதை, கலந்துரையாடுவதை வேடிக்கை பார்த்திருந்திருக்கிறேன். அத்தகைய நான் அன்று நேரடியாக அவரைச் சந்தித்துப் பேச நினைத்த போது முதலில் எனக்கு நா எழவில்லை. சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த டொமினிக் ஜீவா அவர்களை எப்படி என் கவனத்துக்கு இழுப்பது, எவ்வாறு அவரை அழைப்பது? ஜீவா என்று அழைப்பதா? டொமினிக் ஜீவா என்று அழைப்பதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை ஜீவா என்று அழைப்பதா? ஜீவா சேர் என்று அழைப்பதா? இந்தக் கேள்விகள் அனைத்தும் எனக்குள் அந்த ஒரு நொடிப்பொழுதில் எழுந்து மறைந்தன. இலக்கியச்சிகரத்தை, அதிலும் இலக்கியத்துறையில் பவளவிழா கண்டிருக்கும் அகவை முதிர்ந்த மூத்த எழுத்தாளரை, எப்படி அழைப்பதென்று அந்தக்கணம் எனக்குப் புரிய வில்லை. அடுத்த கணம் என்னையறியாமலேயே 'ஜீவாசேர்' என்று என் வாய் அவரை அழைத்தது. இவ்வாறு இரண்டு மூன்று தடவை அழைத்தபோது தட்டச்சு செய்துகொண்டிருந்த பெண் என்னைக் கண்டு ஜீவா அவர்களைப் பார்த்து 'ஓங்கள யாரோ பேசுறாங்க' என்று கூற சிந்தனையிலிருந்து விடுபட்ட ஜீவா அவர்கள் 'யார்? என்ன விஷயம்?' என நான் வந்த விடயத்தைக் கேட்டார். என்ன சொல்வது? எப்படி ஆரம்பிப்பது? என்று தெரியவில்லை 'நான் பேருவளையிலிருந்து வாறன், நான்தான் றபீக்மொஹிடீன் அன்று ஓங்களோட போன்ல பேசினது நான் தான். ஓங்கள் சந்திச்சு அதோட மல்லிகைக்கு சந்தா கட்டிட்டுப் போக வந்தன்' என்று படபடவென்று என் வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

உடனே, சாய்வுநாற்காலியிலிருந்து எழுந்த ஜீவா அவர்கள் "வாங்கோ, இப்படி இருங்கோ" என அருகிலிருந்த மற்றுமொரு கதிரையில் என்னை அமரும்படி கூறினார். பின்னர் நான் மல்லிகைக் காரியாலயத்தைக் கண்டுபிடித்து வந்த விதம்பற்றியும் எனது சுயவிபரம்பற்றியும் கேட்டார். மல்லிகைக் காரியாலயத்தைத் தேடி நான் வந்த விதம் பற்றி நான் கூற, அவர் அறிந்தபோது அவருக்கு என்மீது ஒரு பற்று ஏற்பட்டிருக்க வேண்டும் என நினைக்கிறேன். ஏனெனில், பேருவளையிலிருந்து கொழும்புக்கு வருவது பெரிய விடயமல்ல. கொழும்பு வந்த நான் மல்லிகைக் காரியாலயத்தைத் தேடி நடைப் பயணமாகவே வந்தது எனக்குள் இருந்த இலக்கிய ஆர்வத்தை அவருக்கு உணர்த்தியிருக்க வேண்டும். மேலும் நான் அனுராதபுரம் வஸீம் அக்ரமின் நண்பன் எனக்கூற, எனக்கும் நண்பர் வஸீம் அக்ரமுக்கும் இடையிலேற்பட்ட உறவுநிலை பற்றிக் கேட்டார். நாங்கள் இருவரும் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் என்றும் அவரைவிட நான் இரண்டு வருடம் மூத்தவன் என்றும் தற்போது நான் பட்டம் பெற்றுவிட்டேன் என்றும் கூறினேன். முதலில் நான் வஸீம் அக்ரமின் நண்பன் எனக் கூறியதும், முன்னர் எனக்களித்த மரியாதையைவிட சற்று கூடுதலாகவே மரியாதை யளித்தார். ஏனெனில் வஸீம் அக்ரம் ஓர் இலக்கிய ஆர்வலர். வளர்ந்து வரும் புதிய தலைமுறைக் கவிஞர் மட்டுமன்றி எழுத்தாளரும் கூட. அவரது பல கவிதைகள் பல சஞ்சிகைகளில் வெளிவந்திருக் கின்றன. 'மண்ணில் துழாவும் மனது' என்ற கவிதை நூலொன்றையும் வெளியிட்டி ருக்கிறார். அத்தோடு அநுராதபுரத்திலிருந்து வெளிவரும் 'படிகள்' என்னும் இருமாத இலக்கியச் சிற்றிதழின் ஆசிரியரும் கூட. இத்தகையதொரு இளம் இலக்கிய வாதியின் நண்பரும் இலக்கிய ஆர்வம் உள்ளவராகத்தானே இருக்க வேண்டும் என ஜீவா அவர்கள் நினைத்திருப்பார்கள் என எண்ணுகிறேன்.

சில நிமிட நேரங்கள் டொமினிக் ஜீவா அவர்களோடு பேசக்கிடைத்தது. அந்தச்சில நிமிடங் களில் அவரைப் பற்றி நான் அறிந்து கொண்டவை பல. மல்லிகைக்குச் சந்தாப்பணம் கட்டுவதற்காகவே வந்த என்னை அவர் அணுகியவிதம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. வந்தவுடனே ஒரு சில வியாபாரிகள் நடந்து கொள்வது போன்று அவர் நடந்து கொள்ளவில்லை. வெகு தூரத்திலிருந்து வந்த என்னை அமரவைத்து என்னைப் பற்றிக் கேட்டறிந்து, என் இலக்கிய ஆர்வத்தைப் புரிந்துகொண்டு, எனக்கும் மல்லிகை இதழுக்கும் இடையேயுள்ள நெருக்கத்தை அறிந்து கொண்டு, என்னோடு உரையாடிய விதம் என்னை அவர்பால் கவரவைத்தது. இறுதியில் சந்தாப்பணம் கட்டியதும் பேருவளையிலிருந்து வந்த என்னை வெறுங்கையோடு அனுப்பக் கூடாது என்பதற்காக மல்லிகைப்பந்தல் வெளியிட்ட சில புத்தகங்களோடு பல மல்லிகை இதழ்கள் ஆண்டுமலர்கள் என அதிகமாகத் தந்தார். இன்னும் அதிகமாகத் தந்திருப்பார். என்னால் சுமக்க முடியாமல் போகுமே எனத் தெரிந்ததும் என்னால் சுமக்க முடிந்த அளவுக்குத் தந்தார். இவற்றுள் மல்லிகை ஜீவா அவர்களின் சுயவரலாற்று நூலும் அதன் இரண்டாம் பாகமான 'அச்சுத்தாளின் ஊடாக ஓர் அனுபவப்பயணம்' எனும் நூலும் இன்னும் சில நூல்களும் அடங்கும். இந்த நூல்களைத் தந்ததும் இதற்குரிய காசு என்னிடம் அதிகம் இல்லையே குறிப்பிட்டளவு பணமே நான் கொண்டு வந்தேன் எனக் கூறவும் "காசு முக்கியமில்லை, பேருவளையிலிருந்து வந்த உம்மை சும்மா வெறுங்கையோடு அனுப்ப நான் விரும்பவில்லை. நீர் வரும்போது கோல் பண்ணிவிட்டு வந்திருந்தால் சில புத்தகங்களை நான் தேடித் தெரிந்தெடுத்து வைத்து உமக்குக் கொடுத்திருப்பேன். இப்போதைக்கு இதைக்கொண்டுபோம். போய் நன்றாக வாசியும் வாசித்துவிட்டு என்னோடு போன் கதையும்" என்று நான் நினைக்காத அளவுக்கு என்னோடு அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டார். நான் அவரிடமிருந்து விடைபெறும்போது அவர் கூறிய அறிவுரை இதுதான். "நன்றாக வாசியும், நன்றாக எழுதும், உம்மைப் போன்றவர்கள் நன்றாக எழுத வேண்டும்." ஜீவா அவர்களின் இந்த அறிவுரைக் கேற்ப வீடுவந்து சேர்ந்த நான் முதலில் அவரது சுயவரலாற்று நூலையும் பின்னர் அதன் இரண்டாம் பாகத்தையும் படித்தேன். அதன் பின்பு உருவானதே எனது இந்தக் கட்டுரை.

மல்லிகை ஜீவா அவர்களின் எழுதப்படாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கு வரையப்படாத சித்திரம் என்ற சுயவரலாற்று நூலை கையிலெடுத்ததும் அதனைக் கீழே வைக்க முடியவில்லை அதற்காக 'இருந்த இருப்பிலேயே ஒரே தடவையிலேயே படித்து முடித்தேன்' என்று நான் பொய் சொல்ல மாட்டேன். இரண்டு இருப்புக்களில் படித்து முடித்தேன். அதனை வாசிக்க வாசிக்க அதன் மொழிநடையே என்னை முதலில் கவர்ந்தது. டொமினிக் ஜீவா அவர்கள் பேசுவது போன்றே கதைசொல்வது போன்றே எனக்குத் தெரிந்தது. சிறுபிள்ளைகளுக்கு கதை கேட்பதென்றால் உயிர். நானும் அப்படித்தான். டொமினிக் ஜீவா அவர்களின் மொழிநடை எனக்குக் கதை சொல்வது போல் இருந்தது. அத்தனையும் உயிர்த்துடிப்புள்ள வார்த்தைகள். இந்த நிலையில் புத்தகத்தை யார்தான் கீழே வைக்க முனைவார்கள். ஜீவா அவர்கள் பால்ய வயது முதல் தான் அனுபவித்த வேதனைகள் தவிப்புக்களை யெல்லாம் தனது சுயவரலாற்று நூலில் பதியவைத்திருக்கிறார். ஆனால் ஒருபோதும் அதற்காக அவர் கலங்கியதில்லை எனக்கூறக்கேட்டிருந்த என்னுள்ளம் கலங்கியது. சுடச்சுடத்தானே பொன் ஒளிரும் காற்று வீசவீசத்தானே தென்னை மரங்கள் நாலாபக்கமும் ஆடி அசைந்து அதற்குத்தாக்குப் பிடித்து உறுதி பெறும். இப்படியானதுதானே ஜீவா அவர்களின் வாழ்க்கை என அறிய நேர்ந்ததும் அவரைப் போன்ற ஒடுக்கப்பட்ட இனத்துக்கே அவர் ஓர் எடுத்துக்கட்டாய் வாழ்ந்து காட்டியிருக்கிறார் என்பது உறுதியாகிறது. ஆனால் எத்தனை பேர்தான் இவரை வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கும் போதுதான் துக்கம் தொண்டையை அடைக்கிறது. இந்த நூலை வாசிக்க வாசிக்க, டொமினிக் ஜீவா அவர்களின் மீது நான் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் உயர்ந்து கொண்டே சென்றது. இந்த நூல் டொமினிக் ஜீவா அவர்களின் சுயவரலாற்று நூல் என்பதை விட டொமினிக் ஜீவா அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த அழிக்க முடியாத காயவடுக்களாகவே என் கண்களுக்குப்பட்டது. இதன் தொடர்ச்சியான 'அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவப் பயணம்' என்ற நூலை வாசிக்க நேர்ந்ததும் ஜீவா அவர்கள் மல்லிகைக்காக ஆற்றிய அளப்பரிய சேவையை உணர முடிந்தது. தனது பெயரோடு ஒட்டியமைந்த ஜீவா என்ற பெயரும் தனது மூச்சாகத் தான் கொண்டு நடாத்தும் தனது இதழின் மல்லிகை என்ற பெயரும் தனது உயிரான தன் மகனின் திலீபன் என்ற பெயரும் தனது வாழ்விலேற்பட்ட மனப்பதிவுகளின் பிம்பங்களே என நான் அறிய முடிந்ததும் என் உள்ளம் உருகியது. மல்லிகை இதழுக்காக அவரனுபவித்த துன்பங்களும் அதற்காக அவர் செய்த தியாகங்களும் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. இந்தத் துன்பங்களும் தியாகங்களுமே அவரை வெற்றியின் உச்சத்துக்கு கொண்டு சென்றிருக்கின்றன எனக் கூறலாம். வாழ்வில் தனக்கேற்பட்ட தோல்விகளை, வேதனை களை, தவிப்புக்களை, துன்பங்களை, சோதனைகளை படிக்ககட்டுகளாகக் கொண்டு அதிலே ஏறி நடந்து சாதனை படைத்தவர் இந்த டொமினிக் ஜீவா. இத்தகைய சாதனை படைத்த டொமினிக் ஜீவாவின் ஆசை ஒன்றே ஒன்றுதான். எந்த சமூகம் தன்னை இழிசினர்சாதி என ஒதுக்கி வைத்ததோ, எந்த சாதி தன்னை பஞ்சமன் என விலகி நடந்ததோ அதே சாதிகளின், அதே சமூகங்களின் பரம்பரைகள் நாளை டொமினிக் ஜீவா என்ற வேரைத்தேடி நிச்சயம் வரவேண்டும் என்பதுதான். டொமினிக் ஜீவா என்ற வேரை நாளைய விழுதுகள் தேடிவரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் நாளைய விழுதுகள் தேடி வரும்போது அந்த வேர் நம் கண்களுக்குப் புலப்படுமா? புலப்படாவிட்டாலென்ன? அந்த வேரிலிருந்து முளைத்து வளர்ந்துவந்த மல்லிகையும் அதன் மணமும் உலகளவில் மணம் பரப்புமே. அந்த மணமே சாட்சி சொல்லும் தனது வேர் 'டொமினிக் ஜீவா" என்று. □□□

**நூல் அறிமுகம்**

*நூல்*

**தொலையும் பொக்கிஷங்கள்**

*ஆசிரியர்*

வதிரி.இ.இராஜேஸ்கண்ணன்

*வெளியீடு*

மீரா பதிப்பகம்

*விலை* - 200/=




*நூல்*

**பாட்டுத்திறத்தாலே...**

*ஆசிரியர்*

த.கலாமணி

*வெளியீடு*

ஜீவநதி வெளியீடு

*விலை* - 200/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"'சாதிகள் இல்லையடி பாப்பா... குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்...' எல்லோரும் ஒருமித்துச் சொல்லுங்கோ"

"சாதிகள் இல்லையடி பாப்பா..., சாதிகள் இல்லையடி பாப்பா..." இடையில் ஒரு குரல், "சாதி என்றால் என்ன ரீச்சர்?" என்கிறான் சுதாகர்.

"இலங்கையில் உள்ள இனங்களைக் கூறு" என்கிறார் ஆசிரியை வதனி

"சிங்களவர், தமிழர், முஸ்லீம், பறங்கியர்"

"அது சரி சுதாகர். ஆனால் இனங்கள் நான்காக இருந்தாலும் ஒவ்வொரு இனத்திலும் பல சாதிகளை வகுத்துள்ளனர் இந்த மக்கள்."

"அவை என்னென்ன ரீச்சர்" மறுபடியும் கேட்கின்றான்.

ஆசிரியையாக பணியாற்றத் தொடங்கி ஆசிரியர் சேவையினுள் உள்வாங்கப்பட்டாள்.

"வாங்கோ ரீச்சர், என்ன இண்டைக்கு சீக்கிரம் வந்திட்டீங்க" வரவேற்கின்றாள், 'கன்டீன்' அக்கா.


சற்றுப் பொறுத்து "இந்தாங்க ரீச்சர்" என்று தேநீர் கோப்பையை நீட்டுகின்றான்.

தேநீரை வாங்கி மேசையில் வைத்த வதனி தனது மாணவன் கேட்ட கேள்வியை தன்னுள்ளே கேட்டுப் பார்க்கின்றாள். அம்மா, அப்பாவிடம் இதைப்பற்றி எவ்வாறு கதைப்பது! அவளுடைய சிந்தனை எல்லாம் றொபேட்டைப் பற்றியே சுழலுகிறது.

றொபேட் பக்கத்து பாடசாலையில் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர். இவளும் தமிழ் ஆசிரியை. அதனால் பலதடவை தமிழ்பாட 'செமினாரில்' கண்டு கதைத்து, நட்பு மொட்டாகி, அது காதல் மலராக பூத்துக் குலுங்கி அவர்கள் உள்ளங்களில் மணம் வீசுகிறது. இதை அவர்கள் அறிந்தால்...?

"என்ன ரீச்சர் யோசினை?" கன்டீன் அக்கா கேட்கின்றாள்.

# புதிய குரல்



**எம். விஜிதா**

"நீ வளர வளர உனக்குப் புரியும். பெரியவர்கள் சாதியை ஒரு வழக்கமாகப் பின்பற்றுகிறார்கள். ஆனால், சிறுவர்களாகிய நீங்கள் அதைக் கடைப்பிடிக்கக்கூடாது. ஒருவரையும் ஒதுக்கி வைக்கக்கூடாது. எல்லோரையும் உங்கள் குடும்பத்தின் ஓர் அங்கத்தவராக நினைக்க வேணும். ஆசிரியை சொல்லிக்கொண்டிருக்க பாட வேளை முடிந்து, இடைவேளைக்கான மணி அடிக்கிறது. மாணவர்கள் சந்தோஷமாக ஆரவரத்துடன் மைதானத்தை நோக்கி ஓடத் துடிக்கின்றார்கள். ஆசிரியை வதனி 'கன்டீனை' நோக்கி நடக்கின்றார்.

வதனிக்கு ஆசிரியத் தொழில் அவசியமானதல்ல. பணக்காரார் பரம்பரையில் பிறந்தவள். ஏழெட்டு தலைமுறை உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு சொத்து பத்துகள் அதிகம் இருந்தும் தான் கற்பிக்க வேண்டும் என்ற ஆவல் சிறுவயதிலிருந்து அவள் மனதில் வேருன்றியிருந்தது. உயர் தரம் சித்தி பெற்றும் பல்கலைக்கழக அனுமதி எட்டாததால் தொண்டர்

"ஒண்டுமில்லை... ஒண்டுமில்லை..." சொல்லிக் கொண்டு மளமள வென்று ஒரே இழுவையில் உள்ளே விழுங்கி விட்டு வெளியே வருகின்றாள்.

இடைவேளைக்கு அடுத்தபாடம் 'பிறி' என்பதால் 'ஸ்ராப்ரூமிற்குள்' சென்று தன் கனவுலகை நோக்கி நடை போட ஆரம்பிக்கிறாள்.

றோபோட்டை முதன்முதலில் சந்தித்த போது பெயரை கூட தான் கேட்கவில்லை. அவரின் பேச்சும், குணமும் அவர்பால் என்னை ஈர்த்தது. ஆனால் காதல் என்றால் வீட்டிலே சாதி, பெயர், மதம் என்ன, என்று கேள்வி மேல் கேள்வி கேட்பார்களே? என்ன செய்வது? என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே அடுத்த பாடவேளைக்கான மணி அடிக்கிறது. றொபேட்டை சந்தித்து இதற்கொரு முடிவுகான வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டு எழுந்து செல்லுகின்றாள்.

***

அன்று மாலையே, றொபேட்டைத் தேடிச் சந்திக் கின்றாள். தனக்கு இருக்கும் நெஞ்சு இடியை அவளிடம் மெல்லச் சொல்லுகின்றாள்.

"வீட்டில் திருமணப்பேச்சு தொடங்கிற்று. மாப்பிள்ளை மாற்றை படம் எல்லாம் கொண்டு வந்து காட்டுகினம் நான் என்ன செய்ய றொபேட்?" கேட்கிறாள் வதனி.

"எவரப் பிடிக்குதோ அவரக்கட்டன்" என்று பகிடியாக சிரித்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளையாடாதேயுங்கோ! காத்திருந்தது போதும். இனிமேலும் என்னால் இயலாது. வீட்டிலே ஒரே கரைச்சல். எங்கடை விஷயம் அறிஞ்சு விட்டினமோ தெரியாது."

"அப்ப உண்மையைச் சொல்லி கலியாணத்துக்கு ஒழுங்கு பண்ண வேண்டியது தானே"

"சும்மா பகிடி பண்ணாதையுங்கோ! அது நடக்கிற காரியமா?"

"சரி... சரி... நான் நடத்திக் காட்டுகிறேன். கொஞ்சம் பொறு." ஆறுதல் கூறி விடைபெற்றுக் கொள்கிறான் றொபேட்.

***

மறுநாள் முதற்பாடவேளை ஐந்தாம் தரம் வகுப்பு மாணவருக்கு தமிழ் பாடம். வதனி வகுப்பறையை நோக்கிச் செல்கின்றாள்.



மாணவர்கள் எழுந்து நின்று "வணக்கம் ரீச்சர்" என வரவேற்கின்றனர். அனைவரும் உட்கார்ந்தனர். சுதாகர் மட்டும் எழுந்து நிற்கின்றான்.

"என்ன சுதாகர் பாடம் ஆரம்பிக்கும் முன்னமே சந்தேகமா?" என்கிறாள் வதனி சிரித்துக் கொண்டே.

"நீங்கதானே ரீச்சர் சொன்னீங்க சாதிவேற்றுமை பார்க்காம எல்லோரையும் மதிக்க வேணும் என்று"

"ஆமாம். அதுக்கென்ன?"

"நேற்று எங்கட உடுப்புகளை துவைச்சு எடுத்துக் கொண்டு வீட்டை ஒரு ஐயா வந்தவர். வெயில்ல வந்தவர். தாகமாய் இருக்கின்னு சொன்னார். நான் அவரை உள்ள இருத்தி தண்ணீர் கொடுத்தனான். அதைப்பார்த்த அப்பா அந்த ஐயாவை வெளியே அடிச்சுத் துரத்திப் போட்டார். என்னையும் ஏசிப்போட்டார். அவர் தாழ்ந்த சாதிகாரராம் உள்ளே சேர்த்தது பாவமாம். ரீச்சர் எங்கட துணிகளை துவைக்கிறவை தாழ்ந்த சாதிக்காரரே?"

"இல்ல சுதாகர் அம்மா உங்கடை துணிகளைத் துவைக்கிறா தானே! அவ தாழ்ந்த சாதியா? என்னுடைய தொழில் படிப்பிக்கிறது. அதே போல்தான் அது அவருடைய தொழில். இதில் தாழ்ந்தது உயர்ந்தது என்ற வேறுபாடு இல்லை. நீ செய்த காரியம் நல்லது. எல்லோரும் சுதாகரை வாழ்த்தி விடுங்கோ"

மாணவர்கள் கைகளைத் தட்டி வாழ்த்தி வரவேற்கின்றார்கள்.

***

"ஆசை... ஆசை... வா இஞ்சை!" - வதனியின் தந்தை முருகேசு வெளியே நின்று அழைக்கிறார்.

"ஆரது...?" கேட்டுக் கொண்டு ஆசை வெளியே வருகின்றார். முருகேசர் நிற்பதைக் காண வியப்பாக இருக்கிறது.

"ஐயா ஏன் வந்ததாக்கும்?"

"டேய் ஆசை உன்ரை மோனை ஒழுங்காகக் கட்டுப்படுத்தி வைச்சுக்கொள் இல்லையெண்டால் அவனை முடிச்சுப் போடுவன். இரண்டு எழுத்துப் படிச்சால் திமிர் வந்து விடுகிறது"

"ஐயா, அவன் சின்னப்பிள்ளை"

சின்னப்பிள்ளையோ! என்ரை மேளுக்குப் பின்னாலை சுத்த மட்டும் தெரியுது"

"ஐயா தான்.."

"ஐயா பாத்துக் கலியாணம் பண்ணி வைக்க வேணுமென்று சொல்லுறாயாக்கும்!"

முருகேசுவுக்கு ஆத்திரம் கொப்பளித்து கண்கள் சிவக்கிறது.

"அடி செருப்பால என்ன துணிச்சல் உனக்கும் உன்ரை மோனுக்கும்! என்ர மடியிலேயே கையை வைக்கிறாய்! வண்ணாரப் பிள்ளைக்கு வெள்ளாடிச்சி தேவைப்படுதோ? டேய் நாலெழுத்து படிச்சாப்போல உன்ர மோன்ரை சாதி ஒன்றும் மாறாது. கடைசியாய் சொல்லிப் போட்டு போகிறன் உன்ரை மோனைக்கவனமாக நடக்கச் சொல்லு. இல்லையே. கொலை விழும்"

அவர் எச்சரித்து விட்டு விறுவிறு என்று திரும்பி நடக்கின்றார்.

***

திங்கட்கிழமை வழமைபோல இறைவணக்கத்தை தொடர்ந்து மாணவர் ஒன்று கூடலும் முடிந்து, அவரவர் வகுப்பறையினுள் செல்கின்றனர். ஒரு ஆசிரியர் மற்றைய ஆசிரியரிடம் "எங்கட வதனி ரீச்சர் றொபேட்சேரோடு பதிவுத்திருமணம் செய்திட்டு வேறு ஊருக்கு போயிட்டாவாம்" என்று தகவல் சொல்கிறார். அன்று ஐந்தாந்தரம் வகுப்பிற்கு முதற்பாடவேளை தமிழ் வதனி ஆசிரியை வகுப்புக்கு வரவில்லை. அதிபர் கையில் தடியுடன் வருகின்றார். "எல்லோரும் பாடத்தை எடுத்துப் படியுங்கோ!" என்கின்றார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா... குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்..."

பாரதியின் பாடலடிகள் அந்தச் சிறுவர்களின் புதிய குரலாய் எங்கும் ஓங்கி முழங்கிற்று.□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணிலாக் குணமுடையோர் – 4

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

(அண்மையில் வானொலியிலும் பத்திரிகைகளிலும் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் ஒரு சிங்கம் இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. சிறிது காலமாக உணவுண்ணாமலிருந்த அச்சிங்கத்திற்கு மருத்துவம் செய்தும் பலனில்லாது போய் அது இறந்துவிட்டது. அது என்னிடம் பேசியது)

மனிதர்கள் விதவிதமாகப் பேசுவதை மட்டுந்தான் நீங்கள் கேட்பீர்கள். நாங்கள் பேசுவது எதுவும் உங்களுக்குக் கேட்காது. எங்களுக்கும் விருப்பு வெறுப்புகள், உணர்ச்சிகள் உண்டென்ப தையும் எண்ணிப்பார்க்கமாட்டீர்கள்.

மனிதர்கள் கூறுவதையோ அவர்களது மனநிலையையோகூட நீங்கள் புரிந்து கொள்வதில்லை. இப்படி நான் கூறுவதை நீங்கள் ஒப்புக் கொள்ளமாட்டீர்கள். ஆனால் அதுதான் உண்மை. அந்தப் புரிந்துணர்வே இல்லாத உங்களுக்கு எனது உணர்ச்சிகள் , எண்ணங்கள் எல்லாம் எப்படி விளங்கப்போகிறது?

நான் ஒரு வாரத்திற்கு மேலாக உணவைத் தொடவேயில்லை. எனக்கு ஏதோ வியாதியென்று கூறி மருந்துகள் தருகிறார்கள். அவை என் பசியைக் கொழுந்துவிட்டெரியச் செய்கின்றன. ஆனாலும் நான் பிடிவாதமாக உண்ணாமலே கிடக்கிறேன். ஓரிரு நாட்களில் எனது உயிர் பிரியலாம். உயிரை இந்த உடலிலே வைத்திருப்பதற்காக நான் உணவுண்ணத் தயாரில்லை. இப்படி வாழ்வதை விட இறப்பது மேலானது என நான் தீர்மானிக்க வைத்துவிட்டீர்கள்

நான் இறந்துவிடக் கூடாதென்பதற்காகப் பலவித முயற்சிகள் செய்கிறீர்கள். இவற்றிற்குக் காரணம் என்மேலுள்ள அன்பென்று கருத நான் முட்டாளல்ல. உங்களுக்குத் தேவை பணம். அதைப் பெற்றுக்கொள்ள என்னைப் பயன்படுத்து கிறீர்கள். எங்கெங்கோ இருந்து வருபவர்களெல்லாம் என்னை வந்துபார்க்கிறார்கள். எனது பராமரிப்புச் செலவிற்கென்றும் இந்தக் காட்சிச்சாலையின் செலவீனங்களுக்கென்றும் அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறீர்கள். எனது தேவை களையெல்லாம் சரிவர நிறைவேற்றுவதாக நீங்கள் காட்டிக்கொண்டால்தான் பணங்கிடைக்கும். அதற்காகத்தான் இந்த நாடகமெல்லாம்.

சிங்கம் என்ற மிருகவர்க்கம் அழிந்து போகாமல் காப்பாற்றுகிறார்களாம். அவர்கள் என்னைப் பரிவோடு பராமரித்ததாலேதான் சிங்கத்தைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறதாம்.

ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் நான் சிங்கமா? 'இது சிங்கம்' என்று என்னைக் காட்டுவது எவ்வளவுதவறு? உருவத்திலோ அல்லது இயல்பிலோ நான் சிங்கமாக இருக்கின்றேனா? இல்லை. இல்லவே இல்லை.

நான் சிறு குட்டியாக இருந்தகாலம் கனவு போன்று எனது நினைவிலிருக்கின்றது. என்னை ஆபிரிக்கக் காட்டிலிருந்து கொண்டுவந்ததாக இங்கே கூறக்கேட்டிருக்கின்றேன். அந்தக் காட்டிலிருந்த காலம் எவ்வளவு அருமையானது! எனது தாயின் கம்பீரமான தோற்றத்தை நீங்கள் பார்த்திருக்கவேண்டும். அதிலும் ஆண்சிங்கத்தைப் பார்த்தால் வீரத்திற்கும் கம்பீரத் திற்கும் இலக்கணம் என்று சொல்வீர்கள். சிங்கத்தின் கர்ச்சனை காட்டையே அடக்கி ஆளும். எல்லா மிருகங் களும் பயந்து நடுங்கும். மிருகங்களுஞ்சரி மனிதர் களும் சரி அருகில் நெருங்க அஞ்சி நடுங்குவர். தானே வேட்டையாடிக் கொண்டுவரும் இறைச்சியைத் தான் எனது அன்னை எனக்குந்தந்து தானும் உண்பாள்.

இங்கே கம்பிகளுக்கிடையே அடைந்து, என்னைக் காட்சிப் பொருளாக்கியிருக்கிறீர்கள். நான் நான் மனிதரைக் கண்டதும் அஞ்சும் ஜென்மமாக இருக்கிறேன். என் பராமரிப்பிற்கென்று நீங்கள் பெற்றுக்கொள்ளும் பிச்சையில் வாங்கிப்போடும் இறைச்சியைக் கால் வயிற்றிற்கு உண்டுவிட்டு, கம்பீரத்தைத் தொலைத்துவிட்டு, கர்ச்சிப்பதையே மறந்துபோய், என் இனத்துக்குரிய இலட்சணங்கள் எல்லாவற்றையும் இழந்து ஒரு குறியீட்டு மிருகமாக, காட்சிப் பொருளாக வாழவேண்டுமா? 'இது சிங்கம்' என்று எல்லோரும் பார்ப்பதற்காக ஒரு வாழ்வா? 'சிங்கம்' என்று வாழ்வதானால் சிங்கமாக வாழவேண்டும்.

இந்தக் கம்பிகளுக்குள் வாழக்கூடாது. எனது பிரதேசத்திலே வாழவேண்டும். அங்கே கம்பீரமாகச் சுற்றிவரவேண்டும். காட்டுக்கு அரசன் என்று சிங்கத்தைக் கூறுவார்கள். அப்படி அரசனாக உலவவேண்டும். என் உணவை நான் தேடும் வல்லமை எனக்குண்டு எனது உணவை நானே வேட்டையாடிப் பெறும் சுதந்திரம் எனக்கு வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை விட்டு, இப்படி எனக்கு உவப்பே யில்லாத உணவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாழ்க்கையை வாழவேண்டுமா? என்றொரு கேள்வி எனக்குள் குடைந்து கொண்டேயிருந்தது. முடிவில் நான் உணவைத் தவிர்த்தேன். அது தொடர்கிறது.

இதனை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்படிப்புரியும்? உங்கள் மொழியிலே கூறுவதையே விளங்கிக் கொள்ள முடியாது குதர்க்கம்பேசும் உங்களுக்கு எனது மனவேக்காடு எங்கே விளங்கப்போகிறது?

'இந்தக் கம்பிகளுக்குள் அடைபட்டிருக்க எனக்கு விருப்பமில்லை' என்று கூறினால் என்னைச் சுதந்திரமாக உலாவ விட்டுவிடுவீர்களா? எங்களைச் சரணாலயத்திலே வாழவிடக்கூட உங்களுக்கு விருப்பமில்லை. சரி நானே இதற்குள்ளிருந்து தப்பியோடினாலும் விட்டுவைப்பீர்களா? இல்லையே. ஒரு சிங்கத்திற்குரிய கம்பீரம் என்னிடமில்லா விட்டாலும் நாயென்றோ, பூனையென்றோ நினைக்கக்கூடிய தாகவும் எனது தோற்றமில்லையே. என்னைப் பார்த்ததுமே ஆபத்தான மிருகமாகத்தான் உங்களுக்குத் தெரியும். ஆகவே இதற்குள்ளேதான் இருந்து அழுந்தவேண்டுமென்பதுதான் எனது விதி. இந்த வாழ்வு எனக்குப்பிடிக்கவில்லை. அதனால் மரணிக்கத் தயாராகிறேன். □□□

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) 'அவை' (forum) கலை இலக்கிய வட்டத்தின் 17ஆவது ஒன்றுகூடல் அதன் அமைப்பாளர் த. கலாமணி அவர்களின் இல்லமான கலை அகத்தில் 2009 - 07 - 06 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் "சமகால இலக்கியமும் அதன் வெளிப்பாடுகளும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். அதன் பின்னர் கலந்துரையாடலும் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமை வகித்தார்.

2) வதிரி இ. இராஜேஸ்கண்ணன் எழுதிய "தொலையும் பொக்கிஷங்கள்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா 11 - 07 - 2009, யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமை வகித்தார். நூலின் அறிமுக உரையையும் வெளியீட்டுரையையும் கலாநிதி த. கலாமணி நிகழ்த்தினார். மதிப்பீட்டுரைகளை சு. குணேஸ்வரன் ஆசிரியர் அவர்களும் வேல். நந்தகுமார் ஆசிரியர் அவர்களும் நிகழ்த்தினர்.

3) அமரர் கவிஞர் கலாநிதி இ. முருகையன் அவர்களின் நினைவு நிகழ்வு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் 26 - 07 - 2009 அன்று சிவஸ்ரீ கு. தியாகராஜர் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. நினைவுரைகளை, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், சிற்பி, த.பஞ்சாட்சரம், துரைஎங்கரசு ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்பு நிகழ்வாக "கவிதைக்குள் உயிரொன்றி வாழ்" என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

4) அகில இலங்கை இளங்கோ கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் "சாகித்தியரத்னா", கலாநிதி இ. முருகையனின் நினைவுவிழா 29 - 08 - 2009 புற்றளை மகா வித்தியாலய சின்னத்தம்பி மண்டபத்தில் தென் புலோலியூர் பரா. ரதீஸ் தலைமையில் நடைபெற்றது. நினைவுரைகளை திருவாளர்கள் த. மார்க்கண்டு, க. தணிகாசலம், ஆ. கந்தையா, கவிஞர் கொற்றையூர் பி. கிருஷ்ணானந்தன், த. கதிர்காமநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்பு நிகழ்வாக கல்வயல் வே. குமாரசாமி தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

5) 'அவை' (forum) கலை இலக்கிய வட்டத்தின் 18ஆவது ஒன்றுகூடல் அதன் அமைப்பாளர் த. கலாமணி அவர்களின் இல்லமான கலை அகத்தில் 30 - 08 - 2009 மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் "சமகாலத்தில் பெற்றோர் - பிள்ளைகள் முரண்பாடுகளைக் கையாளல்" என்ற தலைப்பில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன் உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கலாபூஷணம் விருது பெற்ற திரு. வைரமுத்து கந்தசாமி அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

6) த. கலாமணியின் 'பாட்டுத்திறத்தாலே...' எனும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா, 02 - 09 - 2009 அன்று, யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி பொது மண்டபத்தில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை கவிஞர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் நிகழ்த்தினார். நூலின் மதிப்பீட்டுரைகளை எழுத்தாளர்கள் சி. ரமேஷ், இயல்வாணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.எஸ்.அமானுல்லாவின் கதைகள் "வரால் மீன்கள்" தொகுதி மீதான ஒரு பார்வையில்...



மேமன்கவி

1

ஒரு படைப்பின் பிரதியை, அப்பிரதியை படைத்த படைப்பாளியின் சூழலை பற்றியோ, அல்லது அப்படைப்பு படைக்கப்பட்ட சூழலை பற்றியோ அதிக அளவான அறிதல் இல்லாமல் பயிலுகின்ற பொழுது, அப்பிரதி வெளிப்படுத்தும் அர்த்தம், செய்தி, அனுபவம் போன்றவற்றைக் கொண்டு அப்பிரதியை பற்றிய மதிப்பீடுகளை முன் வைப்பது என்பது இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு போக்காக இருக்கிறது. இதற்குக் காரணம், படைப்புக்களின் பெருக்கமும், படைப்புக்கள் தோன்றிய சூழலிலிருந்து, அப்பிரதி அதிக தூரம் சென்றடைவதுமே ஆகும்.

ஒரு பிரதி தோன்றிய சூழலை பற்றிய அறிதலின்றி பயிலப்படும் அப்பிரதியானது, ஏற்படுத்தும் உணர்வு கோலங்கள் தாக்கபூர்வமாக அமையப் பெறும் பொழுது, அப்பிரதி கவனத்திற்குரியதும், தனித்துவ மானதுமான பிரதியாக அடையாளப்படுத்து வதற்கான தகுதியினை பெற்றுக் கொள்கிறது. இத்தகுதிக்கு, அப்பிரதியினை படைக்கின்ற படைப்பாளியின் ஆளுமை, மிகுந்த பங்கு பெறுகிறது. தன் ஆளுமை மூலம் தன் படைப்பு பிரதி படைக்க பெற்ற சூழலை பற்றிய அறிதலற்ற ஒரு வாசகத் தளத்திற்கு சரியாக ஒரு படைப்பாளி அடையாளப்படுத்தி விடும் பொழுது, ஒரு படைப்பை உள்வாங்குவதற்கு வாசகத்தளத்திற்கு அப்படைப்பு தோன்றிய சூழலை பற்றிய நேரடியான பரிச்சயத்தின் தேவை என்பது முக்கியத்துவம் பெறுவதில்லை. இது ஒரு புறம் என்றால், இன்னொரு புறம் ஒரு படைப்பு தோன்றிய சூழலை பற்றிய நேரடியாக பரிச்சயம் இல்லாத நிலையில், அப்படைப்பு உள்வாங்கும் வாசகத்தளமே அப்படைப்பின் வெளிப்பாட்டு பாங்கினூடாக தனக்கான ஒரு சூழலை உருவாக்கிக் கொள்வதன் மூலம், அப்படைப்பை படைத்த படைப்பாளி வெளிக் கொணர நினைத்த உணர்வுக் கோலத்திலிருந்து ஒரு மாறுபட்ட ஓர் உணர்வுக் கோலத்தையும் ஒரு வாசகத்தளம் அடைய கூடிய சாத்தியத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. (இன்றைய சூழலில் "ஒரு பிரதியின் வாசிப்பு" யிட்ட பிரஸ்தாபிப்புகளையும் இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.) இத்தகைய சிந்தனைகள் சார்ந்த ஒரு வாசகத்தளத்திலிருந்து நான் திருகோணமலை மூதூர் சார்ந்த எம்.எஸ். அமானுல்லாவின் 'வரால் மீன்கள்' எனும் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் சிறுகதைகளை உள்வாங்கிய அனுபவத்தை பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2

திருகோணமலை மூதூர் சார்ந்த அமானுல்லா 60கள் தொடக்கம் எழுதி வருபவர். தொகை அளவில் குறைவாக எழுதி இருப்பினும், இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள எல்லா கதைகளும் பரிசு பெற்ற கதைகள். அக்கதைகள் பரிசுகள் பெற்று இருக்காவிடினும், அவை அளவில் அவை சிறப்பான பிரதிகள் என்பது மறுப்பதற்கில்லை. எந்த விதமான ஆர்ப்பாட்ட வெளிச்சத்திற்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாதவர் என்பதை அவரது இந்த முதலாவது தொகுதிக்கு வழங்கப்பட்ட உரைகள் நிரூபிக் கின்றன. கிழக்கு மாகாணத்திலிருந்து ஈழத்து தமிழ் சிறுகதைத் துறைக்கு சொல்லக்கூடிய அளவான பங்களிப்பு கிடைத்து வந்திருக்கிறது. வ.அ.இராச ரத்தினம் முதற் கொண்டு இன்று எழுதி வரும் பல புனைவு கதைப் படைப்பாளிகளினூடாக அப்பங்களிப்பு கிடைத்தி ருக்கிறது. அந்த வரிசையில் அமானுல்லா வும் இணைத்துச் சொல்லப்பட வேண்டியவர் என்பதை வரால் மீன்கள் எனும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைகள் உறுதிப்படுத்துகின்றன. 60கள் தொடக்கம் அவர் எழுதி வந்தாலும் அவர் வாழ்ந்த சூழலில் நடந்தேறிய சமூக அரசியல் நிகழ்வு களால் அவர் படைத்த படைப் புக்கள், பல அழிந்து போன சூழலில், இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள எட்டு சிறுகதைகளும் 90களிலும் 2000களிலும் நடத்தப்பட்ட பல போட்டிகளுக்கு அனுப்பட்டு பரிசுகள் பெற்ற கதைகள். ஆனால் அவை அந்த காலகட்டத்தில் எழுதப்பட்டவை அல்ல என்பதை இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள அவரது நூன்முகத்தில் இடம் பெற்றுள்ள வரிகள் உறுதி செய்கின்றன.

**" 2006ஆகஸ்ட் கலவரங்கள் மூதூரில் உச்சங் கொண்ட போது எனது ஆக்கங்களில் சில சிதைந்து போயின. தொகுதியில் வெளியிட**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைச் சேகரித்த போது முக்கியமான சில சிறுகதைகள் விடுபட்டுப் போயிருப்பதை அறிய முடிந்தது. அவற்றை எனது நினைவில் இருந்து மீளவும் எழுதி இந்தத் தொகுதியில் சேர்த்துள்ளேன்."

## 3

அமானுல்லாவின் படைப்புக்களில் உயிர்ப்பு பெற்றிருக்கும் திருகோணமலை மூதூர் பிரதேசம் என்னை பொறுத்த வரை நேரடியான பரிச்சயமற்றது. ஆனாலும், அமானுல்லாவின் கதை பிரதிகளை என் வாசகத் தளத்தில் இணைத்துக் கொண்ட பொழுது அவை எனக்கொரு புதிய அனுபவத்தையும் பல்வேறு உணர்வுக் கோலங்களையும் ஏற்படுத்தின. இந்த கருத்தை நான் அழுத்தி சொல்வதற்கு காரணம், அமானுல்லா வின் கதைப் பிரதிகள் அந்த பரிச்சயத்தின் தேவையை, ஈடு செய்கின்ற வகையில் அமைந்துள்ளன என்பதை வலியுறுத்தத்தான். அமானுல்லாவின் இந்த எட்டு கதைப்பிரதிகளினூடாக வெளிப்படுத்தும் அம்சங்களை இவ்வாறாக சுருக்கிச் சொல்லாம்.

1) சமூக, பொருளாதார முரண்பாட்டு சூழலில் தாய்மை.
2) தமிழ்- முஸ்லிம் - சிங்கள மக்களிடையான உறவு
3) தலைமுறை இடைவெளி
4) சூழலியல் அம்சங்கள் (மீன்வகைகள், பூச்சி புழுக்கள், பாம்புகள், தாவரங்கள், காடுகள் இப்படியாக) படைத்த கதை மாந்தர்களுக்கான உருவகங்களாவும், படிமங்களாகவும், அத்தோடு அவ்வம்சங்கள் படைக்கப் பட்ட கதை மாந்தர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள். ஒரு வசதிக்காக இவ்வாறாக இவரது படைப்புக்கள் நோக்கப்பட்டாலும் இத் தொகுப்புக்கான எட்டு கதைகளிலும் மேற்கூறிய பண்புகள் பின்னிப் பிணைந்து இருப்பதை அப்பிரதிகள் நுண்ணிய பார்வையில் வாசிக்கப்படும் பொழுது தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

## 4

இந்த அம்சங்களை அமானுல்லாவின் பிரதிகளில் நாம் வாசக பயணத்தை மேற் கொள்ளும் பொழுது விரிவாக தரிசிக்கக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக பிரதேச ரீதியாக எழுதும் படைப்பாளிகள் தாம் சார்ந்த பிரதேசத்தில் நிலவும் சமூக பொருளாதார மற்றும் வர்க்க முரண்பாடு, சாதியம் இவ்வாறான முரண்பாடுகளையும், இயற்கை அனர்த்தங்கள், இயற்கை தரும் பாதிப்புக்கள், இவைகளின் ஊடாக தனிமனித, குடும்ப சூழலில் ஏற்படும் விளைவுகளை சித்திரிப்பதுதான் வழக்கம். அமானுல்லாவும் அத்தகைய அம்சங்களை கையாண்டாலும் அதிக அளவில் தன் சூழலியல் ஊடான பாதிப்புக்களை பற்றி சித்திரிக்க முனைந்துள்ளார். இதுவே அவரது தனித்துவம் எனலாம்.

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள முதல் கதையான "கொய்யா மரத்தில் குருவிச்சைப்பூக்கள்" எனும் கதையில் தொழிலுக்கு போகும் கணவன் புதைவெடியில் சிக்கி அகால மரணம் அடைய, விதவையான அவள் தன் கைக்குழந்தையை வைத்து கொண்டு கணவன் செய்த, கடலை ஒட்டிய நில பகுதியில் தொழில் செய்கிறாள். ஆனால் அவள் தொழில் செய்யும் அப்பகுதியில் நண்டு, பாம்பு போன்ற ஜந்துகளால் வரும் ஆபத்துகளால் அவள் அருகே இருக்கும் குழந்தை பல தடவை தப்பிக் கொள்கிறது. சுனாமி வருகிறது. அவளும் குழந்தையும் சிக்கினாலும் உயிர் ஆபத்தின்றி தப்புகிறார்கள். ஆனால் உயிர் தப்பும் குழந்தை தங்கள் குழந்தை என கொழும்பிலிருந்து வந்திருந்த தம்பதிகள் உரிமை கொண்டாட, இதனை அறிந்த அவளது தம்பி, குழந்தையை அடையாளம் காட்ட அவளை அழைத்துச் செல்ல, கடைசி நிமிஷத்தில் அது தன் குழந்தை இல்லை என கூறி விடுகிறாள். அப்படி கூறுவதற்கு காரணம், தன் குழந்தை பரீனா தன்னிடம் இருந்தால், அவளுக்கு உயிருக்கு கிடைக்காத பாதுகாப்பு, கிடைக்காத செழிப்பு அத்தம்பதி களிடம் இருந்தால் கிடைக்கும் என்பதை உணர்ந்து தான் அவள் அப்படியான முடிவுக்கு வருகிறாள்.

இக்கதையோடு இத்தொகுப்பில் ஐந்தாவது கதையான "கல்யாணமுருங்கை"யை இணைத்துப் பார்க்கலாம். தான் சவூதிக்கு போகபோவதாகச் சொல்லி தன் பிள்ளை அலிமாவை பாடசாலையில் சேர்க்க அப்பாடசாலையின் ஆசிரியரை தேடி வருகிறாள் தாய் ஒருத்தி. ஆசிரியர் பிள்ளை சேர்க்க பதிவுத்துண்டை கேட்கிறார். அத்துண்டு பிள்ளையின் வாப்பாவிடம் இருப்பதாக சொல்கிறாள். வாப்பா வெளியூரில் இருக்கிறார் என்கிறாள். ஆசிரியர் மேலும் விசாரித்தத் தில் அவளது கணவன் அவளை மணம் முடிப்பதற்கு முன்னதாகவே மணம் ஆனவர் என்றும், அவர் மூத்த தாரத்தின் வீட்டிலே தங்கி விட்டதாகவும் அறிகிறார். பிள்ளையை பாடசாலையில் சேர்ந்துக் கொள்கிறார். ஆனால், சேர்த்த சில நாட்களுக்கு பிறகு பிள்ளை பாடசாலைக்கு வரவில்லை. அப்பிள்ளையைத் தேடி ஆசிரியர் போகிறார். சவூதிக்கு போகிறேன் என்று சொன்ன தாய் இருக்கிறாள். பிள்ளைக்கு ஒரு கிழமையாக சுகமில்லை என்றும், அவளை பிரிந்து தன்னால் சவூதிக்கு போக விருப்பமில்லை என்றும் கூறுகின்றாள். பிள்ளை சுகமானதும் பாடசாலைக்கு வரட்டும் என்றும், வரும் பொழுது பதிவுத் துண்டை கொண்டு வரவும் கூறுகிறார். அவளோ மீண்டும் அப்பதிவுத் துண்டு பிள்ளையின் வாப்பாவிடம் இருப்பதாக சொல்லுகிறாள். அப்படியானால் பரவாயில்லை பிள்ளை இங்கே பிறந்தவள்தானே கிராம சேவகரிடம் போய் இன்னொரு பதிவுத் துண்டு எடுக்கலாம் என்கிறார். அப்பொழுதான் அவருக்கு அந்த செய்தி சொல்லபடுகிறது. அதாவது, அந்த பிள்ளை இங்கே பிறந்தவள் இல்லை என்றும், அவள் தனது பிள்ளை இல்லை என்றும்கூறி, தனது கணவரின் மூத்த தாரத்திற்கு பிறந்த பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுகிறாள். அத்தாயின் தியாகம் அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. அவளது அத்தியாகத்தை கல்யாண முருங்கையுடன் இணைத்துப் பார்க்கிறது அவரது மனம்.

இவ்வாறாக "கொய்யா மரத்தில் குருவிச் சைப்பூக்கள்", "கல்யாணமுருங்கை" ஆகிய இரு கதைப்பிரதிகளும் தாய்மையின் இரு வேறுபட்ட தியாகத்தை சித்திரிக்கின்றன. அதே வேளை கல்யாண முருங்கை கதைப்பிரதி தமிழ் முஸ்லிம் உறவை, பிணைப்பை நுண்ணிய முறையில் எடுத்துக்காட்டுகிறது என்பது என் வாசகப் பார்வையில் தெரிந்தது. இக்கதையில் வரும் பாடசாலை ஆசிரியர் ஒரு தமிழர் எனத் தெரிகிறது. பொதுவாக முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்களை 'சேர்' என்றோ 'நாநா' என்றோ 'காகா' என்றோ அழைப்பதுதான் வழக்கம். மூதூர் முஸ்லிம் மக்களும் அப்படித்தான் என்று நினைக்கிறேன். ஆனால், அத்தாயோ அப்பாடசாலை ஆசிரியரை ஐயா என்றுதான் விளிக்கிறாள். இது ஒன்றே அந்த ஆசிரியர் தமிழர் என்பதற்கான அடையாளம் இப்பிரதியில் காணப்படுகிறது. ஒரு தமிழ் ஆசிரியர் ஒரு முஸ்லிம் பிள்ளையின் கல்வியில் காட்டும் கரிசனை பற்றியும் இப்பிரதி பேசுகிறது என்பதும் தெரிகிறது

அத்தோடு பெண்ணியச் சிந்தனையுடன் நோக்குமிடத்து, மேற்குறித்த இரு கதைகளும் (இவரது இத்தொகுப்பில் பெண்களை பிரதான பாத்திரங்களாக கொண்ட கதைகள் என்று பார்த்தால் இவ்விரு கதைகள் மட்டுமே) ஒரு வகையில் பெண்ணின் வலிமையை காட்டுவதோடு, ஆணாதிக்க சமூக அமைப்பில் பெண்ணானவளின் நிலைமையை எடுத்துக் சொல்வதோடு (இதற்கு, "கருவேலங்காடுகள் தாண்டி" கதையில் ஆரிபா எனும் பெண்ணின் கணவன் செய்யும் கொடுமையை சொல்லலாம்) பெண்ணாவள் ஆணில் தங்கி இராது, தன்னை தக்க வைத்து கொள்ளும் உறுதியினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## 5

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள இரண்டாவது கதையான "வரால்மீன்கள்" இல் பல வருடங்கள் பணிபுரிந்து பாடசாலை விட்டு அல்லிக்குளம் எனும் கிராமத்திற்கு மாற்றலாகிப் போகிறார் தாவூத் மாஸ்டர். நேர்மையானவர். பொது சொத்தை துஷ்பிரோகம் செய்ய விரும்பாதவர். மாற்றமாகிப் போன பாடசாலை மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்க, அதனை சீர்திருத்த உழைக்கிறார். அந்த ஊரில் வரால் மீன் விசேஷமானது. அந்த மீனைப் பற்றி அப்பாடசாலையில் பணி புரியும் சுலைமான் மாஸ்டர், தாவூத் மாஸ்டரிடம் இப்படி சொல்லுகிறார்.

**"இங்கத்தய வரால் மீன் படு விசேஷம். வரால் மீன் மற்ற மீன் மாதிரி இல்ல. மிக வைராக்கியம் கொண்டது. எல்லா இரைகளையும் அது சாப்பிடாது. உயிர் மீன், உயிர் இறால் இப்படித்தான் சாப்பிடும். செத்த மீனையோ, செத்த இறாலையோ கடைசி வரைக்கும் சாப்பிடாது. உணவே கிடைக்காமல் சாக வேண்டிய நிலை வந்தாலும் சரிதான். வரால் மீனின் குணம் மாறவே மாறாது. அப்படியொரு பிடிவாதம். மனிதர்களிலும் அப்படிப் பிடிவாத குணம் கொண்டவர்கள் சிலர் இருக்கிறார்கள்."**

வரால் மீனின் அத்தகைய வைராக்கியத்துடனான பிடிவாதத்தினை நேர்மையை கைப்பிடிப்பதில் வைராக்கியத்துடன் இருக்கும் தாவூத் மாஸ்டரின் வைராக்கியத்துடன் கதாசிரியர் ஒப்பிடுகிறார். தாவூத் மாஸ்டரின் அந்த நேர்மையான செயல்களில் ஒன்றாக அப்பாடசாலை வளவுக்குள் இருக்கும் மாமரத்தின் பழங்களை விற்று, அப்பணத்தை பாடசாலையின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவது என்ற ஒரு திட்டத்தை கொண்டு வருகிறார். இந்த திட்டத்தையிட்டு ஊரில் உள்ள ஒருவர், மாஸ்டர் பழங்களை வீட்டுக்கு கொண்டு போய் விடுவார் என நையாண்டியாக கூற, இந்த நேரத்தில் தாவூத் மாஸ்டர் ,

**"இண்டைக்கு நான் உங்களுக்கு ஒரு சத்தியம் செய்து தாரான். இந்த வருஷம் என்டில்ல, இனி எந்த வருஷமானாலும் சரி, இந்த மாம்பழத்தில் ஒரு சதத் துண்டு கூட என்ட வாயாலோ, என்ட குடும்பத்திட வயிலோ படாது. இது சத்தியம். இது சத்தியம்."**

மரத்தில் விழும் பழங்களை அப்பாடசாலை மாணவன் சுலைமான் கொண்டு வர, அதனை உள்ளே எடுத்து வை என்கிறார். இந்த நேரத்தில் ஊரில் இருக்கும் மனைவி கதீஜாக்கு சுகவீனம் என அவசரமாக அவர் ஊருக்கு வருகிறார். டாக்டரை அழைக்க வெளியே போனவர் திரும்பி வருகையில் தன் மகன் மாம்பழம் ஒன்றை சாப்பிட்டு கொண்டிருந்ததைப் பார்த்ததும் அதிர்ந்துப் போகிறார். தன் பையை திறந்து பார்க்கிறார். மேலும் சில பழங்கள் பையில் இருப்பதை பார்க்கிறார். அவருக்கு விஷயம் புரிந்து விடுகிறது. உள்ளே வை என்று மாணவனிடம் சொன்னதை, அவன் தவறாக புரிந்து கொண்டு அவரது பையில் வைத்து விட்டான். சத்தியத்தை மீறி விட்டோமே என்ற அதிர்ச்சியில் மரணத்தை தழுவுகிறார். தாவூத் மாஸ்டரின் வைராக்கியம் கடைசி வரை தக்க வைக்கப்படுகிறது.

ஆனால் வரால் மீனின் வைராக்கியத்துடன் தாவூத் மாஸ்டரின் வைராக்கியத்தை கதாசிரியர் ஒப்பிடுவது என் வாசக தளத்தில் சற்று இடறியது. ஏனெனில் வரால் மீனின் பிடிவாதம் உயிருள்ள உயிர்களை வேண்டி நிற்பது. ஆனால் தாவூத் மாஸ்டரின் பிடிவாதம் சக மனித உயிர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது. பொது சொத்தை துஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகம் செய்ய கூடாது. வரால் மீனின் வைராக்கியத்தின் நோக்கமும், தாவீத் மாஸ்டரின் வைராக்கியத்துக்கான நோக்கமும் ஒன்றல்ல என்பதுதான் என் வாசகத் தளப் பார்வையில் பட்டது. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள "வரால் மீன்கள்" கதையில் வரால் மீன் கதை பாத்திரத்தின் இயல்பை எடுத்துச் சொல்ல உருவகமாக பயன்பட, மூன்றாவது கதையாக இடம் பெற்றுள்ள "சுங்கான் மீன்" எனும் பிரதியில் சுங்கான் மீன் ஒரு விவசாயியின் வாழ்வில் ஏற்பட மாற்றங்களுக்கு நேரடியாக பங்காற்றுகிறது. தன் வயலுக்கு வேலைக்கு வரும் பையனை சுங்கான் மீன் தாக்குகிறது. அவரது மருமகனையும் சுங்கான் தாக்குகிறது. அவரது வைத்திய செலவுக்காக தன் வசம் இருந்த மாடுகளையும் விற்க வேண்டி யிருக்கிறது. இதற்கிடையில் தன் உம்மாவின் முக ஜாடையில் பிறந்த பேத்தி நோய் கண்டு இறந்து விடுகிறாள். மருமகன் வெளிநாட்டுக்கு போக, தனது நிலத்தை அடமானம் வைத்து எடுத்து பணத்தையும் பாஸ்போட்டையும் திருடனிடம் பறிகொடுக்கிறான் மருமகன். தான் உழைத்து நிலத்தை மீட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் அந்த விவசாயியையே சுங்கான் தாக்குகிறது. இனி அவரால் உழைக்க முடியாது என அறிந்த அவர், நிலத்தை அடமானம் வைத்திருந்த போடியார் நிலத்தை தன் வசமாகிக் கொள்கிறார். அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. விவசாயியின் உயிர் பிரிந்து விடுகிறது. எல்லாமே நீரில் வாழும் அந்த சுங்கான் செய்த கொடுமை. அத்துடன் ஊரில் வாழும் திருடன், மற்றும் போடியார் போன்ற சுங்கான்கள் செய்த அதர்மம். இவ்வாறாக கதை மாந்தரின் குணஇயல்புக்கு ஒரு விஷஜந்து உருவகமாக, இத்தொகுப்பில் 7வதாக இடம்பெற்றுள்ள "செவ்வால் அறணை" எனும் கதையில் இடம் பெறுகிறது. செவ்வால் அறணை பற்றி அக்கதையில் ஓரிடத்தில் இவ்வாறாக குறிப்பிடப்படுகிறது.

**"அறணைக் குணம் அது. ஆத்திரம் கொண்டு எதிரியைத் தாக்கவரும். அறணை கடித்தால் மரணம் என்பார்கள். அத்தனை விஷம். அதிலும் செவ்வால் அறணை கடும் விஷம். வாய் வைத்ததென்றால் கதை முடிந்து விடும். பல் கட்டிவிட மரணம்தான். மறுபேச்சில்லை. அதனால்தான் ஆத்திரம் கொண்டு வாய் வைப்பதற்குள் அதன் கோபம் ஆறிவிடும். சாதுவாகிவிடும். நெளிந்து வளைந்து பின்னோக்கி விடும். அற்ப நேரக் கோபம். அதற்குள் மனம் குளிர்ந்து, கோபப்பட்டதற்காக வெட்கப்பட்டு ஒடிவிடும்."**

இத்தகைய அறணை குணம் கொண்டவர் வடவிதானையார். இவரது இந்த குண இயல்பு வெளிப்படும் பல இடங்களை கதாசிரியர் கதை சொல்லிப் போகும் போக்கில் சொல்லிப் போகிறார். ஆனால் அவரது அந்த குண இயல்பு ஒரு சந்தர்ப்பத்தில் விபரீதத்தில் முடிகிறது. தனது பக்கத்து வயல்காரனுடன் ஏற்படும் வாய்த் தர்க்கத்தில் இவருக்கு அறணை குணமான கோபம் வந்து விட, கையில் கிடைக்கும் கிருமிநாசினியை அவனது வாயில் ஊற்றிவிட, அவன் மரணித்து விடுகிறான். பின் - பாதுகாப்பற்ற முறையில் கிருமிநாசினியை அவன் பாவித்தனால் அவனுக்கு மரணம் ஏற்ப்பட்டது என்ற முறையில் சம்பவம் முடிவுக்கு வந்தாலும், வடவிதானையாரின் மனச்சாட்சியின் உறுத்தல் தொடர்கிறது. ஆனால் சிறிது காலத்திற்குள், அவரது வாழ்வில் மலைப் பாம்பு ஒன்று (இங்கும் ஒரு ஜந்து) வந்து அவரது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. அவரது வயல் அருகே கொக்குகளை பிடிக்க முயற்சி செய்துக் கொண்டிருந்த பையன் ஒருவனை ஒரு மலைப் பாம்பு விழுங்க முயற்சிக்க, அதைக் கண்ட வடவிதானையார் அப்பையனை பாம்பிடமிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன், அப்பாம்பை அடிக்க முயற்சிக்க, அந்த அடியால், பையன் இறந்து விட, அச்சம்பவத்திலிருந்து வடவிதானையாரை காப்பற்ற அவரது தம்பி எத்தனித்தாலும், அன்று தான் (பக்கத்து வயல்காரனை கிருமிநாசினியால் தான் கொன்ற சம்பவம்) செய்த குற்றத்திலிருந்து தப்பியவர், செய்யாத இன்றைய குற்றத்திற்கான தண்டனையிலிருந்து தப்புவதற்கான சூழல் இருந்தும் , அவரது மனச்சாட்சி யின் அழுத்தமான ஆழத்தின் காரணமாக, அவரே பொலிஸிடம் சரண் அடைகிறார். மனச்சாட்சி உறுத்தல் மிக்க ஒரு மனிதனின் நடத்தையை கதாசிரியர் மிக அழகாக பதிவு செய்து இருக்கிறார். வரால் மீனின் வைராக்கியத்தை தாவூத் மாஸ்டரின் வைராக்கி யத்துடன் ஒப்பிட்டதைவிட, வடவிதானை யாரின் கோப குணத்திற்கு செவ்வால் அறணையுடன் ஒப்பிட்டது பொருத்தமாக இருக்கிறது. ஆனால், வட விதானையாரின் பாத்திர வார்ப்பின் நடத்தைப் படி பார்ததால் என் வாசகத் தளப்பார்வை யில், பக்கத்து வயல்காரனின் வாயில் அவர் கிருமி நாசினியை ஊற்றுவது சற்று இடறியது.

## 6

இத்தொகுப்பில் 4 ஆவதாக இடம் பெற்றுள்ள "மனித இனம்" எனும் கதை முக்கியமான ஒரு கதை. முதல் வாசிப்பில் இக்கதை தயாரிப்புத் தன்மை கொண்டதாக தெரியக்கூடும். அத்தோடு அக்கதையில் சொல்லப்பட்டிருக்கும் யதார்த்தம் சாத்தியமான ஒன்றா? என்ற மாதிரியான கேள்வியையும் சிலர் எழுப்பக் கூடும். ஆனால் பல்லின மக்களுடன் ஒன்றாக கலந்து வாழ்ந்த மனிதனின் அபிலாஷையின் வெளிப்பாடு என்ற முறையிலும், பிட்டும் தேங்காய்ப்பூவுமாய் வாழ்ந்த சமூகங்களின் இருப்பில் விஷத்தை கலக்கும் சக்திகளின் எழுச்சியினை எதிர்கொண்ட ஒரு மனிதனின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் படைப்பு என்ற வகையிலும் இக்கதை முக்கியத்துவம் பெறுகிறது. இக்கதையோடு இத்தொகுப்பில் 6 ஆவது கதையாக இடம் பெற்றுள்ள "கருவேலங்காடுகள் தாண்டி" எனும் கதை யினையும் இணைத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கலாம், ஆனால், ''மனித இனம்'' கதையின் கட்டமைப்பில் காணப் படாத யதார்த்தம் ''கருவேலங் காடுகள் தாண்டி'' கதையில் ஓரளவுக்கு இருப்பதை காணலாம். ஆனபொழுதும் இவ்விரு கதைகள் நமது தேசிய சூழலில் முக்கியத்துவம் கொண்ட படைப்புகளாக எனக்குத் தோற்றம் தருகின்றன.

''மனித இனம்'' கதையின் கதைசொல்லி ஒரு முஸ்லீம் சிறுவன். அவனது நண்பர்கள் பாலா, சரத் வேறு இரு இனங்களை சார்ந்தவர்கள். இந்த மூன்று சிறுவர்களிடேயேயும், அம்மூவரினதும் குடும்பத்தினர்களிடையேயும் நிலவும் அன்னியோன்னியமான உறவு அக்கதையில் சொல்லப் படுகிறது. முஸ்லீம் சிறுவனின் ஒரு கண் பாதிக்கப்படும் பொழுது, அவனது நண்பனான பாலாவின் தந்தை தனது மரணத்திற்கு பின் (அவரது மரணம் கூட செம்மூக்கன் எனும் முதலாளியால்தான் நிகழ்கிறது) அவரது கண் ஒன்றை தானம் செய்கிறார். அதைபோன்று அதே முஸ்லிம் பையனின் சிறுநீரகம் பாதிக்கப்படும் பொழுது, நண்பனான சரத் தனது சிறுநீரகத்தை அப்பையனுக்கு கொடுக்கிறான். அதுமட்டுமல்லாமல் பாலாவின் தந்தை விவசாயத்தில் நஷ்டம் அடையும் பொழுதும், கதைசொல்லியின் தந்தை (முஸ்லிம்) தனது வீடு ஒன்றை அவருக்கு கொடுப்பதோடு, பட்டி மாட்டையும் வாங்கிக் கொடுக்கிறார். கந்தளாய்க் குளம் உடைப்பெடுக்கும் பொழுது கதைசொல்லியின் நண்பனான சரத்தின் குடும்பத்தினர் பாதிக்கப்படும் பொழுதும் கதை சொல்லியின் குடும்பத்தினர் அவர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள். இயற்கை அனர்த்தனங்களிலும், இயற்கையுடன் இணைந்து இருக்கும் விஷஜந்துக்கள் தரும் அழிவுகளிலும் சிக்கும் பொழுதெலாம், பரஸ்பரம் ஆறுதலாகவும், உதவியாக வும் இருக்கும் இத்தகைய குடும்பத்தினர், சமூகத்தில் மலிந்துக் கிடக்கும் விஷ சக்திகள், அம்மண்ணில் அழிவையும் அனாதரவான நிலையினையும் கொண்டு வரும் பொழுதும் கூட பிரியாது, சேர்ந்தே அகதி முகாம் வாழ்வை அவர்கள் எதிர் கொள்கிறார்கள். அத்தகைய குடும்பத்தினரை பற்றிய சித்திரிப்பினை அமானுல்லாவின் மனித இனம் எனும் கதையின் வழியாக கண்டறியும் பொழுது, இன்றைய நமது தேசிய சூழலில், அமானுல்லாவின் சித்திரிப்பின் உன்னதம் எவ்வளவு தூரம் சாத்தியம்? என்ற கேள்வியை கேட்க தோன்றவில்லை. மாறாக, அத்தகைய சித்திரிப்பே இன்றைய நமது யதார்த்தமாக மாறாதா? என்ற ஏக்கம் தான் மேல் எழுகிறது. மனித இனம் எனும் விலாசத்தில் பேதம் பாராத நிலை நின்று, வாழும் மனிதர்கள் இன்னும் மிஞ்சி இருக்கிறார்கள் என்பதை அக்கதை சொல்லி முடிகிறது. இதனால்தான் அக்குடும்பங்கள் அகதி முகாம் வாழ்வுக்கு தள்ளப்பட்ட நிலையிலும் கூட, அப்பையன்களிடம் நீங்கள் எந்த இனம் என முகாம் அதிகாரியினால் கேட்கப்படும் கேள்விக்கு "மனித இனம்" என சொல்ல முடிகிறது. அதிகாரி அப்பதிலை ஆச்சரியத்துடன் எதிர்கொள்ளும் நிலையில், அப்பதில் அப்பையன்களுக்கு அர்த்த முள்ளதாக தெரிகிறது.

அடுத்து, ''கருவேலங்காடுகள் தாண்டி'' என்ற கதையிலும் அவ்வாறாகவே மனித இனம் என்ற உணர்வுடனான உறவு தொடர்கிறது. தேவன் ஐயா, ஆதம் ஆகிய இரு மனிதர்களிடையிலான உறவாடல், '' மனித இனம் '' கதையில் கையாளப்பட்ட கதைப் பின்னல் அதிக இல்லாத நிலையில் மிக இயல்பாக அக்கதையினை நகர்த்திச் செல்கிறார் கதாசிரியர். ஆதமின் தங்கச்சி ஆரிபாவின் கணவன், சொத்திலே குறியாய் இருப்பவன். அதன் காரணமாக தங்கச்சி ஆரிபாவை துன்புறுத்துபவன். அவர்களுக்கு ஆதம் தனது வீட்டை விற்று, அவர்கள் குடியிருக்கும் ஊரிலே ஒரு வீட்டை வாங்கிக் கொடுக்கிறார். அந்த வீட்டை திருத்த நாநா ஆதமிடமிருந்து பணம் கொண்டு வரச்சொல்லி ஆரிபாவை ஆதமிடம் அனுப்பி வைக்கிறான். ஆரிபாவின்வின் கணவன்... ஆதமிடம் சொத்து இனி ஒன்றும் கிடையாது. தேவன் ஐயாவின் மகள் வதனி வவுனியாவில் வசிக்கிறாள், அவளது வீடு இடிந்து விட, தேவன் ஐயா தனது வீட்டையையும் நிலத்தையும் விற்று, மகள் வதனியின் வீட்டை சீர் செய்ய புறப்படும் பொழுது, ஆரிபா கண்ணீர் சிந்திய நிலையில், நாநாவிடம் சொத்தில் பங்கு கேட்டு வந்து போக, (கணவன் கொடுக்கும் அழுத்தத்தால்) தனது சொத்தை விற்று வந்த பணத்தோடு மகளின் வீட்டை சீர் செய்ய புறப்பட்ட தேவன் ஐயா வவுனியாவுக்குப் போகாமல், அப்பணத்தை ஆரிபாவுக்கு கொடுப்பது என்ற முடிவோடு, ஆரிபா இருக்கும் ஊரை நோக்கிப் புறப்படுகிறார். மனிதம் மற்றும் பரஸ்பர நேசம் என்பது இன்னும் உலகில் உயிர்த்து நிற்கிறது என்பதை இக்கதையின் வழியாக கதாசிரியர் சொல்லி முடிக்கிறார். பிட்டிலும் தேங்காய்பூவிலும் இன்னும் விஷம் பரவவில்லை என எனது வாசகத்தளத்திற்குப் பட்டது.

இத்தொகுப்பில் இறுதியாக இடம் பெற்றுள்ள ''தலைமுறைகள்'' எனும் கதையும் அத்தகைய ஒரு செய்தியினைதான் சொல்லி இருக்கிறது. ஒரு முஸ்லிம் தந்தை, அவருக்கும் அதே ஊரில் வசிக்கும் சின்னதம்பிக்கும் ''அந்த காலத்து சிநேகம்''. இருவரும் பக்கத்து பக்கத்து காணிகளில் விவசாயம் பார்ப்பவர்கள். 83 கலவரத்தினால் இவ்விருவரும் பிரிந்தாலும், தொடர்ந்து அவர்களிடையே உறவு நீடிக்கிறது. சின்னத்தம்பி மரணித்து விட, (இவரது மரணம் கூட, பூச்சி கடியால்தான்) சின்னத்தம்பி குடும்பம் திருகோணமலை குடியேற இவரே வசதி களை செய்துக் கொடுக்கிறார், சின்னத்தம்பியின் மகளின் திருமணத்தை ஊரிலுள்ள காணியை விற்று, முடிப்பது என சின்னதம்பியின் குடும்பம் தீர்மானிக் கிறது. ஆனால், ஊரிலுள்ள அக்காணி வெளிஆள் கைக்கு போய் விடக்கூடாது என்ற எண்ணத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காணியினை அவரே வாங்கிக் கொள்ளவேண்டும் என்று சொல்ல, வெளிநாட்டுக்கு வேலைக்குப்போன மகன் கொண்டு வரும் பணத்தைக் கொண்டு அக்காணியினை வாங்கிக் கொள்ளலாம் என தனக்குள் முடிவு எடுத்துக் கொள்கிறார். வெளிநாட்டி லிருந்து திரும்பும் மகன் நகரத்திலிருந்து இருந்து கொண்டு தான் கொண்டு வந்த பணத்தைக் கொண்டு கடை ஒன்றை வாங்கி இருப்பதாக இவருக்கு அறிவிக்கிறான். இவர் அதிர்ந்துப் போகிறார். தன் சினேகிதன் சின்னத்தம்பி குடும்பத்திற்கு உதவ முடியவில்லையே என்கிற கவலையால் அவர் மரணிக்கிறார். (இவரது மரணம் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள ''வரால்மீன்கள்'' கதையில் நிகழும் தாவூத் மாஸ்டரின் மரணத்தை நினைவு ஊட்டுகிறது.)

## 7

இவ்விடத்தில் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அமானுல்லாவின் படைப்புக்களில் மனித மரணங்கள் என்பது இயற்கையான மரணங்களா கவோ மனிதர்களால்வோ நடப்ப தில்லை.இயற்கை அனர்த்தனங்களாவோ அல்லது அம்மண்ணின் சூழலில் உள்ள விஷஜந்துகளாலோதான் நிகழ் கின்றன. இவ்விடத்தில் செவ்வால் அறணை கதையில் இடம் பெறும் இரு கொலைகள் பற்றி நமக்கு நினைவுக்கு வரக்கூடும். (விதானையாரின் பக்கத்து காணிக்காரர் விதானையாரின் கையால் கொல்லப் படுவதும், அத்தோடு பாம்பிடமிருந்து இளைஞரை காப்பாற்றும் போராட்டத்தில் விதானை யார் கையாலே அவ்விளைஞன் கொல்லப்படுவது மான இரு கொலைகள்) ஆனால் அவ்விரு மரணங்களின் நோக்கம் கொலை அல்ல, அவை விபத்துக்களாக நடைபெறுகின்றன. இன்னும் சொல்ல போனால், ''வரால்மீன்கள்'', ''தலைமுறைகள்'' ''சுங்கான் மீன்'' ஆகிய மூன்று கதைகளில் நிகழும் மூன்று இயற்கை மரணங்கள் கூட, மேலோட்டமாக அவ்விரு கதைகளை வாசிக்கும் வாசகனால் அவை இயற்கை மரணங்களாக புரிந்து கொள்ளப்படும் நிலையில், என்னை பொறுத்த வரை அம்மூன்று மரணங்களுக்கு இன்றை நமது சமூக அமைப்பே காரணம் என்றுதான் நான் சொல்வேன். அந்த வகையில், ''வரால்மீன்கள்'' கதையில் நிகழும் தாவூத் மாஸ்டரின் மரணத்தை எடுத்துக் கொண்டால், பாடசாலை எனும் பொதுச் சொத்தின் உடைமையான அம்மாமரத்தின் கனிகளின் ஒத்த சதத்தையேனும் தன் வீட்டுக்கு எடுத்துப் போக மாட்டேன் என சத்தியம் செய்தவரின் பையிலேயே,அம்மாமரத்தின் பழங்கள் வைக்கப்படும் நிலை தோன்றுகிறது. மரத்திலிருந்து விழுந்த அப்பழங்களை பொறுக்கி வரும் மானவனிடம் அவைகளை எடுத்து வை என்று சொல்லுகின்ற பொழுது, அவரது பையில்தான் வைக்கச் சொல்லு கிறார் என்பதாக அம்மாணவனால் புரிந்துக் கொள்ளப் படுகிறது. அந்த இடத்தில்தான் தாவூத் மாஸ்டரின் மரணத்தில் இந்தசமூக அமைப்பின் பங்கு வருகிறது. அதாவது, அரச ஊழியர்கள் என்றால் பொதுச்சொத்தை தங்களின் தேவைகளுக்காக எடுத்துக் கொள்வார்கள் என்ற சிந்தனை இந்த சமூக கட்டமைப்பினால் அம்மாணவனின் மனதில் பதிய பட்டுள்ளது. இதன் காரணமாக எடுத்துவை என்று தாவூத் மாஸ்டரால் சொல்லப்படுவது அவரது பையில்தான் என்பதாக அம்மாணவனால் புரிந்துக் கொள்ளப்படுகிறது.

''சுங்கான் மீன்'' கதையில் விவசாயின் இயற்கைமரணம் என்பதாக காட்டப்பட்டாலும், அந்த கதையில் போடியாரின் சுரண்டல் தன்மை அந்த விவசாயியின் உயிர் பிரிவதற்கான பிரதானமான காரணமாக அமைகிறது. அடுத்து ''தலைமுறைகள்'' எனும் கதையில் நிகழும் தந்தையின் மரணம். இது கூட நான் மேற் சொன்ன மேலோட்டமாக வசிக்கின்ற வாசகளுக்கு இயற்கை மரணம் என்பதாகதான் தெரியும். ஆனால் அந்த தந்தையின் மரணத்திற்கும் கூட இந்த சமூக கட்டமைப்புதான் பொறுப்பேற்க வேண்டும். பெற்றோர்களை மதிக்காத, மற்றும் விவசாய தொழிலில் ஆர்வமின்மை, பொருள் தேடும் வேகமான ஆசை போன்ற நடத்தைகள் இன்றைய தலைமுறையினர் ஒரு சில பகுதியினரின் பிரதநிதியாக இருக்கும் அவரது மகனின் நடத்தை அவரது மரணத்திற்கு காரணமாகிறது.

இத்தொகுப்பில் அடங்கியிருக்கும் கதை களை அவதானித்ததில், கடந்த கால கிழக்கு மாகாணத்தில் நிலவிய போர் சூழல், அங்கு வாழும் மக்கள் அடையும் பாதிப்புக்கள் என்பவற்றை பற்றி பேசுகின்ற கதை என்று பார்த்தால், மனித இனம் மட்டும்தான். ஆனால், அது கூட அந்த பிரச்சினை களுக்கு முன் உரிமை கொடுப்பதை விட, அந்த மக்களிடையே நிலவிய ஒருமைபாட்டை பற்றி பேசுவதாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இவர் மிகவும் பேணும் சக இனங்கள் இடையிலான உறவு, மண் மீதான நேசம், இவை தம்மை குலைக்கும் சக்திகளை இனங்காண, காட்டும் வகையிலான பிரசாரப் படைப்புகளாக, அரசியல் அறிக்கைகளாக இவரது படைப்புக்கள் அமையவில்லை. இவரது இந்த போக்கு சிலருக்கு ஒத்துக் கொள்ளாது போகலாம்.அத்தோடு அச்செய்தி களை சொல்லுகின்ற முன் தயாரிப்புகளாக (அப்படியும் சற்று இடறும் இடமாக அல்லது சற்று தயாரிப்புத் தன்மை என்றால் 'மனித இனம்' கதையில் மட்டுமே)அவரது படைப்புக்கள் அமையவில்லை. அவரது ஆளுமையினூடாக இயல்பாகவே உருவாக்கம் பெற்றுள்ளன. அமானுல்லாவின் கதை சொல்லும் முறைமை கூட நேர்கோட்டுத் தன்மையோடுதான் அமைந்துள்ளது. அந்த வகையில் எந்தவித உத்திகளை பற்றிய முனைப்புக்களையும் நாம் அக்கதைகளில் காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அவர் கையாண்டு இருக்கும் யதார்த்தம் இன்றைய நடைமுறையில் இல்லாத, இறந்த போன யதார்த்தமாக தோற்றம் தரலாம். ஆனால் அந்த யதார்த்தம் அவரும் அவர் சார்ந்திருக்கும் மண்ணும் வாழ்ந்து பார்த்த யதார்த்தம். வாழ ஆசைப்படுகின்ற யதார்த்தம். அந்த வகையில் இவரது படைப்புக்கள் சிறந்த யதார்த்தவாதப் படைப்புக்கள்தான் என்று சொல்வதில் எனக்கு தயக்கமில்லை. அமானுல்லா வின் வரால் மீன்கள் எனும் இத்தொகுப்பு, நம்மை ஒரு புதிய உலக அனுப வத்திற்கு அழைத்துச் செல்கிறது. அந்த வகையில் ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் இடம் பெறவேண்டிய ஒரு தொகுப்பு என்பது மறுப்பதற்கில்லை. □□□

# குறுங் கவிதைகள்

**செல்போன்**

சொல்லாமல்
கொள்ளாமல்
இடையிடையே
என்னோடு
சிணுங்கிப்பேசும்
இரண்டாவது மனைவி.

**கவிதை**

என் கற்பனைகளோடு
முதலிரவு நடத்தி
நான் பெற்றெடுத்த
முதற் குழந்தை.

**அகதி**

முகாம்விட்டு
முகாம்மாறும்
முகவரி இழந்த
கால்கள்

**சுனாமி**


இயற்கை
நடத்திய
உயிர்ச்சீட்டிழுப்பில்
இருந்தவர்களுக்கு
விழுந்த
அதிஷ்டம்.

**பறவை**

இறக்கைகட்டி
உயரப்
பறக்கும்
இதயங்கள்.

**காதல்**

வயதுக்கு
வந்துவிட்டதை
அறிவிக்கும்
வாய்ப்பாடு.



- புலோலியூர் வேல் நந்தகுமார்

# திருப்பிப்பார்...

மகனே
முட்கம்பிகளினூடாக
நீர்வற்றிய கண்ணால்
யாரைப் பார்க்கின்றாய்


அலையும் ஆழ்கடலும்
மலையும் காற்றும்
அமைதியாய்க் கிடக்கின்றன
நீ மட்டும்
இமை வெட்டாமல்
எதைப்பார்க்கிறாய்

கிட்டியும் கிளித்தட்டும்
எட்டுக்கோடும் விளையாடிய
வீட்டு முற்றத்தையா
ஏணை கட்டி சின்னவனைத்
தூங்க வைத்து
பானை சட்டி ஏற்றிய
எங்கள் அடுப்படியையா
எதைப் பார்க்கின்றாய்

ஏர்பிடித்து வளம்பெருக்கி
சீர் குவித்த
உன் அப்பனையா

பாரப்பா நிலவென்று தூக்கி
ஊரெல்லாம் சுற்றி உண(ர்)வூட்டிய
உன் அத்தையையா
யாரைப் பார்க்கிறாய்
எல்லாம் போய்விட்டன
திரும்பி
அம்மாவைப் பார்

அவர்கள்
உன்னைப் பார்க்கிறார்கள்
இழந்தவையும்
இருப்பவையும் நீ தான்
அம்மாவைப்பார்
அவர்கள்
உன்னைப் பார்க்கிறார்கள்.



- தென்புலோலியூர் பரா.ரதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விமர்சனம்

# இரு கவிதை நூல்கள் : ஒரு வாசகநிலை நோக்கு



வெற்றிவேல் துஷ்யந்தன்

எந்தவொரு படைப்பையும் வாசகநிலையிலிருந்து நோக்குகின்றபோது அதன் மீதான கருத்துநிலைகள் மாறுபடும். ஈழத்து சமகால கவிதை இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் நவீன கவிதை முயற்சிகள் பல மேற்கொள்ளபடுகின்றன. இவ்வகையில் சமகால கவிதை இலக்கியத்தில் தடம்பதித்துள்ள இரு தொகுப்புக்களில் ஒன்று எம்.செல்வதாஸின் **'நிஜமல்ல நிழல்கள்'**, மற்றயது கிண்ணியா ஏ.நஸ்புள்ளாஹ் எழுதிய **'நதிகளைதேடும் சூரிய சவுக்காரம்'**.

முதலாவதாக, எம்.செல்வதாஸின் 'நிஜமல்ல நிழல்கள்' என்ற கவிதைத்தொகுப்பில் மொத்தமாக முப்பது கவிதைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அட்டைப் படமும், தலைப்பும் படைப்பின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்துவிடுகின்றன. இயற்கைக் காட்சியொன்றினை அட்டைப்படமாக வழங்கியுள்ள ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியவர். சமூக ஊடாட்டத்துடன் பின்னிப்பிணைந்துள்ள வாழ்க்கை, காதல், கண்ணீர், மழை, பெண் போன்ற தலைப்புகளில் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இத்தொகுப்பின் ஆசிரியர் ஒரு நுண்கலை மாணவனாக இருப்பதால் இத் தொகுப்பிற்கு ஓவியங்களினால் அழகு சேர்த்திருக்கின்றார். சமூகத்தில் காணப்படுகின்ற நிகழ்வுகளை மிகவும் குறுகியவடிவத்தினுள் உள்ளடக்கி கவிதையாக்கியுள்ளார். தொகுப்பின் ஆரம்ப கவிதையாக உள்ள *'இரங்கல்'* என்ற கவிதையில் ஆசிரியர் அ முதல் ஃ வரை வார்த்தைகளை குழைத்தெடுத்து தன்னுடைய ரசனையை வெளிப்படுத்தியுள்ளார். இக்கவிதை பிற கவிதைகள் மீதான எதிர்பார்ப்பை ஆரம்பத்திலேயே உண்டு பண்ணிவிடுகின்றது. *'நிம்மதி'* என்ற கவிதையில்

*'நிம்மதி*
*மானுடவினம்*
*தேடியலையும்*
*மரணித்த*
*மறைபொருள்'*

என வரும் வரிகள் அற்புதமாகவும் யதார்த்த பூர்வமாகவும் உள்ளன.

'கப்பல்பயணம்' என்ற இறுதிக்கவிதை சமகால கப்பல் பயணத்தின் போது மக்கள் அடைகின்ற இன்னல்களையும், துன்பங்களையும் மிகவும் தத்ரூபமாகவும், உயிரோட்டமாகவும் படம் பிடித்துக் காட்டுகிறது. இத் தொகுப்பினுள் கவிதை களுக்காக வரையப்பட்டிருக்கின்ற ஓவியங்கள் சிலவற்றில் ஆசிரியர் இன்னும் கவனத்தை செலுத்தி யிருக்கலாம். இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள அத்தனை கவிதைகளும் சமூகத்துடன் ஏதோ ஒருவகையில் தொடர்புறுவதாலும், இவற்றில் கையாளப்பட்ட எளிய மொழிநடை, அனுபவங்களினூடான வெளிப்பாட்டு ரசனை, ஆசிரியரின் நுண்கலை மீதான ஈர்ப்பு போன்றவற்றின் காரணமாகவும் சமகால கவிதைத் தொகுப்பு முயற்சிகளில் இத் தொகுப்பும் கவனிப்புக் குரியதாகும்

அடுத்து, கிண்ணியா ஏ.நஸ்புள்ளாஹ் இன் 'நதிகளை தேடும் சூரிய சவுக்காரம்' உண்மையிலேயே வித்தியாசமான ஒரு தலைப்பைக் கொண்டுள்ளது. வழமையான கவிதைத் தொகுப்புகளின் அட்டைப் படங்களில் பெரும்பாலானவை கை வண்ணத்தில் அமைந்த ஓவியங்களாகவே காணப்படுகின்றன. ஆனால் இத் தொகுப்பின் அட்டைப்படம் பச்சைப் பசேலென இருக்கின்ற எழில் கொஞ்சும் ஓர் இயற்கைக்காட்சியினை மிகச்சிறப்பாகவும், ரசனை உணர்வு ததும்பும் படியாகவும் ஆசிரியர் வடிவமைத் துள்ளார். மொத்தமாக ஐம்பத்து மூன்று கவிதைகள் இத் தொகுப்பினுள் உள்ளடக்கப்பட்டு காத்திரமான ஒரு படைப்பாக எமக்களித்த ஏ.நஸ்புள்ளாஹ் பாராட்டுக் குரியவர். ஒவ்வொரு கவிதையிலும் ஏதோ ஒருவகையில் தான் கூறவந்த விடயங்களை மிக அட்டகாசமாக ஆசிரியர் கூறிநிற்கிறார். இவருடைய கவிதைகளில் சில குறியீட்டுகவிதைகளாக உள்ளன. பெரும்பாலான கவிதைகள் எமது நாட்டின் சமகால சமூக சூழ்நிலை, ஆசிரியருடைய சமூகவாழ்வு, சுனாமி, துயரம், இறப்புக்கள் என்பவற்றை பிரதிபலித்துள்ளன. 'இறப்பு எமது பிறப்புரிமை' என்ற கவிதை வாசகநிலையில் பல இறந்தகால நினைவுகளையும், சமகால காட்சி களையும் விழித்திரையில் படம் போட்டுக்காட்டி யிருக் கின்றது. மேலும் 'எனதூர் மயான முகவரி', 'வன்மத்தின் இறுதிநிலை' போன்றகவிதைகள் மிகவும் சிறப்பாக உள்ளன. அந்தவகையில் 'நதிகளை தேடும் சூரிய சவுக்காரம்' காத்திரமான ஒரு முயற்சி என்று கூறி ஆசிரியரை பாராட்ட முடியும். □□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் இதயங்கள்

(1) 'ஆடி - ஆவணி 2009 ஜீவநதி' கிடைக்கப் பெற்றேன். அமைப்பில் புதுமை. இலக்கியத்தின் தலையாய பணி எதுவோ, அதையே சிரமேற்கொண்டு நீங்கள் 'ஜீவநதி'யைக் கொண்டு வருவதை நறுக்கென தலையங்கத்தில் தெரிவித்திருந்தீர்கள்; சந்தோஷமாக இருந்தது.

சு. வில்வரத்தினம் அவர்களைப் பற்றிய கட்டுரையும் கலாநிதி செ. யோகராசா அவர்களது கட்டுரையும் தி. கமால் அவர்களது கட்டுரையும் பல பயனுள்ள தகவல்களைத் தந்த அதேவேளை, தேஜஸ்வினி, வெ.துஷ்யந்தன், ந. சத்தியபாலன், கா. சிவலிங்கம், பெரிய ஐங்கரன், மோகன், த. அஜந்தகுமார் ஆகியோரின் கவிதைகள் வித்தியாசமான அனுபவங்களைத் தந்தன. சுருக்கமாகச் சொன்னால் இது கவிதைகளின் இதழ் எனலாம். ந. சத்தியபாலன் அவர்களது நூலைப் பற்றிய விமரிசனம் கூட இதையே மெய்ப்பித்தது. மேலும் பேராசிரியர் சபா. ஜெயராஜா அவர்களது பேட்டி திறனாய்வுத் துறை சம்பந்தமான அவரது பங்களிப்புகளை சரியாக வெளிக்கொணர்வதாக அமைக்கப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியது. ஈழநாடு சிறுகதைகள் பற்றிய அறிமுகக் குறிப்பும் மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் அவர்களது ஆர்ப்பாட்டமில்லாத கலைச் சேவைக்குக் கிடைத்த இன்னொரு சுருக்கமான கட்டியம் என்று கூறலாம். 'எண்ணிலாக் குணமுடையோர்' - இம்முறை நகைச்சுவையுடன் வாழ்வியலைக் கலந்து தந்து, எனது பழைய அனுபவங்களை மீட்டிற்று. டொமினிக் ஜீவா என்ற பெயரில் ஓர் ஓவியர் இருக்கிறார் என்ற செய்தி இப்போது தான் தெரிந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து அ. யேசுராசா அவர்கள் தெரிவித்த கருத்துகள் மிக பயனுள்ளவை. மிக்க நன்றி! எனது பழைய ஞாபகக் குறிப்பிலிருந்தே அந்த மேற்கோளை எடுத்தாண்டேன். ஏறத்தாழ 23 வருடங்களுக்கு முன்பு படித்த நூல் ஒன்றிலிருந்து வெறும் ஞாபக சக்தியை அடிப்படையாக வைத்தே அவ்வரிகளை எழுதினேன். மன்னிக்க.

- கெகிறாவ ஸஹானா

(2) நானும் ஒரு படைப்பை உருவாக்கத் தூண்டியது எங்கள் சமூகம் தான். மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்த எனக்கு பெற்றோரால் கடந்த ஐந்தாறு வருடமாக கரவெட்டியில் வாழ இசைவாக்கமடைந்தேன். எழுத்துலகில் மங்காப் புகழ் பெற்ற டாக்டர் ச. முருகானந்தன் மாமாவின் தீவிர ரசிகை. சாதிகள் தலைதூக்கி தாண்டவமாடும் எமது கிராமத்தில் இதனை எவ்வாறு ஒழிப்பது எனத் திட்டம் தீட்டுவேன். அவ்வேளை தெணியான் ஆசிரியரின் படைப்புக்கள் என்னைக் கவர்ந்தன மட்டும் அல்ல. வழியையும் காட்டி நின்றன. அத்துடன் தாங்கள் இரண்டாம் ஆண்டு நிறைவு மலரில் படைத்த 'பொய் முகங்கள்' அற்புதம். இதனை நானும் கண்கூடாகப் பார்த்துள்ளேன்.

- ம.விஜிதா *(கரவெட்டி)*

(3) ஜீவநதியின் உள்ளடக்கங்கள் பெரும்பான்மை இளத்தலைமுறையினை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பது அதன் தனித்துவத்தைப் பிரதிபலிப்பதோடு அதிகமாக இளந்தலைமுறையினரின் படைப்புக்கள் பிரசுரிக்கப்படுவதும் அதன் சிறப்பையே உணர்த்தி நிற்கிறது. மல்லிகை, ஞானம் போலல்லாது மூத்த படைப்பாளிகளுக்கு முன்னுரிமை வழங்கி வளர்ந்துவரும் இளந்தலைமுறையினருக்கு இரண்டாமிடம் என்ற நிலையை மாற்றி இரு சாராருக்கும் சம இடத்தை வழங்கிவருவதும் ஜீவநதியின் சிறப்புக்களேயாகும். இத்தகைய இளந்தலைமுறையினரின் படைப்புக்களை வெளிக்கொணர ஜீவநதி முழு மூச்சாக நின்று செயற்படுமேயானால் எம் போன்ற இலக்கிய ஆர்முள்ளவர்கள் அதனோடு கைகோர்த்து, தோளோடு தோள் நின்று எம்மாலாகிய முயற்சிகள் அனைத்தையும் செய்வதற்கு முடியாமல் போனாலும், ஜீவநதியின் வளர்ச்சிக்கு ஓரளவாவது துணை நிற்போம்.

- பேருவளை நபீக்மொஷீன்

(4) வண்ணச் சிறகுகளுடன் இன்னொளி வீசி உலா வருகின்ற பூரண சந்திரனைப் போன்று வளர்ச்சி உற்று நமது நாட்டில் பிரகாசித்துள்ளாய். இந்த பிரகாச ஒளியானது நமது தலைமுறையினர்க்கு ஓர் வரப்பிரசாதம். உன்னை வரவேற்க எத்தனை இலை மறைகாயாக இருக்கும் கலைஞர்கள் எதிர் பார்ப்புடன் காத்திருக்கின்றனர். இன்னும் புதுப் பொலிவுடன் உலகமெங்கும் நீ பரிணமிக்க எனது வாழ்த்துக்கள்.

- டென்சி *(துன்னாலை)*

(5) ஜீவநதியின் வளர்ச்சி மகிழ்ச்சி தருகிறது. அதன் புதிய தோற்றத்துடன் ஆசிரியர் குழுவிவில் மாற்ற மேற்பட்டிருப்பதையும் அவதானித்தேன். ஆனால் அட்டையின் அமைப்பை மேலும் மாற்றலாமே என்று எண்ணினேன். திரு.அ.யேசுராசா அவர்களின் திறமை அனைவரும் அறிந்ததுதான். ஆனால் இவ்வளவு விடயங்களையும் வாசித்து, நினைவில் வைத்து, அவை பற்றிய கட்டுரைகளில் அவை பற்றிக் குறிப்பிடப்படும் போது அத்தவறைக் கண்டுபிடிப்பதைப் பார்ந்த நான் அவரே தான் அறிந்தவற்றையெல்லாம் எழுத்தில் வடித்து எமக்குத் தந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்குமெனச் சிந்தித்தேன். அவரிடமிருந்து அத்தகைய கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம். தவறுகளைமட்டும் கட்டிக்காட்டுவதாகக் கட்டுரை அமையும் போது இதமாகத் தெரியவில்லை. கட்டுரைகள் அனைத்தும் நன்றாக இருக்கின்றன. குறிப்பாக ஈழநாடு சிறுகதைகள் (தொகுதி -1) ஓர் அறிமுகக்குறிப்பு கட்டுரையை விரும்பி இரசித்தேன். ஏன் தெரியுமா? ஏற்கனவே இத்தொகுதி பற்றிய ஒரு கட்டுரையை வாசித்திருந்தேன். கலாநிதி கலாமணி அவர்களும் அதை வாசித்திருக்க வேண்டும். அதுபற்றிக் குறிப்பிடாமலே சாதுரியமாக அதுபற்றிய கருத்துக்களை அவர் எழுதியிருக்கும் பக்குவம் அவரது திறமையையம் முதிர்வையும் காட்டுகிறது.

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரன் எலக்ரிக்கல்

இங்கு சகல விதமான
மின்சார உபகரணங்களையும்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக் கொள்ளலாம்





## Orange Electricals

இற்கு நாம்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்



**Distributors of all Kinds of
Orange electrical accessaries
all Kinds of Electrical Equipment**

100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Tel : 021 2228772
021 2224505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் சதாபொன்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.